யாழ்நகரில்
தரமான
A/L
விஞ்ஞானக் கல்விக்கு
என்றும்
New Master
Institute
B.M.C. Lane, JAFFNA

# சஞ்சீவி

விலை ரூ 2/-

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

A/L 88
விஞ்ஞான
வகுப்புக்கள்
Iம், IIம் பிரிவுகள்
நடைபெறுகின்றன
II'ம் பிரிவு
ஆரம்பமாகின்றது
விபரங்கட்கு:
New Master
Institute
B M C. Lane, JAFFNA.

மலை:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு வைகாசி மீ 31 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1406 ஷவ்வா பிறை 05 (14-06-1986) SANJEAVY- R\GENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 21

காட்டுக்குள் அழைத்துச் சென்று

# 19 தமிழ் அகதிகள்

# மூதூரில் சுட்டுக்கொலை

## கூடச் சென்ற இரு முஸ்லிம் அதிகாரிகளும் மடிந்தனர்

மட்டக்களப்பு, ஜூன் 14

மூதூரில் உள்ள மஹிந்தபுரத்தில் தமிழ் அகதிகள் 19பேர் சிருடையினரால் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர். அவர்களுடன் கூடச் சென்ற இரண்டு கிராமசேவையாளரும் கொலையுண்டனர்.

சேருவில என்ற இடத்தில் இருந்து பொருள்கள் வாங்கி வந்த வழியில், அகதிகளும் அதிகாரிகளும் காட்டுக்குள் அழைத்துச் செல்லப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர்.

கடந்த வியாழக்கிழமை நண்பகல் அளவில் நடைபெற்ற இப்பயங்கரச் சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது;

கடந்த ஆண்டு மூதூரில் இடம்பெற்ற வன்செயல்களைத் தொடர்ந்து அகதிகளான தமிழ் மக்கள் மூதூர், மட்டக்களப்புப் பகுதிகளில் உள்ள அகதி முகாம்களில் தங்கி உள்ளனர்.

அப்படி மட்டக்களப்பு வாகரை அகதி முகாம்களில் தங்கியிருந்த தமிழ் அகதிகள் சிலர் மூதூரில் ஈச்சிலம்பத்தையில் உள்ள பூநகர், கமத்தொழிற் சேவை நிலையம் ஆகிய அகதி முகாம்களுக்கு அண்மையில் இடமாற்றம் செய்யப்பட்டிருந்த

(8ஆம் பக்கம் பார்க்க)

### போக்குவரத்து சீரடைந்தது

யாழ்ப்பாணம், ஜூன் 14

கிளிநொச்சி இராணுவ பொலிஸ் கூட்டு முகாம் முன்பாக உள்ள வீதியால் போக்குவரத்துச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த இரண்டு நாட்களாக எவ்வித இடையூறும் இன்றி இந்தப் போக்குவரத்துக்கள் நடைபெறுகின்றன.

குண்டு வெடிப்பினால் வீதிகளில் ஏற்பட்டிருந்த குழிகள் மூடப்பட்டுள்ளன

(உ-10)

## 2 மொட்டைத் தலையர் நகரில் ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஜூன் 14

மொட்டை அடிக்கப்பட்டு ஒருபக்க மீசையும் வழிக்கப்பட்ட இரண்டு சாமியார்கள் "இனி மேல் களவு செய்யமாட்டோம்" எனக் கூறிய படி நேற்று யாழ் பஸ் நிலையத்தில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்த இரண்டு சாமியார்களும் நீர்வேலி, கோப்பாய் பகுதிகளுக்கு சென்று தாங்கள் பெரிய சாமியார்கள் என்றும்—

பிள்ளைப் பாக்கியமற்றவர்களுக்கு கடவுள் மூலம் குழந்தைப் பாக்கியம் தர முடியும் எனக் கூறி பல வீடுகளில் பல ஆயிரம் ரூபா பணம் சம்பாதித்துள்ளார்கள் என்றும்—

இதனையறிந்த இளைஞர் கோஷ்டியினர் இவர்கள் இருவரையும் மடக்கிப் பிடித்து மொட்டை அடித்து ஒரு பக்க மீசையையும் வழித்து ஊர்வலமாக அழைத்துச் சென்றனர் என்றும் கூறப்படுகிறது.

(உ-10)



எந்த நாட்டிலும் உரிமைப்போராட்ட காலத்தில் கருத்து மறுமலர்ச்சி, இலக்கிய மறுமலர்ச்சி ஆகியன தாமாக முளை விடுவதுண்டு. அதனை நாம் இப்போது ஈழத்தில் காண்கிறோம்.

அந்த வகையில், சில காலம் வடக்கில் குறைந்திருந்த புத்தக வெளியீடுகள் மீண்டும் புத்துயிர் பெற்று வருகின்றன.

சென்ற வாரம் 'மல்லிகைப் பந்தலி'ல் மலர்ந்த நூல் வெளியீட்டுவிழாவில் பேராசிரியர் கா. சிவத்தம்பி, கலாநிதி எம். கே. முருகானந்தம் ஆகியோர் உரையாற்றுவதையே மேலே காண்கிறீர்கள்.

## வவுனியாவில் தேடுதல் பத்துப் பேர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 14

வவுனியாவில் நேற்று ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆயுதப்படையினர் கவச வாகனங்கள் சகிதம் தச்சன்குளம், பண்டாரிக்குளம் பகுதிகளை சுற்றிவளைத்து சல்லடை போட்டுத் தேடுதல் நடத்தினர்.

முகமூடியணிந்தவர்களை கிராமம் கிராமமாக அழைத்துச் சென்ற சிப்பாய்கள் பத்துப் பேரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்களும், தபால் நிலைய உத்தியோகத்தர்களும் அடங்குவர்.

இதே சமயம் வியாழனன்று வவுனியா வெளிக்குளம் என்ற இடத்தில் சீருடையணிந்த சிப்பாய்கள், வீதியால் வந்து கொண்டிருந்த பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களைத் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

மீண்டும் நேற்று இதே இடத்திற்குச் சென்ற சிப்பாய்கள் வெளிக்குளம் மகா வித்தியாலயத்தில் சில துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தனர் என்று சொல்லப்படுகின்றது.

அந்தப் பிரசுரத்தில் தமிழ் ஆசிரியர்களை எச்சரிக்கும் வாசகங்கள் இருந்ததாக அறியப்படுகிறது

சிவப்பு நிறத்திலான இப் பிரசுரத்தில் மண்டையோடுகளும் எலும்புக் கூடுகளும் சின்னமாக பதிக்கப்பட்டிருந்தன

(உ-6)

## லயனல் பாதுகாப்பு ஆணையாளர்?

கொழும்பு, ஜூன் 14

யாழ்ப்பாணத்தின் முன்னாள் அரச அதிபர் லயனல் பெர்னாண்டோ குண்டு வெடிப்புக்களைத் தடுத்து நிறுத்துவதற்கான சிவில் பாதுகாப்பு ஆணையாளராக நியமிக்கப்படலாம்

இப்படி கொழும்பு அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின.

திரு. லயனல் பெர்னாண்டோ யாழ்ப்பாணம், திருமலை அரச அதிபராக பணியாற்றியவர்.

(உ-எ)

கருத்துக் கலசம்

## பனை, மா முருங்கை

ஓர் இனிப்பான செய்தி. வடக்கில் பனம் பானத்திற்குப் பெரும் மவுசு ஏற்பட்டிருப்பதாக உதயனில் வெளிவந்த செய்தி.

கொழும்பில் இருந்து இப்போது பல பாவனைப் பொருள்கள் வடக்கே வருவதில்லை. அடுப்பு எரிக்க உதவும் காஸ் வருவதில்லை. வாகனம் செலுத்த உதவும் பெற்றோல், டீசல் வருவதில்லை குளிர்பானங்களும் வருவதில்லை

எல்லா விவகாரங்களிலும் நன்மையும் உண்டு தீமையும் உண்டு. பலர் தீமையாகத்தான் — பாதிப்பைத் தான் பெரிதாகப் பார்ப்பார்கள்:

குளிர்பான விடயத்தில் நாம் நன்மையான பக்கத்தைப் பார்க்க வேண்டும் குளிர்பானங்கள் இங்கு வராததால் பனம் பானத்துக்கு மவுசு ஏற்பட்டிருக்கிறது

வடக்கின் பிரதான வளங்களில் ஒன்று பனை வளம். பனையின் பலதரப்பட்ட பயன்களில் ஒன்று தான் பனம் பானம். அதனைத் தக்கபடி பயன்படுத்த ஒரு வாய்ப்பு உருவாகி இருக்கிறது.

அதுபோலவே பனையின் முழுப் பயன்களையும் நாம் பாவிக்கப் பழக வேண்டும். அது எமது தாயகத்தின் பொருளாதாரத்தைச் சீர் செய்ய உதவும்.

யாழ்ப்பாணத்துக் கனிகளில் ஒரு பருவத்தில் தாராளமாகக் கிடைப்பது மாம்பழம். யாழ்ப்பாணத்து மாம்பழம் ருசியானது. பெயர் பெற்றது. அந்த வளத்தையும் நாம் தக்கபடி பயன்படுத்தலாம்.

தாராளமாகக் கிடைக்கும் காலத்தில் மாம்பழத்தைப் பதனிட்டும், பானம் செய்தும் பொருளாதாரத்தை வளர்க்கலாம். சுதேசியத்தை மலர்விக்கலாம்.

அடுத்தது எமது முருங்கைக்காய். வீட்டுக்கு நான்கு முருங்கை நட்டால் அதனையும் ஓர் ஏற்றுமதிப் பயிர் ஆக்கலாம். அதனை எவ்வாறு செய்யலாம் என்பதில் எமது கவனத்தைச் செலுத்த வேண்டும்.

எமது இளைஞர்கள் பெற்றுத்தரப்போகும் அரசியல் சுதந்திரத்துக்குப் பொருளாதார சுதந்திரம் பக்கபலமாக வேண்டும்.

யார் சொன்னார் எம்மிடம் மூலவளங்கள் இல்லையென்று? இருக்கும் மூலவளங்களை நூற்றுக்கு நூறு நாம் பயன்படுத்துகிறோமா? அல்லது இனங்காணப்படாத மூலவளங்களைக் கண்டறிய முயற்சி செய்கிறோமா?

இனியும் கேள்விகளை அடுக்கும் காலம் இல்லை. பணம்படைத்தவர்களும், புத்திபடைத்தவர்களும் புறப்படுங்கள், செயற்படுங்கள். பொருளாதாரப்போர் தொடுங்கள். சுதேசியம் வளருங்கள்.

## சர்வகட்சி மாநாட்டில் மாகாண சபை யோசனைதான்!

### அழைப்புகள் அனுப்பப்பட்டன

கொழும்பு, ஜூன் 14

இரண்டாவது சர்வகட்சி மாநாட்டில் இலங்கை அரசு மாகாண சபை யோசனையைத் தான் சமர்ப்பிக்க உள்ளது.

இப்படி கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

சர்வகட்சி மாநாடு அங்குரார்ப்பணஞ் செய்யப்படும் திகதியான ஜூன் 25இல் மாகாண சபை யோசனையின் பிரதிகள், அரசியல் கட்சிகளிடம் கையளிக்கப்படும்.

ஜூன் 28இல் ரஷ்யா புறப்படும் ஜனாதிபதி ஜெயவர்த்தன 12 நாள் விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய பின்னர்தான், மாகாண சபை யோசனைகளை விவாதிப்பதற்காக சர்வகட்சி மாநாடு மீண்டும் கூடும்.

இதேவேளை சர்வகட்சி மாநாட்டுக்கான அழைப்பை கொழும்பில் உள்ள அரசியல் கட்சிகளுக்கு அரசாங்கம் அனுப்பிவிட்டது.

கொழும்பில் அரசியல் கட்சிகளுக்கு நேற்றே அழைப்புக்கள் கிடைத்து விட்டன.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் அரசு அழைப்பு அனுப்பியுள்ளது.

கூட்டணியினருக்கான அழைப்பு சென்னையில் உள்ள உதவி இலங்கைத் தூதர் மூலம் அனுப்பப்பட்டதாகத் தெரியவருகிறது.

(உ-எ-2)

## மண்டைதீவில் சிப்பாய்கள் குவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 14

யாழ் குடாநாட்டில் உள்ள மண்டைதீவு இராணுவ முகாமில் அதிரடிக் கொமாண்டோ படைகள், இராணுவ கொமாண்டோப் படைகள், கறுப்புச் சீருடையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பில் இருந்து இரண்டு பாரிய கப்பல்களில் வந்த சிப்பாய்கள் ஹெலிகொப்டர்கள் மூலமாக மண்டைதீவில் தரையிறக்கப்பட்டுள்ளனர்.

இன்றும் மேலும் பல படை வீரர்கள் மண்டைதீவு இராணுவ முகாமிற்குக் கொண்டு வரப்படுவர் எனத் தெரிய வருகிறது.

நன்கு பயிற்றப்பட்ட நான்கு உயரதிகாரிகளும் வந்து சேர்ந்ததாக அறிய வருகிறது.

மண்டைதீவு இராணுவ முகாமைச் சுற்றி இரண்டு பாரிய கப்பல்கள் நிலை கொண்டுள்ளன

இவற்றைச்சுற்றி சிறிய பீரங்கிப் படகுகளும் பாதுகாப்பு வழங்கி நிலை கொண்டுள்ளன.

இக் கப்பல்களில் இருந்து முகாமிற்குத் தேவையான முக்கிய பொருள்கள் உட்பட பல ஜெனரேட்டர்கள், உணவு வகைகள் ஆகியவையும் ஆயுதங்களும் வந்து இறங்கியுள்ளன.

(உ-10)

## இலங்கையின் எல்லை ஜனாதிபதி மாளிகையில் சிறிமாவோ கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 14

இலங்கையின் எல்லை ஜனாதிபதி மாளிகை வரை வந்து விட்டது. இனியாவது பதவியை ராஜினாமாச் செய்து விட்டு வெளியேறும்படி இறைவன் பேரால் கேட்கிறேன்

இப்படி சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி. சிறிமா பண்டாரநாயக்கா வேண்டுகோள் விடுத்தார்.

ஹக்மன என்னும் இடத்தில் நடந்த சுதந்திரக்கட்சிப் பொதுக் கூட்டத்தில் திருமதி பண்டாரநாயக்கா பேசினார்.

அவர் மேலும் சொன்னதாவது;

நாடு இக்கட்டான நிலையில் உள்ளது. வாழ்வா, சாவா என்ற நிலையில் மக்கள் வாழ்கின்றனர்.

எந்த நேரமும் மக்களின் பாதுகாப்புக்கு ஆபத்துத்தான்.

திரு. ஜெயவர்த்தனவால் இனியும் பதவியில் நீடிக்கமுடியாது. பதவியில் இருந்து வெளியேறும்படி திரு. ஜெயவர்த்தனவை இறைவன் பேரால் வேண்டுகிறேன்.

இப்படி திருமதி. பண்டாரநாயக்கா சொன்னார்.

(உ-எ-2)

## சுதந்திரக் கட்சி பங்குபற்றுது?

கொழும்பு, ஜூன் 14

ஜனாதிபதி ஜெயவர்த்தன கூட்டும் இரண்டாவது சர்வகட்சி மாநாட்டில் சுதந்திரக்கட்சி கலந்து கொள்ளாது என்று சொல்லப்படுகிறது.

கடந்த புதன்கிழமை உத்தேச சர்வகட்சி மாநாடு பற்றி சுதந்திரக் கட்சித் தலைவர்கள் கூடி ஆராய்ந்தனர்.

மாநாட்டுக்கான அழைப்பு உத்தியோகபூர்வமாகக் கிடைத்ததும் முடிவு எடுக்கலாம் என்று அப்போது கருத்து வெளியிடப்பட்டது.

பெரும்பலான சுதந்திரக் கட்சித் தலைவர்கள், சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாது என்ற கருத்தையே கொண்டிருக்கின்றனர் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-எ-2)

### சுபநேரம்

14 6 1986
சனிக்கிழமை
சுபநேரம்:
2 53 முதல் 4 23 வரை
ராகுகாலம்:
8 53 முதல் 10 23வரை
இவை பகலுக்கும்
இரவுக்கும் பொருந்தும்

## திருமலையில் 150 தமிழர் கைது!

திருகோணமலை, ஜூன் 14

திருகோணமலை நகரில் பெரியகடைப் பகுதியில் பாதுகாப்புப் படையினர் தேடுதலில் நேற்று ஈடுபட்டனர்.

இதுவரை சுமார் 150 தமிழர் வரை நேற்று விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

திருமலை நகரில் நேற்று இரவு 7 மணி முதல் ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வந்தது.

இன்று காலை 5 மணி வரை ஊரடங்குச்சட்டம் அமுலில் இருந்தது.

(உ-எ)

## தமிழ் அமைப்புகளுடன் பேச்சுகள் நடத்த இடதுசாரிகள் மறுப்பு

கொழும்பு, ஜூன் 14

தமிழ்நாடு சென்று தமிழர் அமைப்புக்களுடன் பேச்சுக்கள் நடத்த கம்யூனிஸ்ட் கட்சியும் லங்கா சமசமாஜக் கட்சியும் மறுத்து விட்டன

இதனிடையில் திரு விஜயகுமாரணதுங்கவுடன் தமிழநாடு செல்வதற்கு இலங்கை மக்கள் கட்சித் தலைவர் திரு. ரி. பி. இலங்கரத்னவும் மறுத்துவிட்டார்.

தமிழர் அமைப்புக்களுடன் பேச்சுக்கள் நடத்துவதற்கு ஏற்ற சூழ்நிலை இது அல்ல என்பதே கம்யூனிஸ்ட் கட்சியும் லங்கா சமசமாஜக் கட்சியும் கூறும் காரணங்களாகும்.

இந்த நிலையில் மக்கள் கட்சியின் பொதுச் செயலாளர் திரு விஜயகுமாரணதுங்க தனியாகவே ஜூலை 19 இல் தமிழ்நாடு செல்ல முடிவு செய்துள்ளார்.

திரு விஜயகுமாரணதுங்க அரசியல்வாதி மட்டுமல்ல, பிரபல சிங்களத் திரைப்பட நடிகரும் கூட என்பது குறிப்பிடத்தக்கது.

(உ-எ-2)

## தமிழ் ஈழத்தை தவிர வேறு எதையும் மக்கள் ஏற்கார்

### பிரபா பேட்டி

நியூயோர்க், ஜூன் 13

தமிழ்ஈழத்தைத் தவிர வேறு எந்தத் தீர்வையும் தமிழ் மக்கள் ஏற்பார்கள் என்பது சந்தேகமே.



பிரபா

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அமெரிக்காவின் 'டைம்' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்.

நாங்கள் மக்களுக்காகவே போராடுகிறோம். தமிழ்ஈழத்தைத் தவிர வேறு எந்தத் தீர்வையும் தமிழ் மக்கள் ஏற்பார்கள் என்பது சந்தேகமே.

மாற்றுத் தீர்வு எதிலும் மக்கள் திருப்தி கண்டால் நாங்கள் அது பற்றிக் கருத்திற்கொள்வோம்.

திரு பிரபாகரன் மேற்கண்டவாறு அந்தப் பேட்டியில் தெரிவித்துள்ளார்.

(உ-எ-2)

## இந்தியா கோரியுள்ள விளக்கம்

கொழும்பு, ஜூன் 14

இந்தியா மேலதிக விளக்கங்கள் கோரியுள்ள விஷயங்களில் வடக்கு-கிழக்கு இணைப்பும் உள்ளது.

இப்படி கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலதிக விளக்கங்கள் கோரப்பட்டுள்ள ஏனைய இரண்டு விஷயங்கள் காணியும் சட்டம்-ஒழுங்கு பராமரிப்புமே

(உ-எ-2)

## மன்னாரில் 26 பேர் சுட்டுக் கொலை

### ஹெலியிலிருந்து சூடு

கொழும்பு, ஜூன். 14

மன்னார் பரப்புக்கடந்தான் மாந்தைப் பகுதியில் ஈ. எல். எவ் வான்களில் வந்த பயணிகள் மீது ஹெலிக்கொப்டரிலிருந்து நடத்தப்பட்ட தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று நடந்தது.

உயிரிழந்தவர்கள் போராளிகள் என பாதுகாப்பு அமைச்சு அறிக்கை ஒன்று தெரிவித்தது.

ஹெலிக்கொப்டர் ஒன்றின் மீது போராளிகள் தாக்குதல் நடத்த முயன்றதாகவும்—

ஹெலிக்கொப்டரிலிருந்து நடத்தப்பட்ட பதில் தாக்குதலில் 26 போராளிகள் உயிரிழந்ததாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

உயிரிழந்தவர்கள்வான்களில் பயணம் செய்த அப்பாவிப் பொதுமக்கள் என மீண்டும் கிடைத்த செய்தி ஒன்று தெரிவித்தது.

(உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர்க் கடலினிலே!

வாழ்வின் ஒளிகாண
"தூய ஒளிப்" படகினிலே
நீர் சென்றீர்—
மீனுக்கு வலை விரித்தீர்
ஆனால் நீங்கள்
மாபாதகரின்
வலையினிலே வீழ்ந்தீரே!
கடலினிலே
நீர் சென்றீர்—எம்மைக்
கண்ணீர்க்
கடலினிலே தவிக்க விட்டீர்!
கடல் நீராய்க் கசக்கின்ற
செய்தியதும்—
நன்நீராய் மாறிவிடும்
என்று உரைக்கின்ற
ஒளி தோன்றி—
உண்மைக்கு உயர்வுதரும்!

நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்

# தடிமன் வந்தால் என்ன செய்வீர்கள்?

## இதோ சில சிகிச்சை முறைகள்

காற்றுமண்டலத்தில் நம் உடல் நலத்திற்குத் தீமை செய்யும் கிருமிகள் கோடிக்கணக்கில் உள்ளன. சீதோஷ்ண நிலையைப் பொறுத்தும் அக்கிருமிகள் பெருகவோ குறையவோ செய்கின்றன. அவற்றில் ரைனோ வைரஸ் என்ற நுண்ணுயிர்க் கிருமிகள் தான் நாம் சுவாசிக்கும் போது மூக்கு, வாய் வழியாக சுவாசக்குழலை அடைந்து தடிமன் பிடிக்கக் காரணமாகிறது.

அழையாத விருந்தாளிகளாக நம் உடலுக்குள் புகுந்து கொண்ட இக்கிருமிகளை எதிரிகளாகப் பாவித்து நம் இரத்தத்தில் உள்ள வெள்ளை அணுக்கள் 'இண்டர்பிரான்' என்ற எதிர்ப்புச் சக்தி வாய்ந்த புரோட்டீனை உற்பத்தி செய்து விரட்டுகின்றன.

வைரஸ் கிருமிகளுக்கும் இன்டர்பிரானுக்கும் நடக்கும் போராட்டத்தில் வைரஸ் கிருமிகள் வெற்றி பெற்று நம் சுவாசக்குழலின் எல்லாப் பகுதிகளையும் ஆக்கிரமித்துக் கொள்கின்றன. அதன் பிறகு மூக்கில் ஆரம்பித்துச் சுவாசக் குழலின் அடிப்பாகம் வரை உள்ள செல்களைத் தின்று ஆரம்பிக்கின்றன.

அதனால் தான் தடிமனின் ஆரம்ப அறிகுறிகளாகத் தும்மல், தொண்டைக் கமரல், இருமல் ஆகியவை வருகின்றன. அதற்குப் பிறகு மூக்கில் உள்ள வாசனை நரம்புகளின் நுனிப்பகுதிகளையும் அவை உணவாக உட்கொள்வதால் தடிமன் பிடித்தவர்கள் வாசனையை அறியும் தன்மையைத் தற்காலிகமாக இழக்கிறார்கள்.

அடுத்து இரண்டு மூன்று நாட்களுக்கு வைரஸ் கிருமிகளின் அட்டகாசம் தொடர்கிறது. இதனால் காய்ச்சல் வருகிறது. இருமல் அதிகமாகிறது. இச்சமயத்தில் நம் சுவாசப் பாதையில் இறந்து போன செல்களும் சில அசுத்தங்களும் சேர்ந்து (7ஆம் பக்கம் பார்க்க)

# தமிழரை விட்டு தூரச் செல்லக் கூடாது

# இந்தியாவும், ராஜீவும்

## 'நியூஸ் ருடே' புத்திமதி

இறைவன் பதில் அளிப்பது இல்லை; அமைதியாகத் தீர்மானம் மட்டுமே எடுப்பார்.

இளம் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி இறைவனாக இல்லாவிட்டாலும், அரசியல் வட்டத்திற்கு வெளியே அவர் ஒரு கதாநாயகனாகத் (Hero) தான் கருதப்படுகிறார்.

இலங்கையில் இடம் பெற்றுவரும் வெறுக்கத்தக்க நிகழ்ச்சிகள் குறித்து கவனம் எடுக்க வேண்டிய தருணம் பிரதமர் ராஜீவ் காந்திக்கு வந்து விட்டது

இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள திட்டமிடப்பட்ட அரச பயங்கரவாதம் பற்றி பிரதமர் தீவிர கவனஞ் செலுத்த வேண்டும்.

இராணுவம் அப்பாவித் தமிழர்களைக் கொல்வதை பிரதமர் பகிரங்கமாகக் கண்டிக்க வேண்டும்.

தமிழரின் நல்லெண்ணத்தைப் பணயம் வைத்து இலங்கை அரசின் நல்லெண்ணத்தைச் சம்பாதிக்க வேண்டும் என்ற கொள்கையினால் பலன் எதுவும் ஏற்படப் போவது இல்லை. இதை பிரதமர் ராஜீவ் காந்தி உணரவேண்டும்.

பிரதமர் இனியும் தமிழரை விட்டு தூரச் செல்லக் கூடாது.

தீங்கு செய்தாகி விட்டது. மேலும் தீங்கு விளைவிக்கக் கூடிய நடவடிக்கைகளை தவிர்க்க வேண்டிய காலம் வந்துவிட்டது

இந்தியாவின் பலனளிக்காத நடவடிக்கைகள், 'இந்தியாவால் கைவிடப்பட்ட' உணர்வை மிதவாதத் தமிழ்த் தலைவர்கள் மத்தியில் ஏற்படுத்தி உள்ளது.

1983 ஜூலையில் இந்திரா காந்தி விடுத்த அறிக்கையை அவர்கள் மீண்டும் நினைவுபடுத்துகின்றனர்

அப்பாவித் தமிழர் கொல்லப்படுவதை இந்தியாவினால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்று அச்சமயம் இந்திரா காந்தி சொன்னதை நினைவு படுத்துகின்றனர்.

ராஜதந்திரம் பற்றி தெரியாதவர் அல்லர் இந்திரா காந்தி.

இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையில் அவர் தலையிடவில்லை. இலங்கைப் பிரச்சினையின் எதிரொலி, இந்திய அரசியலையும், மக்களின் அபிப்பிராயத்தையும் பாதிக்கும் என்பதுபற்றியே இந்திராகாந்தி கவலைப்பட்டார்

இந்தியாவின் தற்போதைய அரசாங்கம் காட்டிய நல்லெண்ணத்தைப் பயன்படுத்தி கிழக்கு மாகாணத்தின் இன விகிதாசார அமைப்பையே மாற்றும் திட்டம் ஒன்றை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது.

முதலில் தமிழ் முஸ்லிம்களுக்கும் இந்துத் தமிழர்களுக்கும் இடையே மோதலை ஏற்படுத்தியது இலங்கை அரசு. பின்னர் ஊர்காவல் படை என்ற பெயரில் குண்டர்களை அனுப்பி தமிழர்களை அவர்கள் பிறந்த மண்ணில் இருந்து விரட்டி அடிக்க வைத்தது

அகதிகள் என்ற போர்வையில் இருபத்தைந்து சதுரமைல் பிரதேசத்துக்குள் தமிழர்கள் ஒதுக்கப்பட்டனர். 'சைகை' கொடுத்தவுடன் துருப்புகளும் குண்டர்களும் இம்மக்கள்மேல் காட்டுமிராண்டித்தனத்தைக் கட்டவிழ்த்துவிடத் தயாராக உள்ளனர்.

இராணுவநடவடிக்கைகள் யாழ்ப்பாணத்தைத் தற்போது நோக்கியுள்ளன.

மேற்கு நாட்டுப் பத்திரிகைகளின்படி துப்பாக்கி பொருத்தப்பட்ட ஹெலிக்கொப்டர்களும் விமானங்களும் ஈவிரக்கமின்றி அப்பாவித் தமிழர்கள்மீது தாக்குதல் நடத்துகின்றன.

இறந்தவர்கள் எரிக்கப்படுகின்றனர். அதுபற்றிய சரியான கணக்கு எதுவும் தெரியவில்லை என்று பிரிட்டிஷ் நாளிதழ் 'கார்டியன்' தெரிவித்துள்ளது.

இனக்கொலையில் கொழும்பு அரசு ஈடுபட்டுள்ளதை முழு இராணுவ நடவடிக்கையும் வெளிப்படையாக எடுத்துக்காட்டுகிறது.

சொந்தநலன், நியாயம் இவற்றுக்கு அப்பாற்பட்ட முறையில் ஆசிய ஹிட்லருடன் நல்லெண்ணத்தை வளர்க்க வேண்டும் என்ற பிழையான கொள்கையே இப்படியான பயங்கர நிலையை இலங்கையில் உருவாக்கியுள்ளது. இதை புதுடில்லி உணரவேண்டும்.

> சென்னையில்இருந்து வெளியாகும் ஆங்கில நாளிதழ்களில் "நியூஸ் ருடே" யும் ஒன்றாகும். இலங்கை இனப்பிரச்சினை பற்றி 'நியூஸ்ருடே' கடைசியாக எழுதிய ஆசிரியர் தலையங்கம் தமிழாக்கம் செய்யப்பட்டு இங்கு பிரசுரமாகின்றது.

# அரசாங்க அலுவலகங்களில்

"சிகதி"

## சட்ட விரோத மின் இணைப்பு

திணைக்களங்களில் பொதுமக்கள் தங்கள் நாளாந்தக் கருமங்களை செய்விப்பதில் ஏற்படும் தமதம் தான் அவர்களுக்கு அதிருப்தியை உண்டுபண்ணுகிறது என்பது அரச அதிகாரிகளுக்குத் தெரியாத விடயம் அல்ல. ஆனால் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டால் இப் பிரச்சினைகள் தீரவழி நிறைய உண்டு பொது மக்களின் குறைபாடுகளை விசாரனை செய்ய ஒரு தனிநபர் ஆணைக்குழு நிர்ணயிக்கவேண்டுமென கருத்துக்கள் வெளியிடப் பட்டன. அவை செயற்பாட்டுக்குச் சரியான முறையில் வரவில்லை

★

கிராமப் பகுதியில் மின்கம்பம் சரிந்தால் அல்லது முறிந்தால அல்லது அதற்கான சாத்தியக்கூறுகள் தென்பட்டால் அப்பகுதி மாவட்ட உப அலுவலகத்திற்கே முறைப்பாடு செய்தல் வேண்டும். ஒரு சம்பவத்தை ஒரு வரியிறுப்பாளர் தனது பகுதி உப அலுவலகத்திற்கு கடிதம் மூலம் முறைப்பாடு செய்தார். பொறுப்புள்ளஅச் சபை அதனை யாழ் செயலகத்திலுள்ள தங்களது தலைமைத் திணைக்களத்திற்கு அனுப்பியது பின்னர் தலைமைத் திணைக்களம் உபசபையை அவ்விடயத்தை விசாரித்து அறிக்கை ஒன்றினை சமர்ப்பிக்கும்படி பணித்திருந்தது ஆனால் தலைமைத் திணைக்களம் வரியிறுப்பாளர் எழுதிய கடிதத்தை உப-சபைக்கு அனுப்புவதற்கு பதிலாக முறைப்பாடு செய்தவருக்கே அனுப்பி இருந்தது இப்படி எத்தனை? முத்திரைக்கு தட்டுப்பாடான இச் சமயத்தில் அவர் அதனை மீண்டும் யாழ். செயலகத்திற்கு அனுப்ப வேண்டி இருந்தது.

★

இன்று தபால் நிலையங்களில் காசுக்கட்டளைகளின் பணத்தை பெறுவதற்கு பலர் கஷ்டப்படுகின்றனர். இவற்றினை உரிய முறையில் செயற்படுத்த தபால் திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் அல்லாவிட்டால் மாற்று ஒழுங்குகள் மேற்கொள்வது நல்லது. வயது தளர்ந்த நிலையில் மாதாந்தம் அரச உதவி பெறுபவர்கள் கூட பலமுறை தபால் நிலையங்களுக்குச் செல்ல வேண்டிய பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது.

★

ஒய்வூதியம் வழங்குவதில் தாமதம் ஏற்படும் என்பது பத்திரிகைச் செய்தி ஆனால் பொது மக்களுடன் தொடர்புள்ள நிலைப்பாடுகள் ஏற்படும்போது குறிப்பிட்ட திணைக்களங்கள் பத்திரிகைச் செய்தியுடன் நின்று விடுகின்றன ஆனால் அவர்கள் அதனை தாங்கள் ஓர் அறிவித்தல் மூலம் பத்திரிகைகளில் பிரசுரிப்பது வரவேற்கக்கூடியதொன்றாகும். அண்மையில் சில திணைக்களங்கள் இடம்பெயர்ந்தன. ஆனால் அறிவித்தல்கள் இல்லை.

★

சட்டவிரோதமாக உபயோகிக்கும் மின் இணைப்புக்களை சட்டத்திற்கு உட்படுத்துமாறு கோரி அண்மையில் மாவட்ட அபிவிருத்திச்சபை உதவிக் காரியதரிசி வேண்டுகோள் ஒன்றினை விடுத்திருந்தார். இதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பினையும் நாடி இருந்தார். இதனை சட்டத்தை மதிக்க பழகிக் கொண்ட அனைவரும் கருத்திற்கொள்வது அவசியமாகும் இதனால் பலருக்கும் நன்மை உண்டு.

# கிளிநொச்சி அனுபவித்த யுத்தத்தின் விளைவுகள்!

## மக்கள் வெளியேறினர்; கிராமங்கள் வெறிச்சோடின

அன்று! புதன் கிழமை - 1986 ஜூன் மாதம் 4 ஆம் திகதி. வானத்தில் இருள் அகன்று நிலம் தெரியும் நேரம்.

மக்கள் அரைகுறை உறக்கத்தில் ஆழ்ந்திருந்த நேரம்

"டும்"! - கிளிநொச்சி நகரை கிடுகிடுக்கும் வண்ணம் பாரிய குண்டொன்று வெடித்தது

பரவாயில்லை!! வழமையாக கேட்கும் வெடிச் சத்தங்கள் தானே என்று நினைத்து பெரியவர்களும், சிறியவர்களும் அடுத்த பக்கம் திரும்பிப் படுத்திருப்பர்.

ஆனாலும் நிற்கவில்லை குண்டுச் சத்தங்கள்......!

தொடர்ந்தன- அரை மணித்தியாலம் இல்லை, ஒரு மணி நேரமில்லை, மேலும் தொடர்ந்தன, சுமார் நூறு மணித்தியாலங்களாக, அதற்கும் மேலாக என்றுதான் சொல்லவேண்டும்.

புதன்கிழமை தொடங்கிய மோதல்கள், தாக்குதல்கள் இன்றுவரை முற்றாக முடியவில்லை. எப்பதான் முடியுமோ?

மக்கள் வேறிடம் தேடி - நகர்ந்தனர்!!

பசி; பட்டினி. விடில்லை; வேலை இல்லை மக்கள் திண்டாட்டம்.

காடுகளிலும், வீதிகளிலும், வீடுகளிலும் நிலைகுலைந்த சடலங்கள்.

காயமடைந்தவர்களுக்கு காடுகளும், மேடுகளும், கல்லுகளும் முள்ளுகளும் சொந்தமாகின. தஞ்சமளித்தன.

அப்பப்பா! என்ன கொடுமை என்ன பாவம் செய்தார்கள் இவர்கள்?

புதன்கிழமை அதிகாலை முழக்கமிட்டு வெடித்த குண்டினையடுத்து நகரின் பல பகுதிகளிலும் ஆங்காங்கே அவ்வப்பொழுது குண்டு முழக்கங்கள் அதிர வைத்தன.

படையினர் வெளியேற முடியவில்லை. எமது 'பொடியளும்'' விட்ட பாடில்லை.

அவ்வளவு அமர்க்களம்.

பத்து மணி இருக்கும் பறந்து வந்தது பச்சை நிற ஹெலிக்கொப்டர் ஒன்று. அது பருந்து போல் பறந்து பறந்து, சுழன்று சுழன்று, சுட்டது.

கீழே —

குழந்தைகள் குட்டிகள் பெண்கள், முதியவர்கள் என்று வேற்றுமையில்லாமல் எல்லோர் மீதும் பாய்ந்தன குண்டுகள்.

ஓடியது செங்குருதி. எழுந்தன ஓலங்கள்; அழுகைகள் அவலங்கள்.

ஓ! நடந்தது கொடூரம்! நடக்கப்போவதை நினைத்தார்களா?

அந்தோ! உயரத்தில், வானத்தில் தெரிந்த சிறகு விரித்த பொம்மர்கள் சீறிப் பாய்ந்து வந்தன.

ஒன்றன்கீழ் ஒன்றாக கதைத்துப் பேசி வந்த பொம்மர்கள், திசை மாறிப் பிரிந்தன.

சுழன்றன, பதிந்தன, எழுந்தன, சரிந்தன. மக்கள் நினைப்பார்களா அதுதான் வான சாகஸம் என்று? அதற்கு நேரந்தான் இருக்குமா?

வல்லூறுகளின் கண்களில் இருந்து கோழிக் குஞ்சுகள் தப்ப முடியுமா?

குதித்தன குண்டுகள்; வெடித்தன கட்டடங்கள்; எரிந்தன வீடுகள்; உடைந்தன. ஆலயங்கள்; பள்ளிக்கூடங்கள்.

எங்கும் புகைமண்டலம்.

வானில், ஓடும் கருமுகிற் கூட்டங்கள் தரையில் தோன்றி விட்டனவோ?

அந்த அளவுக்கு புகை மண்டலம் பிரமையை ஏற்படுத்தியது.

> கிளிநொச்சியிலிருந்து வந்த மக்களிடம் பேசி விவரங்களைத் திரட்டி எழுதியவர்
> க. இரத்தினராஜசிங்கம்

மேலே இருந்து போடப்படும் குண்டு. கீழே இருந்து ஏவப்படும் குண்டு எங்கும் குண்டு. எல்லாம் குண்டு

ஓ, இப்படித்தான் அன்று தொடர்ந்த குண்டுகளிலும். தொடர்கின்ற குண்டுகளிலும், கோழியின் இறகுகளுள் பதுங்கிய குஞ்சுகள் போல, அன்னையைத் தேடி அடைக்கலமாகின்றனர் ஐந்து பிள்ளைகள்.

நினைத்துப் பார்க்க இதயம் கூசுகிறது. அன்னையும் கதறுகிறாள். பிள்ளைகளும் கதறுகின்றனர் கதறல்கள் கேட்குமா, அக்கிரமக்காரர்களுக்கு?

சீறிவந்த கணை ஒன்று தென் ஓலைக் கூரையை வேகமாகத் துளைத்துச் சென்றது.

அன்னையை அணைத்த பிள்ளைகள் அலறுகிறார்கள். அன்னையை அணைத்த ஐந்து பிள்ளைகளின் நடுவே விழுந்து பயங்கரமாக வெடித்துச் சிதறுகிறது அந்த 'ஷெல்'.

பிள்ளைகள் பயங்கரமாய்- கோரமாய்- சிதறுகின்றனர். வீட்டுத்தரை எங்கும் துண்டங்கள் - சதைத் துண்டங்கள்.

ஐயோ! அழுகுரல்கள்!! அவல ஓலங்கள் !!!

ஐம்பது மாதங்கள் அன்னை தன் மடியில் சுமந்த செல்வங்கள்.

அவள் கண்முன்னே இன்று அந்தச் செல்வங்கள் சிதறிப் பறந்தனர்.

துண்டுதுண்டாய்... சதை சதையாய் எலும்பெலும்பாய் எங்கும் ஒரே இரத்தம்! ஆம் ஒரே இரத்தம்!!

ஆண்டவன் ஏன் இருக்கின்றான்?

தனது தலையில், மார்பில் ஓங்கி அடித்தபடி அவள் கேட்கும் கேள்வி இது.

யாரால் என்ன செய்ய முடியும்? யார் ஆறுதல் அளிப்பர்? எனது கண்ணில் நீர்த்துளிகள் பனிக்கின்றன!

-அக! முதலாவது நாள் நாடகம் எவ்விதமான ஒத்திகைகளுமின்றி அரங்கேறி முடிந்தது.

அடுத்த நாள் இரவு- பகல் தரையில் துப்பாக்கி [illegible] (7ஆம் பக்கம் பார்க்க)

# புதுமை செய்யும் வரம்பெற்ற புனிதர் அந்தோனியார்

அகிலமெங்கும் சகல இனத்தவரும், சகல மதத்தவரும், சகல மொழியினரும் சென்று வணங்கும் புனித ஸ்தலங்களுள் புனித அந்தோனியார் ஆலயங்கள் மிகவும் பிரபலமானவை.

அதேபோல் இலங்கையிலும் இன, மத வேறுபாடின்றி சகல சமயத்தவரும் வணங்கி, வரம் பெறும் ஆலயங்கள் புனித அந்தோனியார் ஆலயங்களே.

இலங்கையிலுள்ள கிறீஸ்தவ தேவாலயங்களில் கூடுதலானவை புனித அந்தோனியாரின் பெயர் கொண்ட ஆலயங்களே.

கத்தோலிக்க திருச்சபையானது ஜூன் 13 ஆம் திகதியை இப்புனிதரின் தினமாக சர்வதேச ரீதியாகக் கொண்டாடி வருகின்றன.

இப்புனிதர் 1196 ஆம் ஆண்டில் போர்த்துக்கல் நாட்டில் லிஸ்பன் நகரிலே பிறந்தார்.

இவர் 35 வருடங்கள் மட்டுமே இவ்வுலகில் வாழ்ந்தார். முதல் 10 வருடங்களையும் தன் பெற்றோருடன் கழித்தார். 15 வருடங்களை அர்ச் அகுஸ்தீனார் சபையில் செலவழித்தார். கடைசி பத்து வருடங்களை புனித ஐந்து காய பிரான்சிஸ்கு சபையிலே தொண்டாற்றுவதில் கழித்தார்.

1231ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13ஆம் திகதி இத்தாலியிலுள்ள புதுவை நகரில் மரணமானார்

இறந்த மறுவருடம் [illegible] திருச் சபையால் புனிதர் பட்டம் [illegible] புதுமை செய்யும் வரம் பெற்ற புனிதர்களுள் அதிவிசேஷம் வரம் பெற்ற புனிதர் அந்தோனியார்தான்

இப்புனிதர் வெள்ளிக்கிழமை மரித்தாலும் செவ்வாய்க் கிழமையே அடக்கம் செய்யப்பட்டார்.

இவரது கல்லறைகளில் செவ்வாய்க் கிழமைகளில் நடைபெறும் புதுமைகள் சொல்லிலடங்கா.

9 செவ்வாய்க் கிழமைகள் தொடர்ந்து தன்னிடம் வரும் பக்தர்களுக்கு வேண்டும் வரம் அளிப்பார். பலருக்குக் காட்சி அளித்து உத்தரவாதம் அளித்துள்ளார்-

அவரது அற்புதத்தால் குணமடைந்த நோயாளிகளும், காணமற் போனவர்களை மீண்டும் கண்டெடுத்தவர்களும் அனந்தம்.

இவரது கல்லறைப் புதுமைகளால் எழுந்து நடந்த முடவர்களும், பார்வை பெற்ற குருடர்களும் எண்ணிலடங்கா.

இவர் தமது வாழ்நாட்களில் செய்த புதுமைகள் அதிசயிக்கத்தக்கன.

அவற்றில் சில.

மழை, புயல், சூறாவளி வரும் நேரத்தில் இவர் பிரசங்கம்பண்ணும்போது, இவரையும் இவரைச்சுற்றி பிரசங்கம் கேட்டுக்கொண்டிருந்த மக்களையும் தவிர்த்து, ஏனைய சுற்றுப்புறத்திலே புயலும் சூறாவளியும் வீசியது.

சில கொடியவர்கள் ஒரு சிறுவனைக் கொன்று விட்டு, அப்பழியை இவரது தந்தையின்மீது போட்டு நீதி ஸ்தலத்தின்முன் இவரது தந்தையை ஒரு குற்றவாளியாகக் காட்டினர்.

இதை ஞானதிருஷ்டியால் அறிந்த புனிதஅந்தோனியார் உடனே

- ரட்ணா -

அவ்விடம் விரைந்து, இறந்த சிறுவனை உயிர்ப்பித்து தன் தந்தையைக் காப்பாற்றினார்.

ஒரு சமயம் றிமினி எனும் பட்டணத்தில் உள்ள மக்கள் இவரது பிரசங்கத்தைக் கேட்க தயங்கினர். புனிதரோ அம்மக்களை கடற்கரைக்கு வரும்படி அன்புடன் அழைத்து அங்கே கடல் மீன்களுக்கு போதித்தார். கடலிலுள்ள மச்சங்கள் யாவும் அவரது பிரசங்கத்தைக் கேட்கும் பாவனையில் கரையில் ஒதுங்கி குழுமி நின்றன.

இதைக்கேட்ட அந்நகர மக்கள் மனம் திரும்பினர்.

இதன் காரணமாகவே கடற்கரையோரங்களில் இவரது ஆலயங்கள் அதிகம் காணப்படுகின்றன. இவரது ஆலயமில்லாத மீன்பிடிக் கிராமங்களே இல்லை எனலாம்.

அனைத்து மொழி பேசும் மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் சகல பாஷையிலும் பிரசங்கிக்கும் வரம் பெற்றிருந்தார்.

ஒருமுறையாவது இவரது பிரசங்கத்தை கேட்க வேண்டும் எனும் நோக்குடன்; ஒரு தாயானவள் தனது கைக்குழந்தையையும் மறந்து இவரிடம் வந்தாள். திரும்பி வீடு சென்று பார்த்தபோது தனது குழந்தை இறந்து இருப்பதை கண்டு மனம் வெதும்பினாள். இறந்த குழந்தையை புனிதரிடம் கொண்டு வந்து நடந்ததைக் கூறி அழுதாள்.

புனிதரோ இறை (7ஆம் பக்கம் பார்க்க)

> நாளை ஜூன் 13 ஆம் திகதி அர்ச். அந்தோனியார் தினம். அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.

வேலணை ப.நோ.கூ. சங்கம்

வெற்றுச் சாக்கு விற்பனை

எமது சங்கத்தில் சேர்ந்திருக்கும் வெற்றுச் சாக்குகள் 25 06-86இல் கேள்விப்பத்திர மூலம் விற்பனை செய்யப்படும்.

கேள்விதாரர்கள் ரூ. 250/- வைப்புப்பணம் சங்கத்தில் செலுத்தி, விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இரா. லோகநாதன்
பதில் பொதுமுகாமையாளர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சர்வமத சந்நிதி; நயினைப்பதியின் சிறப்பு

ழியாத கன்னிகையாக விளங்குபவள் நாகபூஷணித் தாய். வித்தின்றி விளை மூலமாகவும் திகழ்பவள். அழகுக்கொருவரும் ஒவ்வாத வல்லியென மிளிர்பவள். அலைகடலானையைத் தன்னகத்தே கொண்டு ஐந்தலை நாகத்துள் பஞ்சபூத அடக்கத்தினை இயைவித்து நிற்பவள். அருளைச் சுரந்தளித்து மருளைக்களைபவள். வன்னெஞ்சப் பேதையரை வைது அநுக்கிரகம் செய்யும் ஆற்றல் பெற்று விளங்குபவள்.

**கலாசார சிரழிப்பு**

3-3-1986 ல் நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்திற்கேற்பட்ட

## நாகபூஷணி ஆலயம் அன்றும் இன்றும்

அக்கினி அனர்த்தம் 1958ம் ஆண்டுக்குப்பின் 28 ஆண்டுகால இடைவெளிக்குப் பிறகு நிகழ்ந்த கோர அழிவெனலாம்.

இறைவிக்குரிய சொத்துக்கள் பொதுமக்களுக்குரிய சொத்துக்களேயாம். தேர்களும் மஞ்சமும் சகடையும், பிரதான வாயிற் கதவும் எரிக்கப்பட்ட சம்பவம் கலாசாரச் சிரழிப்பினதும், பண்பாட்டழிப்பினதும், தமிழின ஒழிப்பினதும் முன்னோடி நடவடிக்கையென்றே கருதவேண்டும்.

இறைவனும், இறைவியும் சிவ ஐக்கியமான பீடமே நயினை என்பது அறிஞர் கருத்து. மூலஸ்தானத்திலிருக்கும் ஐந்தலை நாகவுருவின் அடிப்பாகம் வளர்ந்து செல்வதாகவும், அதன் வால் முனைப்பில் லிங்கப்பிரதிஷ்டை விளங்குவதாகவும், சமய நம்பிக்கை கொண்ட ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

'வெட்ட வெட்டத் துளிர் விடும் மரம்போல' அம்பிகையும் அனர்த்தத்தின்பின் ஆனந்த சொரூபியாக வளர்ந்து, பொலிவு பெற்று விளங்குவாள் என்பது அனுபவ உண்மை. தொண்டர்களது புனிதமான பணியும், பரம்பரைபரம்பரையாக அம்பிகையின் திருவடிகளுக்குத் தொண்டு புரியும் அநுபூதிநெறி கைவரப்பெற்ற தருமபரிபாலன சபையாரின் ஆன்மீகத் தொண்டும் அம்பிகையின் உயர் தனிச் சிறப்பினை உலகுக்குணர்த்துவன.

காலத்தாலும், தலவிசேடச் சிறப்பாலும் பெருமை பெற்றுத் திகழும் இத்தலத்தின் மெய்க்கீர்த்தியைச் சீரழித்துவிட முயல்பவர்கள் பாழ் நரகக் குழிக்குள் வீழ்ந்து பதைப்புறுவர்.

**பூர்வீக ஆலயம்**

நயினை ஸ்ரீநாகபூஷணிக்கான ஆலயத்தினை 1788 இல் இராமலிங்கம் இராமச்சந்திரன் கட்டினர். அவர் வழிவரும் ஆண் சந்ததியினர் இன்றும் பரம்பரை முகாமையாளர்களாகவுள்ளனர். 1935 இல் கிழக்கு வாயிற் பிரதான கோபுரம் கட்டப்பட்டது. 1951 இல் விமானம் புனரமைத்து சம்புரோக்ஷண மஹா கும்பாபிஷேகம் நிகழப்பெற்றது. அம்பாளுக்கான புதிய சித்திரைத் தேர் 8-7-1957 இல் வெள்ளோட்டம் விடப்பட்டது.

**நம்பகமான சான்றுகள்**

வணிக வரலாறும், சமய வரலாறும் இணைந்த தலமாக நயினை விளங்கியதென்பதற்கு அழியாத சான்றுச் சின்னமாகவும், ஆதாரமாகவும் 12 ஆம் நூற்றாண்டுக் கால பொலநறுவைக் காலச் சாசனம் இங்குள்ளது.

கோவிலுக்கு அருகே வடக்குக் கடலில் இன்றும் வெளிப்படையாகக் காணப்படும் கருடன்கல், பாம்பு சுற்றிக்கல் இரண்டும் இத்தலத்தின் பூர்வீகக் கதைகளினதும், கர்ணபரம்பரைச் செய்திகளினதும் உண்மையினை எடுத்து விளக்கி, பக்தியுணர்வையுண்டுபண்ணுவனவாயுள்ளன.

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் தலவிருட்ஷம் வன்னி மரம்.

அம்பாளின் தேரிலே - அதன் சிற்பங்களினூடே ஆலய வரலாற்றுச் சம்பவங்கள் அழகுறச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

நாகம் பூசித்து நின்ற இத்தலம் நாகேஸ்வரம் எனவும் பெயர் பெறும். 'மணிபல்லவம்' என்ற பெயர் இத்தலத்திற்கு இதிகாச, காவிய இலக்கியச் சிறப்பால் ஏற்படுவது. கலைக்களஞ்சியம் தொகுதி 8 இல் 'மணிபல்லவம்' என்ற பெயருக்கு அரியதொரு விளக்கமுண்டு. கி. பி. 2 ஆம் நூற்றாண்டளவில் இத்தலத்திற்குண்டான பெயர் 'மணிபல்லவம்' என்பது.

நயினையில் சக்திபீடம் (ஸ்ரீ புவனேஸ்வரி பீடம்) நிறுவியவன் 'இந்திரனே' என்பது மணிமேகலையால் உரைக்கப்படுகிறது

அதன் பின்னர் தான் புத்தபகவான் நயினை தீவுக்கு வந்தார் எனப்படுகிறது. புத்தபெருமான் கி மு. 563இற்கும் கி மு 483 இற்குமிடையில் தமது யாத்திரை காரணமாக நாகதீவைத் தரிசித்து நாகவழிபாடியற்றியிருக்க வேண்டும். (நாகதீவு எது என்பது பற்றிய மயக்கம் வரலாற்றாசிரியர்களிடையே உண்டு)

சாவகநாட்டு மன்னன் புத்தபெருமானது பாத பீடிகையைத் தரிசிக்க வந்ததாக மணிமேகலை கூறும். பர்மாவிலிருந்து தர்மசோக மகாராசா புத்திர சோகத்தால் வருந்தி நாகதீவுக்கு வந்தார் எனப்படுகிறது.

பாண்டவருள் ஒருவரான அர்ச்சுனன் நாககன்னிகையை மணம் செய்து 'பப்பிரவாசனைப்' பெற்றான். "பப்பிரவாசன் சல்லி" என்ற காணிப் பெயர் இதனை உறுதிப்படுத்துகின்றது. இன்றுள்ள ஆலயம் அமைந்துள்ள காணிப்பெயர் பப்பிரவாகன்சல்லி' ஆகும்.

புத்தபிரான், சரித்திர காலந்தொட்டேற்பட்ட நாகவழிபாட்டை ஆராய்வதற்காகவும், அதைத் தாமும் வழிபடுவதற்கா

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

கனகசபாபதி நாகேஸ்வரன் பி. ஏ. சிறப்பு)
உதவி விரிவுரையாளர்; தமிழ்த்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

# இந்தியாவினது தலைமை: ராஜீவின் இடத்தை எடுக்க அடுத்தவர் எவரும் இல்லை!

## கருத்துக் கணிப்புத் தரும் தகவல்

'ராஜீவின் இந்தியா' என்ற தலைப்பில் இந்திய சஞ்சிகை ஒன்று மக்களின் கருத்துக் கணிப்பு ஒன்றை அண்மையில் நடத்தியது.

ராஜீவின் நிர்வாகம் திறமையானதா? ஊழல் நிறைந்ததா? அவரின் ஆலோசகர்கள் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனரா?

இவை பற்றிய கருத்துக் கணிப்பின் தொகுப்பே இந்தக் கட்டுரை.

ன்னைக்குப் பின்னர் திரு. ராஜீவ் காந்தி பிரதமர் பதவி ஏற்று முப்பது மாதங்கள் சென்றுவிட்டன.

பிரதமர் பதவியை ஏற்கும்போது திரு. ராஜீவ்காந்தியை இளம் துடிப்புள்ள தலைவர் என்று சகலரும் வர்ணித்தனர்.

ஊழல்களுக்கு அப்பாற்பட்டவர், ஏழை இந்தியாவை விஞ்ஞானமயப்படுத்த வேண்டும் என்ற இலட்சிய வெறிகொண்டவர் என்று எல்லாம் திரு. காந்தியைப்பற்றி கூறப்பட்டது உண்டு.

பிரபல இந்தியப் பத்திரிகையாளர்கள் திரு. ராஜீவ் காந்தியை நம்பிக்கை நட்சத்திரம் என்று கருதினர்.

**தேனிலவு முடிந்ததா?**

இன்று அந்தத் 'தேனிலவு' முடிந்து விட்டதா? திரு காந்தியில், அவரின் அரசாங்கத்தில், அவரின் கொள்கைகளில் நல்லது ஒன்றுமே இல்லை என்ற அபிப்பிராயத்தை இந்தியப் பத்திரிகை ஆசிரியர்கள் இப்போது கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் திரு. காந்தியின் ஆட்சிபற்றிய கருத்துக் கணிப்பு ஒன்று அண்மையில் இந்தியாவின் முக்கிய நகரங்களில் நடத்தப்பட்டது.



ராஜீவ் காந்தி

அரசின் செயற்பாடுகள், பிரதமர் அவரின் நெருங்கிய ஆலோசகர்கள் பற்றி மக்களின் மதிப்பீடு பெறுவதற்காக இக் கணிப்பு நடத்தப்பட்டது.

இந்திரா காங்கிரஸில் திரு காந்தியை விட்டால் வேறு யார் பிரதமர் பதவியை ஏற்கக் கூடியவர்கள், யாருக்கு ஆதரவு உண்டு - என்பது பற்றியும் கணிப்பு எடுக்கப்பட்டது.

இந்தியாவில் நகர நடுத்தர மக்கள் வாழும் ஆறு முக்கிய நகரங்கள் இந்தக் கருத்துக் கணிப்புக்கு தெரிந்தெடுக்கப்பட்டன.

இந்திரா காங்கிரஸ் செல்வாக்கில் உள்ள பம்பாய், புதுடில்லி-

ஏனைய தேசியக் கட்சிகளின் செல்வாக்கில் உள்ள கல்கத்தா, பெங்களூர்-

பிரதேச அரசியல் கட்சிகளின் செல்வாக்கில் உள்ள சென்னை, ஹைதராபாத் ஆகிய நகரங்களில் வசிப்பவர்களின் கருத்துக்கள் அறியப்பட்டன. இப்போது ஒரு நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டால் பம்பாய், புதுடில்லி, ஹைதராபாத், கல்கத்தா, பெங்களூர், சென்னை ஆகிய நகரங்களில் இந்திரா காங்கி முறையே 49, 50, 56, 30, 37, 43 சத வீத வாக்குகளைப் பெறும் என்று கருத்துக் கணிப்பு மூலம் அறியப்பட்டது.

**திருவாளர் சுத்தம்**

பிரதமர் ராஜீவ் காந்தி ஊழலில் ஈடுபட்டுள்ளாரா? என்ற கேள்விக்கு 'இல்லை' என்ற பதிலே கிடைத்தது.

மக்கள் இன்னும் திரு. ராஜீவ் காந்தியை 'மிஸ்டர் கிளீன்' (திருவாளர் சுத்தம்) ஆகத்தான் கணித்து வருகிறார்கள்.

திரு காந்தியை 'மிஸ்டர் கிளீன்' ஆக கணிக்கப்பட்டதற்கான புள்ளி விவரம் வருமாறு:

புதுடில்லி - 81 சதவீதம்
பெங்களூர்- 71 சதவீதம்
சென்னை - 68 சதவீதம்
ஹைதராபாத் - 66 சதவீதம்
பம்பாய் - 63 சதவீதம்
கல்கத்தா - 55 சதவீதம்

திரு. காந்தியின் நெருங்கிய சகாவான நிதி அமைச்சர் விஸ்வநாத் பிரதாப் சிங்கும் ஊழலில் ஈடுபடாதவர் என்றே பெரும்பான்மையான வாக்காளர் கருதுகின்றனர்.

**ஆலோசகர்கள்**

திரு காந்தியின் ஏனைய ஆலோசகர்கள் ஊழலுக்கு அப்பாற்பட்டவர்களா? என்பதில் வாக்காளர் மத்தியில் கருத்து வேறுபாடுகாணப்பட்டது

புதுடில்லி, கல்கத்தா, பம்பாய், சென்னை ஆகிய நகர வாக்காளர்களில் பெரும்பாலோர் திரு. காந்தியின் ஆலோசகர்கள் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள் என்றே கருதுகின்றனர். பெங்களூர், ஹைதராபாத் நகர வாக்காளர் தான் காந்தியின் ஆலோசகர்களும் ஊழல்களுக்கு அப்பாற்பட்டவர்கள் என்று கருதுகின்றனர்.

**நிர்வாகத் திறமை**

பிரதமர் காந்தியின் நிர்வாகம் திறமையானதா, இல்லையா என்பது பற்றி கேட்கப்பட்டது. 1984 இலும் பார்க்க 1985 இல் திரு. காந்தியின் நிர்வாகம் திறமையாக இருப்பதாக வாக்காளர் கருத்து வெளியிட்டனர்.

(7ம் பக்கம் பார்க்க)

# பண்டிதமணி: வரலாறும் காலமும்

மனேச்சர் அவர்களின் மாண்பு IV

மேற்கு நாட்டுத் தத்துவ மேதை ஒருவர் பட்டப்பகலில் வெளிச்சம் ஏற்றி, வீதி வழியே யாரேனும் மனிதர் போகிறார்களோ என்று பார்த்தார் என்று கூறுவர். வீதி வழியே நாய், பூனை, மாடு, ஆடு குதிரை, கழுதை முதலிய மிருகங்கள் போன வகையில் மனிதப் பண்பாடில்லாத இரண்டுகால் விலங்குகளும் போனமை உய்த்துணரக்கிடக்கிறது. பஞ்சபூதங்களும் உரிய விதா சாரத்தில் கலந்தமையால், இயற்கை எழுந்து அவன் ஒரு மனிதன் என்று கூறும் என்று ஆங்கிலப்புலவர் சேக்ஸ்பியர் அழகாகக் கூறியுள்ளார்.

அந்த வகையில் பிள்ளை அவர்கள் ஒரு மனிதனையல்ல, இரண்டு மனிதர்களைக் கண்டுள்ளார். அந்த மனிதர்கள் இவரை உருவாக்க இவர் உருவாயுள்ளார். இந்த வகையில் இவரிடம் ஆளுமை அருமையாக அமைந்திருந்தது.

"புலவர் அவர்களுக்கும் மனேச்சர் அவர்களுக்கும் மாணுக்கர் யாராவதுஉபகாரஞ்செய்ததை நான் அறியேன்" என்று பிள்ளை அவர்கள் எழுதியுள்ளார்கள். ஒரு முறை பிள்ளையவர்கள் மறவன்புலத்திலிருந்து நான்கு சிறிய சங்குகள் கொண்டு வந்து கொடுத்தார். சிவபூசை செய்யும் வழக்கமுள்ள மனேச்சர் அவர்கள் தமது உடையவருக்கு அபிடேகம் செய்வதற்கு அவை உதவலாம் எனப்பிள்ளை அவர்கள் கருதினர்கள். மனேச்சர் அவர்கள் சங்குகளைக் கையேற்றுச் சில தினங்கள் சென்றபின் ஒரு நாள் மனேச்சர் அவர்கள் பிள்ளை அவர்களைப் பார்த்து, "கணபதிப்பிள்ளை! அங்கே மறவன்புலத்தில் ஒரு சங்கு என்ன விலைக்கு விற்கிறார்கள்?" என்று கேட்டார். பிள்ளை அவர்கள் "மூன்று சதங்கள்" என்று மெதுவாகக் கூறியதும் அவர் பன்னிரண்டு சதங்கள் கொடுத்து விட்டுப் புன்னகை புரிந்தாராம். பன்னிரண்டு சதங்களோடும் புன்னகையோடும் விடாமல் தமக்கு நல்ல உபகாரங்களும் கொடுத்தமையைப் பிள்ளை அவர்கள் பிற்காலத்தில் நினைவு தவறாமல் கூறியதுண்டு.

"அந்த இரண்டு பெரிய மகான்களும் மாணுக்கர்களுக்குச் செய்த கருணைகளை நினைக்கும் போதெல்லாம், "செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும் வானகமுமாற்றலரிது. பயன் தூக்கார் செய்த உதவி நயன்றூக்கின் நன்மை கடலிற் பெரிது" என்ற அருமைத் திருக்குறள்கள் என் வாயில் வந்து கொண்டிருக்கின்றன. என்றும் "என் தந்தை" யிலும் சிறந்த தந்தையாய், என்னைப் பல துறைகளிலும் வளர்த்தெடுத்தவர்கள், மானேச்சர் ஸ்ரீமத் த. கை அவர்கள்" என்றும் பிள்ளை அவர்கள் சொன்னதும் எழுதியதும் உண்டு.

### புலவர் அவர்களுக்கும் மனேஜர் அவர்களுக்கும் யாராவது உபகாரம் செய்ததை நாமறியோம்

மனேச்சர் அவர்களின் கடும் நேர்மைக் குணம் பிள்ளை அவர்களை இளமையிலேயே பற்றிக் கொண்டது. மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் நடத்திய பண்டித பரீட்சைக்குப் புலவர் அவர்கள் பரீட்சைகால விஞக்கள் தயாரிப்பது வழக்கம். யாழ்ப்பாணத்தில் பரீட்சை எழுதியவர்களுக்கு நாவலர் பாடசாலை மண்டபம் மையமாக இருந்தது. மனேச்சர் அவர்களே மேற்பார்வையாளராயும் இருந்தார்.

ஒரு முறை பரீட்சையின் போது மனேச்சர் அவர்கள் மண்டபத்தை விட்டு வெளியே சென்று வந்தார். அதுவரை பிள்ளை அவர்களே மேற்பார்வை செய்தார் அவ்வேளையில் பரீட்சார்த்தி ஒருவர் தமது குறிப்புக்களைப் பார்த்து எழுதினர். மனேச்சர் சிறிது நேரத்தில் மீண்டதும், பிள்ளை அவர்கள் பரீட்சார்த்தியின் செயலை முறையிடுவதா தவிர்ப்பதா என இடர்ப்பட்டார். இறுதியில் ஆசிரியர் இளையதம்பி அவர்களை அணுகித் தம் தர்மசங்கட நிலையைக் குறிப்பிட்டார். "உனது கடமையை நீ செய் அஞ்சாமல் மனேச்சர் அவர்களிடம் சொல்லிவிடு" என்று ஆலோசனை கூறினார். பிள்ளை அவர்கள் முறையிட்டதும் மனேச்சர் அவர்கள் பரீட்சார்த்தியை வெளியேற்றி விட்டார்.

மனேச்சர் அவர்களின் மைந்தன் கந்தசுவாமி என்பவர் தங்கவிக்கிரகம் போன்ற அழகு வாய்ந்தவர். அவர் நாவலர் பாடசாலையிலேயே படித்து வந்தார். அங்கே ஒரு நாள் படித்து வந்த மாணுக்கி ஒருத்தியை நோக்கி ஏதோ வகையில் அவர் கேலிக் குறிப்புக் கூறிவிட்டார். மாணுக்கி அழுதவாறு மனேச்சர் அவர்களிடம் முறையிட்டதும், எவ்வித விளக்கமும் இன்றி மைந்தனை அழைத்து, "ஆண்மைக் குணம் மூத்து விட்டதோ?" என்று காரசாரமாக ஏசி, அவரை ஓர் அறையுள் பூட்டிக் கொண்டு சிறையிருக்குமாறு பணித்துத் திறப்பையும் கொடுத்தார். கந்தசுவாமி ஒரு பகலெல்லாம் சிறையிருந்த செய்தி கேட்ட மற்றைய மாணுக்கர்கள் சிட்டாசார முறையில் மெத்தக் கவனமாயிருந்தார். மனுநீதி கண்ட சோழன் தன் மைந்தனைத் தண்டித்த நீதி வழுவா நெறி முறை நாவலர் பாடசாலையிலும் நீண்டகாலம் நிலைத்து நிலவியது

மனேச்சர் அவர்களைப் பற்றி மணிக்கணக்காகப் புன்முறுவலோடு சொல்லி வந்த பிள்ளை அவர்கள், மனேச்சர் செய்த ஒரு செயலை மனவருத்தத்தோடு குறிப்பிடத் தவறவில்லை. நாவலர் அவர்களின் நன் மாணுக்கர்களுள் சுப்பிரமணியபிள்ளை என்பவரும் ஒருவர். அவர் பாடசாலை [illegible] ஏழை வியாபாரி ஒருவரின் மைந்தன். சுப்பிரமணியபிள்ளை நாவலர் அவர்களின் வழியிலே கடும் ஆசாரிய நியமங்களோடு வாழ்ந்த இளைஞன். அவர் நாவலர் அவர்களோடு பின் தொடர்ந்து எங்குஞ் சென்று, அவருக்கு வேண்டிய பணிகள் எல்லாவற்றையும் சிரத்தையோடு செய்து வந்தவர். நாவலர் அவர்களுக்குச் சுப்பிரமணிய பிள்ளை மீது அதிக பாசம் உண்டானது. பாவம் ஏழைப்பிள்ளை. இவனைத் தூக்கிவிட வேண்டும் எனக் கருதியிருந்த காலத்தில் விதி விளையாடி விட்டது. சுப்பிரமணியபிள்ளை நெருப்புக் காய்ச்சலில் தவறி விட்டார்.

க. சி. குலரத்தினம்

(7ம் பக்கம் பார்க்க)

## கடல் கடந்த கடிதம்

**பேச்சுப்பல்லக்கு·**

தம்பி,

போக்குவரத்துக் கஷ்டத்தினுல் எதுவுமே செய்யமுடியவில்லை என எழுதிய கடிதம் பிந்தித்தான் கிடைத்தது, தபால் போக்குவரத்துத் தடையினுல்!

சில பகுதிகளில் இரயில் இல்லை. பஸ் மூலம் எல்லை கடந்து சென்று போய்ப் பிடிக்கலாமா? வேண்டாமப்பா? குண்டுப் பயம்! குண்டர் பயம்!

உனக்குத்தான் கஷ்டமென்று அலுக்காதே - எல்லோருக்குமே கஷ்டம்தான்; கஷ்ட காலம் தான்! வாகனங்களிற் போவதே பாதுகாப்பற்றது; நடந்து செல்லுங்கள் என்றுதானே பெரியவர்களும் சொல்கிறார்கள். சொல்லுக் கேட்காமல் போனவர்கள், போனவர்கள்தான்!

அதிவீரராமன் பாடிய நறுந்தொகைக்கு இன்னேர் பெயர் வெற்றி வேற்கை. எழுத்துப் பிழை விடாதே, தம்பி, ஓர் எழுத்து மாறினுலே வேறு சொற்ருெடர்! நடு எழுத்து மாறினுல்..., நமக்கேன் இந்தப் பிரச்சினை?


'குடை நிழல் இருந்து குஞ்சரம் ஊர்ந்தோர் நடைமெலிந்து ஓர் ஊர் நண்ணினும் நண்ணுவர்?'

நறுந்தொகை தரும் அநுபவம் என்ன? கொற்றக் குடையின் நிழல்—நாற்கால் ஜீவன் ஒன்றின் சொகுசு (குஞ்சரம் - யானை) இப்படி ஊர்ந்தவர்கள் நடை தளர்ந்து செல்ல வேண்டியும் வரும்!

நீதி நூல்களை ஊன்றிப்படி - கருத்து விளக்கம் பெறவேண்டுமானுல், நாட்டு நடப்புக்களைக் கவனி.

பழமொழிகளைப் பார்! எவ்வளவு அழகாக, பொருத்தமாகச் சொல்லி வைத்தார்கள். 'பேச்சுப் பல்லக்கு----' கீறிட்ட இடங்களை, தம்பி, [illegible]

அன்புடன்
—சிவா—



## ஒரு சிலர் பாடுபட மற்றவர் பார்த்திருப்பதா?

இன்று நம்மிடையே நேர்மை இல்லை. பணம் சம்பாதித்தால் போதும் என்ற மனப்பான்மை பலரிடம் பரவியிருக்கிறது.

சுவாமி விவேகானந்தர் சர்வமத சபையில் பங்கு பற்றி விட்டுத் தாய்நாடு திரும்பியதும் தமிழ் நாட்டில் ஒருவர் பின்வருமாறு கேட்டார். தாங்கள் அரசியலில் குதித்து இந்தியாவுக்கு சுதந்திரம் வாங்கித் தந்த பின்பு, சமயசேவையில் ஈடுபடுவது நல்லதல்லவா?'

சுவாமி விவேகானந்தர் அவருக்குப் பதிலளிக்கையில், அனைவருக்கும் நாளை சுதந்திரம் வாங்கித் தந்து விடுவேன். அதை நீங்கள் வைத்துக் காப்பாற்றும் தகைமை இருக்கிறதா என்பது சந்தேகமாக இருக்கிறது' என்றார்.

ஒருசிலர் கஷ்டப்பட்டு, தியாகம் செய்து சுதந்திரம் பெறப் பாடுபடுவதையும், பலர் சுயநலப் பேய்களாகத் தாண்டவமாடுவதையும் இங்கு பார்க்கப் பயமாக இருக்கிறது. இது ஒரு தடைக்கல்.

மிகவும் அண்மையில் எங்கள் இலவச மருத்துவ சேவைக்கு ஒரு பிரபல டாக்டர் சிரமப்பட்டு வருவதைப் பார்த்து அவர் திரும்பிப் போக வசதி செய்து கொடுத்தோம். வாடகைக்கு வாகனம் செலுத்துபவர்கள் சிறிதேனும் ஈவு இரக்கமில்லாமல் அதிக பணம் கேட்டு வாங்குகிறர். அதைப் பார்த்த பொழுது, (இப்படிப் பட்ட பலர் வாழும் போது) நமக்குச் சுதந்திரம் அவசியமா? பெற்ற சுதந்திரத்தை பேணும் பாக்கியம் நமக்கு ஏற்படுமா? இவ்வாறன சந்தேகங்கள் ஏற்பட்டன.

தமிழர்கள் யாவரும் ஓர் இனம். ஒரு தமிழ் மகனைப் பற்றி மற்றத் தமிழ் மகனுக்கு எரிச்சல் பொறுமை ஏற்படுகிறது.

இந்தியாவில் எத்தனையோ குறைபாடுகளிடையேயும் மலையாளி இன்னும் ஒரு மலையாளியைச் சந்திக்க நேர்ந்தால் மலையாளத்தில் பேசுவது மட்டுமல்ல, தன்னுல் உதவி செய்ய முடிந்தால் உதவியும் செய்வான். இது அங்கு ஒவ்வொரு இனத்திலும் காணப்படும் ஒற்றுமை.

நம்மிடையே அன்பு வளர்ந்து, பகைமை போய் விடுமானுல் எதிர்காலம் சிறப்பாக அமையும். இது தான் நாம் தற்சமயம் கடைப்பிடிக்க வேண்டிய பொது விதி.

சுவாமி சித்ருபானந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிளவுபட்டால் பெருந்துன்பம்

அது மிகப் பரந்த புல்வெளி. பச்சைப் பசேலென்று புற்கள் காற்றில் அசைந்தாடிய வண்ணம் நின்றிருந்தன.

வந்தாரை வரவேற்கும் நற்பண்பு அந்தப் புற்களிடமும் காணப்பட்டது. அந்த இடத்தில் அழகான ஐந்து பசுக்கள் மேய்ந்து கொண்டிருந்தன.

பசிய பசும்புற்களை பசியாற மேய்ந்த பசுக்கள் ஐந்தும் ஒன்றை ஒன்று பிரியாமல் சேர்ந்தே வாழ்ந்து வந்தன. 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்பதற்கிணங்க அவை வாழ்ந்தன.

ஒற்றுமையே பலம் என்பதற்கு உதாரணமாக அந்தப் பசுக்களைக் குறிப்பிடலாம். ஐந்து பசுக்களும் அன்பாக இருந்தன. இதனால் அவற்றைக்கொல்லவோ-வெல்லவோ முடியாதிருந்தது.

பக்கத்துக் காட்டிலே வாழ்ந்த ஒரு சிங்கமானது அந்தப் பசுக்களை வேட்டையாட முயன்றது. அவை ஐந்தும் ஒற்றுமையாக இருந்ததனால் அதன் ஆசை நிறைவேறவில்லை. அவற்றைத் தனித் தனியாகப் பிரித்தால்தான் தன் எண்ணம் கைகூடும் என்று எண்ணிய சிங்கம் அது எப்படிச் சாத்தியமாகும் என மயங்கியது.

சிந்தனையில் ஆழ்ந்திருந்த சிங்கத்தின் காதுகளில் ஓர் ஒலி வந்து விழுந்தது. 'என்ன சிங்கராசா!, கடுமையான யோசனை?' இப்படிக் கேட்டுக்கொண்டே வந்தது குள்ளநரி ஒன்று.

'அட சீ! நான் என்னவோ யோசித்துக்கொண்டிருக்கிறேன். நீ சிவபூசையில் கரடி புகுந்த மாதிரி வருகிறாய். போ! போ!!' என்றது சிங்கம்.

'அப்படி என்ன சிந்தனை? நான் தெரிந்து கொள்ளக்கூடாதா?' நரி நமட்டுச் சிரிப்புடன் கேட்டது.

'அதாவது, பக்கத்திலேயுள்ள புல்வெளியில் தினமும் ஐந்து பசுக்கள் மேய வருகின்றன. அவற்றின் ஒற்றுமையைக் குலைத்து ஒவ்வொன்றாகக் கொன்று தின்ன வேண்டும். அதற்கு என்ன செய்யலாம்?' என்று தான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்.

'அட! இவ்வளவு தானா, கவலையை விடுங்கள். நாளைக்கே ஏற்பாடு செய்கிறேன்'

'நீ என்ன தான் செய்யப் போகிறாய்?'

'அதுதான் பொறுத்திருந்து பாருங்களேன்'

பொழுது விடிந்தது. மறுநாட்காலை ஐந்து பசுமாடுகளும் ஆடி அசைந்த வண்ணம் மேய்ச்சலை ஆரம்பித்தன. அந்தப் பக்கமாக வந்த குள்ளநரி ஒரு பசுவிடம் போய், 'நலந்தானா' என்று காதருகே கேட்டது. பசுவோ முறைத்துப் பார்த்து விட்டு நகர்ந்தது. நரி விடவில்லை. மீண்டும் காதுக்குள்ளே குசலம் விசாரித்தது. பசுவோ திரும்பவும் பார்த்து விட்டு அதனைப் பொருட்படுத்தாது, மேய ஆரம்பித்தது. நரி நகர்ந்து சென்று விட்டது.

இவற்றையெல்லாம் பார்த்த மற்றப் பசுக்கள் இந்தப் பசுவிடம், 'நரி உன்னிடம் என்ன கேட்டது? என்றன. அதற்குப் பசு, 'நலந்தானா' என்று கேட்டது' என்றது. 'அப்போ திரும்பத் திரும்ப ஏதோ சொன்னதே' ஏக குரலில் கேட்டன எல்லாப் பசுக்களும். அந்தப் பசுவுக்குத் தர்மசங்கடமாகிவிட்டது. 'அதைத்தான் மீண்டும் மீண்டும் கேட்டது அந்தக் குள்ளநரி' என்றது பசு.

மற்றப் பசுக்கள் பேசாமற் போய்விட்டன. அடுத்த நாள் மற்றப் பசுவிடம் இதே மாதிரிச் செய்தது நரி. பசுக்கள் மத்தியில் குழப்பம் தோன்ற ஆரம்பித்தது. இவ்வாறு ஐந்து நாட்களும் ஐந்து பசுக்களிடமும் காதிலே ஏதேதோ குசுகுசுத்தது. இதனால் ஒரு பசு இன்னொரு பசு மீது சந்தேகப்படத் தொடங்கியது.

நரி ஏதோ விஷயம் சொல்ல எமக்கு மறைக்கப்பட்டிருக்கிறது என எண்ணி ஒவ்வொரு பசுவும் நினைக்கலாயிற்று. அதனால் அடுத்த நாள் அவை பிரிந்து தனித் தனியே மேயச் சென்றன.

நரியின் தந்திரம் பலித்தது. சிங்கம் சுலபமாக ஒவ்வொரு பசுவாகக். கொன்று தின்றது. ஐந்தும் ஒன்றாக இருந்த போது முடியாத காரியம் பிரிந்தவுடன் சுலபமாக நிறைவெய்தியது. எனவே எந்தக் காரியமும் ஒன்று சேர்ந்து செய்தால் அது வெற்றியாக இருக்கும். பிளவுபட்டாலோ வருவது துன்பம்.

- இதன் -




## அற்லஸ்பற்றி அறிவீர்களா?

அற்லஸ் என்ற பெயர் உலகப்படத்திற்கு ஏன் வந்ததெனில் கிரேக்கர் பூமியை அற்லஸ் என்ற அரக்கன் தாங்கியுள்ளதாக நம்பினர். அப்போதைய நம்பிக்கையை வைத்து உலகப்படத்திற்கு அற்லஸ் எனப் பெயரிடப்பட்டது.

இவ்வற்லஸை முதன் முதல் வரைந்தவர் குளோடியஸ் தொலமி என்ற கிரேக்க வானியலாளராவார். இவரது அற்லஸில் பூமி தட்டையாகவும், கண்டங்கள், தீவுகள் போன்றன மாறி மாறி வேற்றுருவங்களுடன் வரையப்பட்டிருந்தது.

வேறொரு வானியலறிஞர் இவ்வற்லஸை மாற்றி இப்போதைய நிலைக்குக் கொண்டு வந்தார். மிகப்பெரிய அற்லஸ் ஜேர்மனின் தலைநகரான பேர்லின் நகர நூல்நிலையத்தில் உள்ளது.

இவ்வற்லஸ் 300 ஆண்டுகளுக்கு முன் தயாரிக்கப்பட்டதாகும். இப்புவியியல் அற்லஸ் 175 Kg நிறையுடையதாகும். இதுவே அற்லஸ் பற்றிய வரலாறு ஆகும்.

—நி. தவபாலன்
யாழ். மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்.

## சின்னச் சிட்டு

சின்னச் சின்னச்சிட்டு—அதன்
சிறகு பஞ்சுப்பட்டு
தின்னத்தினை கொட்டி—நன்றாய்
பசியைத் தீர்ப்பான் கிட்டு.

வண்ண வண்ணச் சொண்டு—அதற்கு
வடிவுக்கண்கள் இரண்டு
எண்ணம் மகிழ்ந்து சிரிப்பான் கிட்டு
இன்னும் தருவான் விருந்து
மேனி யெங்கும் தடவி—அருகே
மெல்ல அழைப்பான் கிட்டு
தேனியின் சுறுசுறுப்பாக விரவி—சிட்டும்
தாவி வந்து தழுவுமே.

தொகுப்பு: எம். எம். அபூபக்கர்.

# பெண் அடிமையின் விளைவுகள்

## சமூகத்தால் இப்போது உணரப்படுகின்றன

பெண்களிடையே நிலவும் போட்டியுணர்வும் பொறாமையும் தமது அடிமைத்தனத்திலிருந்து விடுபடுவதை தடுக்கின்றன. ஒரு பெண் புரட்சியாகச் சிந்திந்து புதுமையான கருத்துக்களை முன்வைக்கும் பட்சத்தில் அல்லது புதுமையான நடைமுறைகளை செயற்படுத்தும் பட்சத்தில் அக்கருத்துகள் மற்றைய பெண்களால் ஏற்றுக் கொள்ளப்படாது விடுகின்றன. அல்லது ஏளனம் செய்யப்படுகின்றன. புரட்சிகர எண்ணங்கள் பெண்களிடையே நிலவாமல் தடுக்கப்படுகின்றன. சில விடயங்களில் இத்தகைய பெண்கள் சமுதாயத்திலிருந்து ஒதுக்கப்படுவதுமுண்டு.

பொதுவாக பெண்களே அதிகமாக கதைப் புத்தகங்களையும் சினிமாக்களையும் நாடுகின்றனர். இதனால் இவர்கள் கற்பனையுலகத்திலேயே லயித்திருக்கிறார்களேயன்றி புதுமையாகச் சிந்திக்காமலிருந்து விடுகிறார்கள்.

பெண்ணடிமைத்தனத்துக்கு இயற்கையும் ஒரு காரணமாக அமைந்து விடுகிறது. உதாரணமாக உலக சனத்தொகை மூன்றில் இரண்டு பங்கு பெண்களாகும். இதனால் பெண்களிடையே அதிகம் போட்டியும் மதிப்பின்மையும் ஏற்படுவது இயற்கையின் நியதியாகும். ஆண்களின் சனத்தொகை குறைவாயிருப்பது ஆணாதிக்கத்திற்கு காரணமாக அமைகிறது.

மற்றும் மருத்துவரீதியாக பெண்களைவிட ஆண்களே பலசாலிகளாக இருக்கிறார்கள். உதாரணமாக பெண்களைவிட ஆண்களின் என்புகள் பலமானவை. ஆண்களின் குருதியில் ஒரு இலீற்றருக்கு 5.5.5 x 10இல்12 செங்குழியங்கள் காணப்படுகின்றன. ஆனால் பெண்களின் குருதியில் ஒரு இலீற்றருக்கு 4-5-5x10 இல்12 செங்குழியங்களே காணப்படுகின்றன. இதனால் பெண்களைவிட ஆண்கள் அதிக வேலைகளை செய்யக்கூடியவர்களாகவும் கடினமாக உழைக்கக் கூடியவர்களாகவும் இருக்கின்றனர்.

### வேலைக்குப்போக காரணம்

திரு. பாரதிநேசன் வேலைக்குப்போகும் பெண்கள் விட்டிலும் அதிக வேலை செய்கிறார்கள் எனக் கூறியிருப்பது கொஞ்சம் மிகையாகவே உள்ளது- இலங்கை போன்ற நாடுகளை மட்டும் கருத்திற்கொண்டு இவர் இக்கருத்தை கூறியிருக்கலாம். ஆனால் எத்தனையோ வெளிநாடுகளில் பெண்களின் விட்டு வேலைகளில் ஆண்கள் பங்கெடுத்துக்கொள்வதுண்டு. இதுபற்றி அண்மையில் ஒரு வாரசஞ்சிகையில் வெளிவந்த கட்டுரை இதற்கு சான்றாகும். அதிகமான குடும்பங்களில் பொருளாதார நெருக்கடி காரணமாக பெண்கள் வேலைக்குப் போகிறார்கள். இதற்கு ஒரு நாட்டின் தனிநபர் வருமானமும் காரணமாகும்.

மேலும் பெண்ணடிமைத்தனம் பரவலாக்கப்பட்டுள்ள விதத்தை ஆராய்ந்தால் பல அதிர்ச்சிதரும் விடயங்களும் வெளிவருகின்றன. இந்தியாவில் எத்தனையோ பெண்கள் உயிருடன் எரிக்கப்பட்டுள்ளனர். பெற்றோரால் விபசாரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தாய்லாந்து போன்ற சில நாடுகளில் பருவமடையாத எத்தனையோ பெண்களும் விபசாரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். எத்தனையோ பெண்கள் 'ஹிஸ்டீரியா' போன்ற மனநோய்களுக்கு ஆளாகியுள்ளனர். ஆண்களைவிட பெண்களே இத்தகைய மனநோய்களுக்கு ஆளாகின்றனர்.

மணமாகாத பெண்களை விட மணமான பெண்களே அதிக குற்றங்களைச் செய்கிறார்கள் என்று செய்திகள் வந்திருக்கின்றன.

இப்பொழுது பெண்ணடிமைத்தனத்தின் விளைவுகள் சமுதாயத்தால் உணரப்பட்டு வருகின்றனவென்பதும் மறுக்கப்பட முடியாதது நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திலும் பல்வேறு அடக்குமுறைக் குட்பட்ட மக்களின் விடுதலைப் போராட்டங்களிலும் பெண்களின் பங்கு பற்றி உணரப்பட்டுள்ளமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

ஒரு நாட்டின் அல்லது குறித்த இனத்தின் விடுதலையில் பெண் விடுதலையும் பெருமளவில் தங்கியுள்ளது. முன்னரைப் போலல்லாது இப்போது பெண்களின் உரிமைகள் வழங்கப்பட்டு வருவது வரவேற்புக்குரிய விடயம்.

### சர்ச்சை சக்கரம்

சமுதாயத்தின் மனப்பாங்குகளும் கருத்துக்களும் மாறும்போதும் பெண்ணடிமைத்தனத்தின் விளைவுகள் சமுதாயத்தால் முழுமையாக உணரப்படும்போதுதான் இவ்வடிமைத்தனம் நீங்கும்.

எல்லாவற்றுக்கும் மேலாக பெண்ணடிமைத்தனத்துக்கு பெண்களே பொறுப்பாளிகளாகையால் அவர்களே இதை எதிர்த்துப் போராட வேண்டும். *

பெண்ணிலை வாதம்

நங்கை

# வர்ணக் கலவைக்குள் வரலாறு தெரிகிறது

நிகழ்கால சம்பவங்களே எதிர்கால வரலாறாகும். நிகழ்கால நிகழ்வுகளை நம் பேச்சு வழக்கிலே வைத்துக்கொண்டால் அது நாளை திரிபுபட்டும் போய்விடலாம். எழுத்திலே வைத்துக் கொண்டால் இஷ்டப்பட்டவர்களின் இடைச்சொருகலால் இயல்பிழந்தும் போகலாம்

இன்றைய நிகழ்வுகளை ஓவிய வடிவிலே உருப்படுத்தி வைத்தால் காலத்தால் மட்டுமன்றி கயவர்களால் தானும் அழிக்க முடியாது.

ஆயிரம் வார்த்தைகளில் சொல்லி விளங்க வைப்பதை இரு வார்த்தைகளில் சுருங்கக்கூறி விளங்க வைக்கிறான் கவிஞன்.

ஒரு வர்ணக்கலவையில் ஒரு வரலாற்றையே காட்டுகிறான் ஓவியன்.

ஓவியம் ஒரு மொழி. உலகின் பொதுமொழி. அனைத்து மக்களாலும் அறிந்து கொள்ளக்கூடிய, புரிந்துகொள்ளக்கூடிய மொழி என்பர் கலா விமர்சகர்.

அண்மையில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற ஓவிய அரங்கேற்றம் இந்த உண்மையையே எமக்கு விளங்க வைத்தது.

இன்று நாம் மறந்து போன நேற்றைய நிகழ்

(6ம் பக்கம் பார்க்க)

## சிறந்த படமாக 'சிதம்பரம்' தெரிவு

மலையாளப் படமான 'சிதம்பரம்' சிறந்த கதைப் படமாகத் தெரிவானது.

இந்திய திரையுலகின் 1985 ஆம் ஆண்டிற்கான தேசிய விருதை 'சிதம்பரம்' தட்டிக் கொண்டது.

ஹிந்தித் திரைப் படங்களான 'அகனிஸ் நான்', 'ராவ் சாஹிப்', 'ரிகால்' ஆகியவையும் போட்டியிட்டன

இவை சிறந்த படத்துக்கான தெரிவில் 'சிதம்பரம்' படத்துடன் போட்டிபோட முடியவில்லை.

இறுதியில் 'சிதம்பரம்' சிறந்த படமாகத் தெரிவானது?

## 'இளையராஜா' வின் பாடலில் மனதைப் பறிகொடுத்தனர்

இந்தியத் திரை உலகில் 1985 ஆம் ஆண்டில் சிறந்த இசையமைப்பாளர் விருது இளையராஜாவுக்குக் கிடைத்துள்ளது.


இந்த விருதுக்கு மலையாளத் திரைப்படமான 'ஸ்ரீ நாராயண குரு' வின் இசையமைப்பாளர் டி.தேவராஜன் போட்டியிட்டார்.

தெரிவுக் குழுவினரின் மனதை 'சிந்து பைரவி' பாடல்கள் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விட்டன.

தெரிவுக் குழுவில் இருந்த தமிழே தெரியாதவர்கள் கூட 'சிந்து பைரவி' பாடல்களில் மனதைப் பறிகொடுத்தனர்.

அது மட்டுமல்ல -

'சிந்து பைரவி' பாடல்கள் கொண்ட ஒலிப்பதிவு நாடாக்களையும் தமிழ் தெரியாத தெரிவுக்குழு உறுப்பினர்கள் கேட்டு வாங்கி வீட்டுக்குக் கொண்டு சென்றார்கள்.




# இலங்கை ரசிகர்கள் பாடல்களை ரசிப்பதில் "ரசனை" மிக்கவர்கள்

## சௌந்தரராஜன் பேட்டியில் சொன்னார்

'எனது பாடல்களுக்கு உயிர் கொடுத்த பாடகர்' என்று கவியரசு கண்ணதாசனால் பாராட்டப் பெற்றவர் இசைக்குயில்' ரி. எம். சௌந்தரராஜன்.

'இசைக்குயில்' ரி.எம். சௌந்தரராஜனை அவனது ரசிகர் சண்முகநாதன் சுதாகர் சென்னை, மயிலாப்பூரில் சந்தித்த 'சஞ்சீவி'க்கான பேட்டியைப் படியுங்கள்:

கேள்வி: இசை ரசனையில் இலங்கை ரசிகர்களுக்கும் தமிழ்நாட்டு ரசிகர்களுக்கும் இடையில் நிறைய வித்தியாசங்கள் உள்ளன. அதைப் பற்றி தங்கள் கருத்து என்ன?

பதில்: இலங்கை ரசிகர்கள் ரசனையுணர்வில் சற்று வித்தியாசமானவர்கள்தான். அவர்கள் தரமான இசையை ரசிப்பவர்கள் என்பதை நான் யாழ்ப்பாணத்துக்குக் கச்சேரிக்கு வந்த பொழுது நேரடியாகவே உணர்ந்தேன். இந்த விடயத்தில் தமிழ்நாட்டு ரசிகர்களைவிட இலங்கை ரசிகர்கள் ஒருபடி உயர்ந்தே நிற்கிறார்கள்.

கே: சோகப் பாடல்களை இவ்வளவு தத்ரூபமாகப் பாடுகிறீர்களே. . இது பயிற்சி வழி வந்ததா? அல்லது நீங்களும் ஒரு நடிகராக இருப்பதனால் இது சாத்தியமாகிறதா?

பதில்: (சிரித்துக் கொண்டே) இரண்டுமே அல்ல. எனது சொந்த வாழ்க்கைதான் அதற்குக் காரணம். வாழ்க்கைப் பாதையில் அடிபட்டு அடிபட்டுப் பழகிப் போன எனக்கு சோகம் ஒன்றும் புதிதானதொன்றல்ல. எனது நிஜவாழ்வு கொடுத்த கசப்பான அனுபவங்கள் கஷ்டங்கள் எனது சோகப் பாடல்களில் தத்ரூபமாக எதிரொலிக்கின்றன அவ்வளவுதான்.

கே: இன்றைய திரைப்பட பாடல்களை விட அன்றைய பாடல்கள் நிலைத்து நிற்பதன் காரணம் என்ன?

ப: அன்றைய பாடல்களில் காலத்தால்அழிக்க முடியாத 'கருத்து' என்பது கருவாக இருந்தது. ஆனால் இன்றைய பாடல்களில் 'கருத்து' எங்கே இருக்கின்றது.

கண்ணதாசன், பட்டுக்கோட்டை... இவர்களின் பாடல்களில் இருந்த பக்குவமான கருத்துக்கள் இன்றும் அவர்களது பாடல்களை வாழ வைத்துக்கொண்டிருக்கின்றன.

ஆனால் இன்றைய பாடல்களில் கருத்தைத் தேடினாலும் கண்டுபிடிக்க முடியவில்லையே. 'நீ பொண்டட்டி! நான் புருஷன்;! இப்படியெல்லாம் பாட்டு எழுதுகிறான் சார் என்ன செய்வது நமது ரசிகர்கள் கொடுத்துவைத்தது அவ்வளவுதான்.

கே: புதிய பாடல்களின் நிலையாமைக்கு இன்றைய இசையமைப்பும் ஒரு காரணமா?

ப; ஆமாம் அதுவும் ஒரு காரணம்தான். அன்றைய இசையமைப்பாளர்கள் பாடலை அமைக்கும் பொழுது பாடகர்களுக்கே கூடிய முக்கியத்துவம் கொடுத்தார்கள்.

ஆனால் இன்றைய இசையமைப்பாளர்களோ பாடகர்களை விடபாட்டுக் கருவிகளுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இதனால் உணர்ச்சியெதுவுமற்ற வெறும் ஜடப்பாடல்களையே கேட்கவேண்டியேற்படுகிறது. ஒரு விதத்தில் பார்க்கப் போனால் இசையமைப்பாளர்களின் சுயநலம் தான் இதற்குக் காரணம்.

(தயாரிப்பு: பேரின்பம்)

*

# அந்தப் பொன்னான நாளை எப்படி மறப்பேன்?

## கேட்பவர் சுஹாசினி

சிறந்த நடிகையாகத் தேர்ந்து எடுக்கப்பட்ட செய்தி கிடைத்ததும், நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அந்தப் பொன்னான நாளை எப்படி மறக்க முடியும்.

இப்படி மகிழ்ச்சி ததும்பக் கூறுகிறார் சுஹாசினி

சிறந்த படத்துக்கான தேர்வுக்கு நான் நடித்த மூன்று படங்கள் அனுப்பப்பட்டு இருந்தன.


தமிழ்ப்படமான 'சிந்து பைரவி'யும், தெலுங்குப் படங்களான 'சிரவத்தி', 'சிக்ஷா' என்பன தான் அந்த மூன்று படங்களும்.

இதில் ஏதாவது ஒரு படத்திற்கு எனக்கு பரிசு கிடைக்கும் என்று எதிர்பார்த்தேன்.

ஆனால் இந்தியாவின் சிறந்த நடிகையாகத் தேர்ந்து எடுக்கப்படுவேன் என்று நான் நினைக்கவில்லை.

தெலுங்குப் படத்துக்கு பரிசு கிடைத்து இருந்தால், நான் இவ்வளவு மகிழ்ச்சி அடைந்து இருக்கமாட்டேன்.

காரணம்—தெலுங்கில் எனக்குக் குரல் கொடுத்தவர் சரிதா. நான் சொந்தக்குரலில் பேசி நடித்த படத்துக்குப் பரிசு கிடைத்தது எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியை அளிக்கிறது என்றார் சுஹாசினி.



# ஜனவரி - ஏப்ரல வரை வெளிவந்த ஐம்பத்தாறு தமிழ் திரைப்படங்கள்

1986 ஜனவரியிலிருந்து ஏப்ரல் வரை வெளிவந்த ஐம்பத்தாறு தமிழ்ப் படங்களின் பட்டியலை இங்கே தொகுத்துத் தந்துள்ளார் சஞ்சீவி வாசகர் முஜிப்

1. ஹேமாவின் காதலர்கள்
2. சுயரூபம்
3. ஜான்சி ராணி
4. மிஸ்டர் பாரத்
5. கரிமேடு கருவாயன்
6. பிறந்தேன் வளர்ந்தேன்
7. காகித ஓடம்
8. சாதனை
9. டிசம்பர் பூக்கள்
10. முரட்டுக் கரங்கள்
11. மருமகள்
12. கண்மணியே பேசு
13. ராஜா நீ வாழ்க
14. ராஜ கோபுரம்
15. மைதிலி என்னைக் காதலி
16. கோயில் யானை
17. சமயபுரத்தாளே சாட்சி
18. இரண்டு மனம்
19. செல்வாக்கு
20. நிலவே மலரே
21. பாடும் பறவைகள்
22. வாழ வைத்த நாகம் நீ
23. நான் அடிமை இல்லை
24. சர்வம் சக்தி மயம்
25. மறக்கமாட்டேன்
26. குங்குமப்பொட்டு
27. மனக் கணக்கு
28. சோலை புஷ்பங்கள்
29. ஆனந்தக் கண்ணீர்
30. சிதம்பர ரகசியம்
31. உயிரே உனக்காக
32. மரகதவீணை
33. தர்மபத்தினி
34. மாமியார்கள் ஜாக்கிரதை
35. மகாசக்தி மாரியம்மன்
36. ரசிகன் ஒரு ரசிகை
37. மாவீரன் டார்ஜன்
38. கடைக்கண் பார்வை
39. மச்சக்காரன்
40. மோகினி சபதம்
41. மீண்டும் நீ
42. மீண்டும் பல்லவி
43. கண்ணத் தொறக்கணும் சாமி
44. பதில் சொல்வாள் பத்ரகாளி
45. ஒரு மனிதன் ஒரு மனைவி
46. பொய் முகங்கள்
47. நட்பு
48. மாட்டுக்கார மன்னரு
49. அம்மன் கோயில் கிழக்காலே
50. விடுதலை

மொழிமாற்றம் செய்யப்பட்ட படங்கள்

51. கொள்ளைக்காரன்
52. ரத்தக் காட்டேரி
53. இளஞ் சிங்கம்
54. வக்கீல் விஜயா
55. கைதியின் சவால்
56. நான் ஜெயிச்சுட்டேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இருமாதக்குறுநாவல்)




எஸ். அகஸ்தியர்

தெட்டத் தெளிவாக, சின்னஞ்சிறு குடில்களில் அடைந்திருந்த குஞ்சு குருமான்கள் துரையைக் கண்டதே தாங்களும் 'நூதனம்' பார்க்க, குய்யோ முறையோவென்று கூச்சல் போட்டுக் கூட்டங் கூட்டமாக ஓடி வந்து அவன் முன்னே - துரைக்கு முன்னே தூக்கணங் குருவிகளைப்போல் நிற்கிற கோலத்தை அவன் அப்போது கவனிக்கவில்லை - இருளில் தெரியவுமில்லை.

ஏதோ சகிக்கமுடியாத ஒரு வித புதிய நாற்றம் மூக்கைத் துருவியது. அந்த நாற்ற வாடை எங்கிருந்து புகைகிறது என்பதைக் காற்று முகத்தில் முகந்திருப்பி மூச்சிழுத்தான்.

சந்தேகம் இல்லை. அதே குழந்தைக் கணங்களின் மேனிகளிலிருந்து அடிக்கிற துர்நாற்றம் தான்.

கைலேஞ்சியை எடுத்து மூக்கில் வைத்துக் கொண்டான். பூமியில் பரவுகிற சூரிய ஒளியை உள்ளங்கையால் மறைத்துவிடலாம் என்ற 'மேதாவி'த்தனம் போலும், தற்காலிகப் பாதுகாப்புக்காக ஒரு கவசமாக அந்தக் கிருத்தியத்தில் ஈடுபட்ட போதும், நாற்றம் பரந்து கொண்டிருப்பதை அவனால் தடுக்க முடியவில்லை.

முன் பின் பழக்கமில்லாத இந்தக் குழந்தை குட்டிகளுடன் எப்படிச் சமாளிப்பது என்றும் அவனுக்குப் புலனாகவில்லை. தன்னுடன் முகப்பழக்கமில்லாத இவர்களும் தன்னுடன் பேசமாட்டார்கள் என்றும் தனக்குள் வியாக்கியானம் செய்துகொண்டு இரண்டுங்கெட்டான் நிலையில் தவிக்கையிலே, யாரோ கொலுசு ஒலி எழுப்பிக் 'கல கல'த்து'க் கனைத்துச் சிரிப்பது அவன் காதில் கிளிக் கீச்சலாகக் கேட்டது.

நத்தை மாதிரிக் கழுத்தை நீட்டிப் பார்த்தான்.

செத்தை ஓரமாக ஒரு பெண்ணானவள் - சரிவுப் பார்வைக்குக் கிழவி போலவும், நேர்ப் பார்வைக்குக் குமரி போலவும் தெரிந்த அவள்-நெளிந்து வளைந்து கொண்டு கண்களை அவன்மீது எறிந்து குலுங்கிச் சிரித்தவாறு நிற்க...

அந்தக் கிழவன் - இவனுக்கு வழிகாட்டி அழைத்து வந்த அதே கிழவன் - அவள் அருகேயே மருவியபடி, அவள் தாவி நின்ற செத்தைப் படலையை மெல்ல நீக்கி, இவனுடன் எதுவுமே பேசாமல், வாசலால் குனிந்து வெளியேறி நின்று சற்று நிமிர்ந்தான்.

நிமிர்ந்து பின்புறத் தாழ்வாரப் பக்கம் நோக்கி நெற்றிப் புருவங்களை மேலே சுருக்கிக் கொண்டு, 'அடி அம்மே, என்ன பாத்துக்கொண்டிருக்கிறே. தொரே வெளிய நின்னுக்கிட்டிருக்காரே, உள்ளே அழைச்சுக்கிட்டுப் போயேன்' என்று சொல்கின்ற தோரணையில் அவளைப் பார்த்து-அவள் மனைவியா, மகளா, பேத்தியா? என்று இவன் மதிக்கத்தக்கதான அந்த அவளைப் பார்த்து, ஒரு கைச் சைகை காட்டியதைத் 'துரை'யும் அவதானித்தார்.

இந்த இவள் தனக்குள் எழுகின்ற இயல்பான நாண அசைவுகளின் அஷ்டகோணங்களை எப்படியெல்லாம் நகர்த்த முடியுமோ அப்படியெல்லாம் நர்த்தகித்து நாணித்து நிற்கும் புது மங்கைபோல் பாவனை செய்து, அதனை ஒரு பாட்டம் அவனுக்குக் காண்பிக்கும் தோரணையில் மின்னி முழங்குவதற்குள்ளே தனது 'பதிவிரதத்தனங்'களையெல்லாம் ஒப்புவித்து விட்ட பின், வழக்கமான சிரிப்பு, நகைப்பு, நெளிப்பு, நளினம், தளுக்கு, மினுக்கு, குழைவு என்றெல்லாம் உள்ள அலங்கார நடை பாவனை அபிநயங்களை பாக்கியில்லாமல், ஒரு நல்ல சினிமா நட்சத்திரம் போல் இனிமையான விண் ணீரிக்கிறசாடை 'துரை'யைக் கனிவாக அழைத்தாள்:-

'சேர், உள்ளே வந்து ஒக்காருங்க'

அவனுக்கு-'துரை'க்கு 'என்னவோ' போல் இருந்தது. அந்த என்னவோ விவரிக்கிறதாக இல்லை. நெஞ்சு 'படக் படக்' கென்று அவரின் இனிய நினைவுகளையும் மீறி அடிக்கின்றது. தேகம் உப்புகிறதாக ஒரு சோக உணர்வு.

'உள்ளே வாங்க' என்ற அவளின் அந்தக் கனிவான மென்குரலில் எழுந்த காந்தம் - அந்த அழைப்பு அவளின் கம்பீர்ய வனப்பைக்காட்டிலும், அவளிடம் ஏதோ ஒரு பச்சாத்தாபம், ஏக்கம், பரிதாபம் உறைந்து கிடப்பதாகவே அவனுக்குத் தோன்றியது.

இந்த நினைவுகளோடு அவளைப் பார்க்க இவன் மனசுக்கு இவள் இதமாகவும் இதமற்றதாகவும் தெரிகிற ஒரு இடைநிலையிலே - ஒரு தீர்மானத்துக்கு வருவதற்குள்ள நிலையிலே...

அவள் உள்ளே சென்று பக்கத்தே உள்ள மரக் கப்புக்கு அருகே கிடந்த ஒரு பக்கூஸ்பெட்டியைத் தூக்கி ஆசாரமாக வைத்தாள்.

அதன்பின் 'சட்' டென்று திரும்பிப் பக்க வாட்டுக் கொடியிலே கிடக்கிறதில் ஒரு துணியைத் தேடி அகப்பட்டதை இழுத்தபோது ஏலவே சிலும்பலாய்க் கிடந்த ஒரு பழந்துவாய் அவள் கை பட்டதும், அவன் நேர்முதாவில் 'சதி' புரியத் திட்டமிட்ட மாதிரி, லேலங் கிலமாகக் கிழிந்தது.

நர்த்தகிபோல் திமிறினாள். அவள் முகம் வெட்கத்தில் உப்பி, மேனி அடங்கப் புல்லரித்தது. அழுகிற பாவனையில் முகம் கூம்பிற்று. தடுமாற்றத்தில் அவள் தேகம் சற்று வேளை அந்தரித்தது. என்றபோதும் இதையெல்லாம் காண்பிக்காமல் கொடியில் அடுத்த கரம் போட்டு ஒரு துணியை வலித்து இழுத்தாள்.

'கந்தையானாலும் கசக்கிக் கட்டு' என்ற நமது பெரியவர்கள் கூற்றுக் கொப்ப, கந்தையாய்ப் போய்க் கசங்கிய ஒரு நிறப் பாவாடைத்துண்டு அவள் கையில் தட்ட, 'இது பரவாயில்லை' என்ற சமாளிப்புடன் அதையே அந்தப் பக்கூஸ் பெட்டிமேல் 'அழகாக' விரித்தாள். அப்பாடா... ஒரு கருமம் முடிந்தது.

விரித்த பிறகு நெஞ்சு துன்ன நிமிர்ந்து கப்புக்குச் சாய்வாக நின்று, ஒரு 'புதுமணப் பிரவேசகாறி' போல் 'துரை'யைப் பார்த்துக் கெக்கலித்துக் குலுங்கிக் குலுங்கித் திமிறித் திமிறிச் சிரித்தாள்... கனைத்துக் கனைத்துச் சிரித்தாள்...

இப்படி அவள் சிரித்துக் கொண்டிருக்க... இவன் கண்கள் அப்போது கிழவனைத் துழாவின. கிழவனின் சஞ்சாரத்தையே அங்கு காணவில்லை. எங்கே போனான், எந்தப் பக்கத்தால் போய்ப் பறிந்தான் என்றும் தெரியவில்லை.

மனசு அடித்துக் கொண்டது.

'யார் இந்தக் கிழவன்...' 'ஒருவேளை பக்கத்துக் குடிசை 'டாப்பர் மாமா'வோ?'

அவனுக்கு, 'என்ன இழவு சனியனுக்கு வந்தேன்' என்றாகி விட்டது.

'பிச்சை வேண்டாம், நாயைப் பிடித்தால் போதும்' என்ற நிலை.

அவன் கண்கள் 'தறுதறு'த்து முழிசின.

அவன் முகபாவம் ஒரு பிரமை கொள்வதை அவதானித்த அவள், அவனின் சங்கடமான நிலையை வள்ளிசாகப் புரிந்து கொண்டாள்.

'என்ன தொரே, எங்க அப்பாவைத் தேடுறாப் போல பாக்கிறீங்க? அவரு ஒங்க முன்னாடியே அப்பிடியே போயிட்டாரு.. ஏன், அவரைக் கூப்பிட வேணுங்களா?'

அவள் 'துரை'யின் எந்தவொரு பதிலுக்கும் காத்திராமல் சும்மா ஒரு ஒப்புதலுக்காகச் சத்தம் போட்டாள்.

'யே, தங்கச்சி... தொரே வந்துட்டுப் போவட்டாமின்னு அப்பாவுக்கு ஒரு வாட்டி குரல் வச்சிட்டு ஓடியா'

தங்கச்சிக்காறிக்குக் கண்சிமிட்டிய பின் அவள் இந்தத் துரையையே பச்சையாக நேர் விழி குத்திப் பார்த்தாள்.

'ஆ... தான் பெற்ற பொண்ணுக்குத் தந்தையே டாப்பர் மாமாவா...? ஐயோ...!'

மலை பெயர்ந்து விழுந்த பாறுங்கற்களின் இடியோசைகளாக அவன் நெஞ்சு இடிந்து அதிர்ந்தது.

ஒரு கணமேனும் கற்பனை பண்ணமுடியாத கோரத்தை அவன் கண்ட போது அவன் உடம்பு குருவிஊனித்தது. எனினும், இந்த மாமூல் பிரகாரத்திற்கு ஒரு தீர்வு காண அவன் இங்கே- இந்தப் பரீட்சையில் குதிக்கவில்லை. அவன் எதற்காக இந்த 'டாப்பர் மாமா'வால் அழைத்து வழிகாட்டி வரப்பட்டானோ அந்த அக்கினிக்கோளத்தின் களம் கிழவனின் மகளாக - இவனுக்கு ஒரு பெண்ணாக வந்து நின்று அவன் முன்னே தன்னை முழுமையாக ஒப்புக் கொடுக்க ஆயத்தமாகித் துடித்துக் கொண்டிருக்கிற கோலத்தைப் பார்த்து வியந்தே போனான்.

'நாசமாய்ப் போக' அந்தக் கிழவனில் அவனுக்கு அருவருப்பான வெறுப்பு உண்டாயிற்று. கிழவன் அவன் மனக் கண்ணில் 'மன்னிக்க முடியாத - வெறுக்கத்தக்க ஒரு குற்றவாளி' போல் தெரிந்தான்.

'அடி பெண்ணே, அந்தத் தாத்தாவை அழைக்க வேண்டாம்; அவர் தேவையுமில்லை' என்று சொல்ல அவன் மனம் துடித்தது. அடக்கிக் கொண்டான்.

அவள் ஏதோ சாட்டாக அழைத்து அவன் எதிரே நிறுத்திய அவளது பெரிய தங்கச்சி, அக்காவையே 'சும்மா' பார்த்தபடி, 'நானு அப்பாவைக் கூட்டியாறேனே' என்று சிணுங்கி வந்த ஒப்புதலைக் கேட்ட போதுதான் அவன் ஆகவும் வியந்தான்.

'இந்தத் தொழில் வாழையடி வாழையாகத்தான் நடக்கிறது?'

வந்த தங்கச்சி வெளியே செல்லவில்லை; இந்த அக்கா அவளை அப்புறம் உசுப்பிவிடவும் இல்லை.

'வேணு'மின்னு சொல்லுங்க. அப்பாவை அழைப்பிக்கிறேன்... இப்பவே இவ தங்கச்சிய அனுப்பட்டுங்களா...?'

'வேண்டாம்'

'ஒரு வாக்கில் இரண்டு கருத்தை அவள் எடுத்துக் கொண்டாள்' என்று அவனுக்கும் புரிந்தது. அவளுக்கும் அப்படித்தான் புரிந்தது.

'சரி, பரவாயில்லை'

அவள் கமண்டலம் கவிழ, 'களுக்' கென்று குலுங்கிச் சிரித்தாள்.

இத்தனை நேரமாகக் 'கிழவனைத் துழாவிய துரையின் கண்கள், பிறகு அந்தத் 'தங்கச்சி'யை உற்றுப் பார்க்கத் தலைப்படுகிறதில் ஒரு துடிப்பைக் கவனித்த அவள் - இந்த அக்கா அவன் யோசனைக்கு ஒரு'

## ( அத்தியாயம் - 07 )

'என்னதான் வறுமை இருந்தாலும், இதெல்லாம் உலகத்தில் நடக்கக் கூடிய காரியமா?'

தன்னுணர்வு இழந்து ஒரு மயக்க வெறி கொண்ட நிலையில் அமுங்கி எழுந்த கேள்விக் கணையில் அவன் மனசு கொழுவிக் கொண்டது.

இந்தப் புதினம்- புதுமை கூட இந்த உலகத்தில் தான் நிகழ்கின்றது; அவன் கண்ணுக்கு முன்னே நிதர்சனமாகிக் கொண்டிருக்கிறது.

முத்தாய்ப்பு வைத்தாள்.

'சேர், ஏன் வெளியே ஒக்காந்துக்கிட்டு உள்ளே பாக்கிறீங்க...? உள்ளே வந்து படுக்கையில இருந்து ஆசை தீரப் பாருங்களேன்'

பச்சையாகவே ஒருவித தயக்கமுமின்றிச் சொன்னாள். சொல்லிவிட்டுத் தாழ்ந்த குரலில் ஒரு புதுக்கதையை மிகக் கெளரவமாகச் சொன்னாள்.

(தொடரும்)

# சிரமமும் தருமமும்

எட்டு வயதில் என் மகன் கண்ணன்
சுட்டுப் பழகத் துவக்குச் செய்கிறான்!
பட்ட தடியைப் படார் என முறித்து
வெட்டி....கழித்து... சைக்கிள் ரீயூப்பையும்
கட்டி... இழுத்து...... கண்டு பிடிக்கிறான்'!

'அப்பா... இந்தப் பேப்பர்......'
''எடு நீ......................''
ஒப்புதல் பெற்ற அந்தத் தாளை
கூர் அம்பாக்கிக் கொளுவிய கண்ணன்
வீரன் போலே எழுந்து நின்று
இலக்கை, அணைத்தே 'இழுத்து விடுகிறான்'!
குப்புற விழுந்ததே கோழிக்குஞ்சு!

''எடா......'' எனத் தாயார் விரட்டிய உடனே
சுடாத துவக்கைத் தூக்கிக் காட்டினான்!
சுட்டு விட்டதே தாயின் நெஞ்சில்!
அறஞ்செய விரும்பிய அம்மாவின் கை
மறஞ்செய் மகனைப் பிடித்துக் கொண்டது.
டுப்பாவின்கை 'ஐ. நா. சபை' யாய்
தப்பையு பிள்ளைத் தமிழாய்ப் பாடிட......
அப்பொழுது தந்த அம்மாவின் கை
கண்ணனைக் கட்டி அணைத்துக் கொண்டதே.
(விண்ணன் என்று விம்மிதம் கொண்டதோ)

எனது சிந்தனை இறக்கை அடித்தது.
தனது தாய்தனைத் தாக்கிய உடனே
தூக்கினானே' துவக்கை ...! இந்தத்
தாக்குதல் முயற்சியின் தமிழ்தான் என்ன?
பயிற்சி கொடுத்த 'பயங்கரவாதி' யார்?

உண்மையில் அப்பா நானும் இல்லை.
பெண்மையில் ஊறிய தாயும் இல்லை.
'அண்ணா மாரின்' வண்ணப் படங்களா?
அப்பா எழுதும் அஞ்சலிப் பாடலா?

'டுண் டுண்' என்று கேட்கும் பொழுது
கொண்டுபோய்க்கொளுத்தும்'எழுச்சிக்களங்களா'
ஓரணி காணும் பேரணி வரிசையா?
பள்ளியில் நடக்கும் பகிஷ்காரங்களா?

கோட்டையில் இருந்து வெடிக்கும் குண்டால்
'பாட்டியின் வீட்டுப் பனங்கிழங்கிப்போது
ஓடியல் ஆகியும் ஓடிப்போய் ஒரு
கடிதரவில்லையே' என்கிற கறளா?
காரணமில்லாக் கைப்பணி மட்டுமா?
பூரணமான விடை இல்லை - எனினும்

காகிதக் கப்பல் விடும் என் பிள்ளை
சிதம்பரப்பிள்ளையாய் மாறும் பொழுது
சிரமம் தருவான்!
எனினும் அதுவே
தருமம் என்கிறான் 'ஈழத்தம்பி'!

- சத்தியசிலன்

# கணபதி உருவம் காட்டும் தத்துவம்

கணபதியைக் காட்டிலும் சரீரத்தில் பருமனான சுவாமி வேறு யாரும் இல்லை. சிரசு யானையின் தலை. பெரிய வயிறு, பெரிய உடம்பு ஒரு மலைபோல இருக்கிறார். ஆனால் அவர் குழந்தை.

குழந்தைக்கு எது அழகு குழந்தை என்றால் தொந்தியும் கொழுகொழுவென்று இருந்தால்தான் அழகு. நிறையச் சாப்பிட்டு, குழந்தைகள் நல்ல புஷ்டியாக இருக்கவேண்டுமென்பதை இந்தக் குழந்தை ஸ்வாமியே காட்டிக் கொடுக்கிறார்.

இவர் ஓர் ஈசுவர தத்துவத்தையும் அதற்கு விளக்கிக்கொண்டிருக்கிறார். எப்படி?

இவருக்கு வாகனம் என்ன? மூஞ்சூறு. இவரோ யானை மாதிரி இருக்கிறார். நேர்மாறான உருவம் உடையது மூஞ்சூறு. அதை இவர் தம் வாகனமாக வைத்துக் கொண்டிருக்கிறார்.

(6-ம் பக்கம் பார்க்க)

# பண்டைய இதிகாசங்களில் பறக்கும் விமான வாகனங்கள்

## விசைமிகு, தானியங்கி வாகனங்கள் பற்றியும் தகவல்

விஞ்ஞானத்தின் அற்புத சிருஷ்டிகளான இக்காலத்து ஏரோப்பிளேன், மோட்டார், ரயில் முதலிய வாகனங்களை முற்கால மனிதன் பார்த்தால் வியப்பும் பெருமிதமும் கொள்வான். வேதகாலத்தில் தன்னால் நிர்மாணித்த யானம், ரதம், நெற, பலவம் (ஜலவாகனம்) என்றெல்லாம் மிகச் சாதாரணமான வாகனங்களின் வளர்ச்சியா இது என்று வியத்து அதிர்ச்சிக்குள்ளாவான்.

தொலை வழிகளைக் கடக்க வேத காலத்தவர் பயன்படுத்திக் கொண்ட பலவித வாகனங்களைப் பற்றிய குறிப்புக்கள் வேதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. மாட்டுவண்டி, ஆறு குதிரைகள் பூட்டிய ரதம், ஐந்து ஆட்களைச் சுமக்கும் வண்டி என்பன வேதங்களில் குறிக்கப்பட்டுள்ளன. வண்டிகளின் உறுப்புக்கள் எவ்வளவு அளவு வைத்து எப்படி அமைக்க வேண்டுமென்பதைப் பற்றிய சில விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதில் வண்டியின் அச்சு 104 அங்குலமும் ஏர்க்கால் 188 அங்குலமும் நுகத்தடி 86 அங்குலமும் இருக்கவேண்டுமென்று ''சுல்வசூத்திரம்'' என்ற நூலில் ஆபஸ்தம்பர் கூறுகிறார்.

வேதகாலத்திற்குப்பிற்பட்ட புராணங்களிலும், பௌத்த ஜைன கிரந்தங்களிலும் பல வித ரதங்களின் வர்ணனைகள் இருக்கின்றன. ரதங்களை கம்பளி, புலித்தோல், யானைத்தோல் முதலியவைகளால் மூடிவைப்பது வழக்கமாம். அப்படிப்பட்ட ரதங்களுக்கு ''காம்பலிகம்'' ''வையாக்ரம்'' ''த்வைபம்'' என்ற காரணப் பெயர்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. புராண காலத்தில் பின்வரும் ரதங்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள். தேவரதம், புஷ்பரதம், கர்ணீரதம், வையானிக ரதம், காம்பாலிக ரதம் முதலியவை பிரசித்தமானவை. இவற்றில் கர்ணீரதம் பெண்களுக்கென்றே பிரத்தியேகமாகப் பயன்படுத்தும் வாகனமாகும். சித்திரவேலைப்பாடுகளுடன்; அழகிய பட்டு வர்ணத் திரைகளால் இந்த ரதம் மூடப்பட்டிருக்கும்.

### பல்லக்கு

இராமாயண காலத்திலிருந்தே பல்லக்கு உபயோகத்திலிருந்து வருகிறது பல்லக்கு யானைத் தந்தத்தால் செய்யப்பட்டு அதில் பூ வேலைப்பாடுகளுடன் ரத்தினங்களும் இழைக்கப்பட்டிருந்தன, என்று புத்த சரிதம் என்னும் நூலில் பௌத்த மகாகவி அச்வகோஷன் வர்ணிக்கிறார். ''பாடங்கீ'' என்ற பல்லக்கு பெண்களுக்கும் குறிப்பாக பௌத்த பிக்ஷுணிகளுக்குமே ஏற்பட்டது. கி. பி. முதலாம் நூற்றாண்டில் பாஸ கவி சமஸ்கிருத நாடகங்களில் சிவிகா, பிடிகா என்ற இரு பல்லக்குகளை வர்ணித்திருக்கிறார்.

### கப்பல்

நீரில் செல்லும் ...ங்கள் வேதகாலம் முதற் கொண்டே இருந்து வருகின்றன. நூறு துடுப்புகள் போட்டுத் தள்ளப்படும் கப்பலைப்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. சேரமன்னன் செங்குட்டுவன் பத்தினித்தெய்வம் கண்ணகிக்குச் சிலை அமைக்க இமயத்திலிருந்து கல்கொணரவும் ஆரிய மன்னர் கனக, விஜயரைவென்று சிறைப்படுத்தவும் படையெடுத்துச் சென்றபோது ஓடங்களில் ஏறிக் கங்கையைக் கடந்ததாகச் சிலப்பதிகாரம் கூறுகின்றது குப்தர்களின் ஆட்சிக்காலத்தில் வாணிபத்திற்கும் போர்களுக்கும் பல கப்பல்கள் பயன்படுத்தப்பட்டன.

### ஆகாய விமானம்

இராமாயணத்தில் எத்தனை நபர்கள் ஏறிக்கொண்டாலும் இடம் கொடுக்கும் 'புஷ்பக விமானம்' பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. மகாபாரதம் போன்ற ஏனைய புராணங்களிலும் விமானங்களைப் பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது. பரத்வாஜ மகரிஷி எழுதியிருக்கும் யந்திரசாஸ்திர இரதத்தில் ''விமானதி கரணம்'' என்று ...

(6ம் பக்கம் பார்க்க)

( புததொளி )

# காலத்தால் அழியாத வரலாற்றுக் கடிதங்கள்

## நேருவிடமிருந்து இந்திராவுக்கு

### புராதன இந்தியாவின் கிராமக்குடியரசுகள்

( சென்ற வாரத் தொடர்ச்சி)

சீனாவின் சரித்திரமே ஒரு பேராச்சரியம். அந்நாட்டின் மிகப் பெரியகலாசாரம், அதை 500 வருடம், 800 வருடம் அதற்கு மேலும் கூட ஆட்சிபுரிந்த அரச பரம்பரைகள், எல்லாம் ஆச்சரியத்தைத் தருகின்றன.

நான் ஒரு சின்ன பந்தியில் கூறிய இந்த 110 ஆண்டுகளில் சீனா சிறிது சிறிதாக முன்னேறி வளர்ச்சியடைந்திருப்பதை எண்ணிப் பார். நாட்டாண்மைக் காரன் ஆட்சிகொஞ்சம் கொஞ்சமாக மறைந்து மத்திய அரசாங்கம் உருப்பெற்று வருகிறது. பிறகு நன்கு அமைக்கப்பட்ட அரசாங்கம் தோன்றுகிறது. இந்த புராதன காலத்திலும்கூட சீன மக்கள் எழுத கற்றிருந்தார்கள். ஆனால் ஆங்கிலம், பிரெஞ்சு பாஷைகளையும் நமது பாஷையையும் எழுதும் முறையினின்றும் சீன பாஷையை எழுதுவது மாறுபட்டிருப்பது உனக்கு தெரியும். சீன மொழியில் எழுத்துக்கள் கிடையாத் குறிகள் அல்லது படங்கள் மாதிரி அவை எழுதுகிறார்கள். ஷாங் வம்சம் 640 ... ஆண்டபின்பு ஒரு புரட்சி ஏற்பட்டதால் கவிழ்ந்துபோயிற்று, அதற்குப்பிறகு செள (Chou) வம்சம் என்றொரு புதிய வம்சம் அதிகாரத்தை அடைந்தது: இவ்வம்சம் 867 வருடங்கள் ஆட்சி புரிந்தது. இந்த ஆட்சியில்தான் சீன அரசாங்கம் நன்கு அமைக்கப்படலாயிற்று. இவர்களின் காலத்தில்தான் சீனாவில் இரண்டு பெரிய தத்துவஞானிகளான கன்பூஷியஸ், லௌ-ட்சே என்பவர்கள் வாழ்ந்தனர். அவர்களைப்பற்றி விரிவாக பிறகு தெரிந்து கொள்வோம்.

ஷாங் வம்சம் அரசாட்சியினின்றும் விரட்டப்பட்டபோது அவர்களின் கீழ் வேலை பார்த்த உயர்ந்த உத்தியோகஸ்தர்களில் ஒருவனான கி-ட்சே என்பவன் செள வம்சத்தின் கீழ் வாழ்வதை விட காட்டுக்குப் போய்விடுவது மேல் என்று தீர்மானித்து 5000 பேருடன் சீனாவிலிருந்து கொரியாவுக்குப் போய்ச் சேர்ந்தேன். அவன் அந்நாட்டைத் ''தேர்ந்தெடுக்கப்பட்ட நாடு'' அல்லது ''காலை நேரத்துச் சாந்திநிறைந்த நாடு'' என்று அழைத்தான்.

கொரியா சீனாவுக்கு கிழக்கே இருக்கிறது. ஆகவே கி-ட்சே உதய சூரியனை நோக்கி கிழக்கே சென்றான். அவன் கீழ்க்கோடியிலுள்ள நாட்டைதான் அடைந்து விட்டதாக எண்ணி அதற்கு அப்பெயரை இட்டான்போலும்.

கிறிஸ்து பிறப்பதற்கு முற்பட்ட 1100 வருடங்களில் கொரியாவின் சரித்திரம் கி-ட்சே அங்கு சென்றதிலிருந்து ஆரம்பமாகிறது. சீனக் கலைகளையும் கைத்தொழில்களையும் கி-ட்சே தான் புதிய நாட்டில் புகுத்தினான். உழவுத் தொழில், வீடுகட்டுதல் பட்டு நெய்தல் இவைகள் எல்லாம் ஏற்பட்டன. கி-ட்சேயைத் தொடர்ந்து சீனாவிலிருந்து பலர் வந்தார்கள். கி-ட்சேயின் சந்ததியார் கொரியாவை 900 வருடங்களுக்கு மேல் ஆண்டனர்.

கொரியா கீழ்கோடி நாடல்ல அதற்கும் கிழக்கே ஜப்பான் இருக்கிறது. கி-ட்சே கொரியாவுக்குச் சென்றபோது ஜப்பானில் என்ன நிகழ்ந்து கொண்டிருந்ததென்பது நமக்குத் தெரியவில்லை. ஜப்பானிய சரித்திரம் சீனாவைப்போல அல்லது கொரியாவைப் போல அவ்வளவு பழைமையானதல்ல. ஜப்பானியர்களின் முதல் சக்கரவர்த்தியாகிய ஜிம்முடென்னோ என்பவன் கிறிஸ்துவுக்கு 600 அல்லது 700 வருடங்களுக்கு முன் ஆண்டதாக ஜப்பானியர்கள் சொல்லுகிறார்கள். அந்த முதல் சக்கரவர்த்தி சூரிய தேவதையினின்றும் உதித்ததாக அவர்கள் நம்புகிறார்கள். ஜப்பானில் சூரியனைப் பெண்பாலாகக் கருதுகிறார்கள். இப்போதுள்ள ஜப்பானிய சக்கரவர்த்தி ஜிம்முடென்னோவின் நேர்கால் வழியில் வந்தவரென்றும் ஆகவே சூரிய வம்சத்தை சேர்ந்தவரென்றும் பல ஜப்பானியர்கள் நம்புகின்றார்கள்.

நமது தேசத்தவர்களான ராஜபுத்திரர்கள் கூடத் தங்கள் சூரியனிலிருந்தும் சந்திரனிலிருந்தும் உதித்தவர்கள் என்று சொல்லிக்கொள்வதை நீ அறிவாய். சூரிய வம்சத்தவர், சந்திர வம்சத்தவர் என்று அவர்கள் அழைக்கப்படுகிறார்வள். உதயபுரி மகாராணா

(6ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்பத்தி மானிய உதவியுடன்

# தென்னை வளத்தைப் பெருக்குங்கள்

தென்னை அபிவிருத்திக்காகவடபிரதேச மாவட்டங்களான யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களுக்கும் பலவகையான மானிய உதவித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றன. இப்பிரதேசத்தில் தெங்கு அபிவிருத்தியைசுலபமாகவும், விரைவாகவும் மேற்கொள்ளும் பொருட்டு இவ்வைந்து மாவட்டங்களையும் உள்ளடக்கக் கூடியதாயும்; சகல வழிகளிலும் கேந்திரமான

## மாவட்டங்களுக்குரிய தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் விபரங்களை வழங்குவர்

தொரு இடத்திலமையக் கூடியதாயும்; பன்முகப்படுத்தப்பட்ட நிர்வாகத் திட்டத்தின் கீழ் செயல்படக்கூடியதாயும் வட பிராந்தியக் காரியாலயமானது தெங்கு அபிவிருத்திக்கென கிளிநொச்சியில் அமைக்கப்பட்டது.

எனினும் இப்பிரதேசத்தில் வாழும் பொதுமக்களில், விவசாயிகளில் பெரும்பாலோர் இவ்விடயம்பற்றி இன்னும் அறியாதுள்ளது விசனத்துக்குரியதாகும். இக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டும், இப்பிரதேசமானது வருங்காலத்தில் தெங்கு அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தையும், சுயதேவைப் பூர்த்தியையும் பெற வேண்டும் எனும் நோக்கிலேயே இக்கட்டுரை எழுதப்படுகிறது.

வடமாகாணமானது வரண்டவலய சுவாத்தியத்தினுள் அடங்குவதால், தெங்கு உற்பத்தியில் கூடிய பங்கு வகிக்கும் ஈரவலயத்தைச் சார்ந்த தென்னை முக்கோணப் பிரதேசங்களை விட, இப்பிரதேசத்துக்கென விசேடமான அபிவிருத்தித் திட்டங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அத்துடன் இவற்றுக்கென பெருந்தொகையான பணமும் அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே தகுதியான காணிக்காரர்கள் இவ்வுதவித் திட்டங்களைப் பற்றிப் பூரணமாக அறிந்து அதற்குரிய உதவிகளைப்பெற விரைந்து முன்வரவேண்டும். அத்துடன் மானிய உதவிகள் எனும்போது அவை ஒருவகையான கடன் திட்டமோவென நினைக்காது; இவ்வுதவிகளைப் பெறும் ஒருவர் அவற்றை மீளவும் அரசாங்கத்துக்குச் செலுத்தத் தேவையில்லாதவொரு முற்று முழுதான உதவியேயெனக் கருதவேண்டும்.

இத்திட்டங்களிற் சேர்ந்து தங்கள் காணிகளை தெங்கு அபிவிருத்தியில் ஈடுபடுத்த விரும்பும் ஒருவர்; எத்தனை காணிகளிலாயினும், எத்தனை வகையான மானிய உதவித் திட்டங்களிலாயினும் சேர்ந்து பயன் பெறமுடியும். ஆனால் விதந்துரைக்கப்பட்ட முறைகளில் ஒவ்வொரு திட்டத்திற்குரிய வேலைகளைப் பூர்த்தி செய்த பின்பே உரிய உதவிகளை தவணை அடிப்படையிலோ அன்றி முற்றுமுழுதாக ஒரே தடவையிலேயோ திட்டங்களைப் பொறுத்துப் பெறத் தகுதி யுடையவராவார்.

**மானியத்திட்டத்தில் எப்படிப் பங்குபெறலாம்**

வட பிராந்தியத்திற்குரிய தென்னைப் பயிர்ச்செய்கைச்சபையின், கிளிநொச்சியிலுள்ள பிராந்தியக் காரியாலயத்தில் இருந்தோ அல்லது அந்தந்த மாவட்டங்களுக்குரிய தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், வெளிக்கள உதவியாளர்களிடமிருந்தோ, அவ்வுதவித் திட்டத்திற்கான விண்ணப்பப் படிவங்களையும் துண்டுப் பிரசுரங்களையும் இலவசமாகப் பெறமுடியும். ஒவ்வொரு திட்டத்திற்கும் வேறு வேறாக இணைப்பிரதிகளில்பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்கள், காணி அமைந்துள்ள பகுதிக்கான தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் சேர்ப்பிக்கப்படவேண்டும். ஒவ்வொரு பகுதிக்குமான உத்தியோகத்தர்களின் விவரங்களாவன;-

1. தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர், கச்சேரி, மன்னார் - மன்னார் மாவட்டம்.

2. தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர், கமநல சேவை - நிலையம், நல்லூர். - யாழ். மாவட்டம்.

3. தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர், அலம்பில் - முல்லை மாவட்டம்.

4. தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர், கமநல சேவை -நிலையம் கோயிற் குளம், [வவுனியா. வவுனியா மாவட்டம்.

5. தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர், கமநல சேவை - நிலையம், கிளிநொச்சி - கிளிநொச்சி மாவட்டம்.

6. தெங்குஅபிவிருத்தி உத்தியோகத்தர், பளை- கிளிநொச்சி மாவட்டம்.

**ஆரம்பப் பரிசீலனையும் பணக்கொடுப்பனவும்:**

விண்ணப்பங்கள் கிடைத்தபின் உரிய உத்தியோகத்தரால் காணி பரிசீலனை செய்யப்பட்டு எவ்வகையான திட்டத்திற்குஏற்புடைய தெனச் சிபார்சு செய்வதுடன், தேவையான ஆலோசனைகளையும்காணி



காரருக்கு வழங்குவார். இவரின் அறிக்கையின் அடிப்படையில் பிராந்தியக் காரியாலயத்தால் விண்ணப்பதாரருக்கு மானிய அனுமதிச் சீட்டும், விளக்கவுரைகளும் அனுப்பப்படும்.

ஆரம்பப் பரிசீலனை முடிந்தவுடனேயே வழங்கப்பட்ட ஆலோசனைகளுக்கேற்ப காணியில் வேலைகளை ஆரம்பிக்கலாம். ஒருவர் தனது காணியில் மேற்கொள்ள வேண்டிய வேலைகளைச் செய்து முடித்தபின், காணி அமைந்துள்ள பகுதிக்குரிய உத்தியோகத்தருக்கோ அன்றிப் பிராந்தியக் காரியாலயத்துக்கோ எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும். இதன்பின் உரிய உத்தியோகத்தர் காணியைப் பார்வையிட்டு, வேலைகள் திருப்திகரமாக முடிக்கப்பட்டிருப்பின், பணக்கொடுப்பனவை மேற்கொள்வதற்குரிய தனது அறிக்கையைச் சமர்ப்பிப்பார். இவ்வறிக்கையின் அடிப்படையில் விண்ணப்பதாரருக்கு, பணக்கொடுப்பனவை மேற்கொள்வதற்காக பணவுறுதிச்சீட்டு அனுப்பிவைக்கப்படும். பின்பு காசோலைமூலம் தபால் வழியாக உரிய உதவித்தொகை பிராந்தியக் காரியாலயத்தால் வழங்கப்படும்.

**மானிய உதவித்திட்டங்களின் பிரிவுகள்:**

நான்கு வகையான உதவித்திட்டங்கள் இம்மாகாணத்திற்கென நடைமுறையிலுள்ளன. காணிகளின் அளவு, அல்லது அதிலுள்ள தென்னைகளின் தன்மை என்பன போன்ற அடிப்படைக் காரணிகளைக் கொண்டே உதவிகள் வேறுபடும்.

**1. தெங்கு மறுசீரமைப்பு மானிய உதவித்திட்டம்**

இங்கு தற்போதுள்ள தென்னங்காணிகளைத் துரிதமாகச் சீரமைத்து, கூடிய விரைவில் சிறந்த விளைவைப் பெறுவதற்காகச் சில பயனுள்ள நவீன விவசாய நுட்பங்களைக் கைக்கொள்வதற்கான திட்டமிதுவாகும். இத்திட்டத்திற்குரிய காணி அரை ஏக்கர் பரப்பளவிற்குக் கூடுதலாக இருத்தலவசியம். வரட்சியில் இருந்து தென்னைகளைக் காப்பதற்காக காணிகளில் பொச்சுக் குழிகளை அமைக்கவும்; பயன்தராத தென்னைகளையகற்றிப் புதிய பிள்ளைகளை நடவும்; படுகன்றுகளை நடவும்; வடிகால்களை வெட்டவும் இவ்வுதவி வழங்கப்படுகிறது. பொச்சுக் குழிகளை அமைக்க ஏக்கருக்கு ரூ 1000/- வழங்கப்படுகிறது.

**2. தெங்கு கீழ்நடுகை மீழ்நடுகை உதவித்திட்டம்**

சோலைபோன தென்னந்தோட்டங்களை அதாவது 60 - 65 வயதுக்கு மேற்பட்டதும், விளைவு குன்றியதுமான தோட்டங்களை திரும்பவும் புதிய தோட்டங்களாக மாற்றுவதற்காக இவ்வுதவி வழங்கப்படுகிறது. தோட்டத்தின் ஆகக்குறைந்த பரப்பளவு அரைஏக்கராகுதல் இருத்தலவசியம். பழைய தென்னைகள் இருக்கக் கூடியதாக அதன் கீழ் புதிதாக நாற்றுக்களை நட்டு அவை வளரும்போது பழைய மரங்களைப்படிப்படியாக அகற்றுதல் கீழ்நடுகையென்றும், சோலைபோன மரங்களை முழுவதுமாக அகற்றியபின் அக்காணியில் புதிதாக நாற்றுக்களை நடுதல் மீழ்நடுகையுமாகும். சாவகச்சேரி, பளை, பூநகரி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலுள்ள பல தென்னங்காணிகள் இத்திட்டத்திற்கு ஏற்புடையனவாகும். ரூ. 4860/- (ஏக்கருக்கு) இத்திட்டத்திற்கான உதவித்தொகையாகும்.

**3. புதியதெங்கு நடுகை மானிய உதவி**

அரைஏக்கருக்குக்குறையாத பரப்பளவுடைய நீர்வசதியுள்ள வெறுங்காணிகளிலோ; தற்காலிகப் பயிர்ச்செய்கையின் கீழுள்ள காணிகளிலோ அல்லது புதிதாகக் காடழித்தோ தென்னைச் செய்கையை மேற்கொள்வதற்காக வழங்கப்படும் உதவியே இதுவாகும். ஏக்கருக்கு 4650/- இத்திட்டத்திற்கான உதவித்தொகையாகும்.

**4. வீட்டுத்தோட்ட மானிய உதவித்திட்டம்**

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள சிறிய பரப்பளவையுடைய காணிகட்கும் ஏனைய மாவட்ட சிறு காணிகட்கும் இத்திட்டம் மிக ஏற்புடையதாகும். குறுகிய பரப்பளவுடைய ஒரு சிறு காணியில் சில தென்னைகளையாவது உண்டாக்க விரும்பும் ஒருவர். இதனால் பெரிதும் பயனடைவார். காணிக்குரிய உறுதியின்படியோ அல்லது அரசாங்க அனுமதிச்சீட்டின்படியோ, காணியின் மொத்தப் பரப்பளவானது ஒரு ஏக்கருக்கு மேற்படாது இருக்கும் இடங்களே இத்திட்டத்திற்கேற்றவையாகும். மேற்படி பரப்பளவைக் கொண்டகாணியில் ஆகக் குறைந்தது பத்துதென்னை நாற்றுக்களையாவது உண்டு பண்ணுவதற்காக இவ்வுதவி அமுல்படுத்தப்படுகிறது. நடப்பட்ட ஒவ்வொரு நாற்றுக்கும் ரூ. 50/- என்ற அடிப்படையில் இவ்வுதவி வழங்கப்படும்.

**க. திருத்தணிகாசலம்**
உதவிப் பிராந்திய முகாமையாளர்
தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை, கிளிநொச்சி.

## புல்லாங்குழல் வாசிப்பதில் புதிய முறை தந்த 'மாலி'

பிரபல புல்லாங்குழல் வித்துவான் டி. ஆர். மகாலிங்கம் 1 6. 86ல் காலமானார். அவருக்கு வயது 63.

இசைக் குடும்பத்தில் பிறந்த மகாலிங்கம் சிறு வயதிலேயே புல்லாங்குழல் வாசிக்க தொடங்கி விட்டார். அவருடைய தமையன் புல்லாங்குழல் பயின்ற காலத்தில் அவர் வாசிப்பதைக் கேட்டு தானும் வாசித்தார்.

ஆனால் மகாலிங்கம் புல்லாங்குழல் வாசித்துப் பழகுவதை தமையன் விரும்பவில்லை. 'நான் வாசிப்பதையெல்லாம் நீ வாசித்தால் நான் புல்லாங்குழல் வாசிப்பதை விட்டு விடுவேன்' என்றார். தமையன் வாசித்ததையெல்லாம் மகாலிங்கம் வாசித்தார். தான் கூறியபடி அன்றோடு தமையன் புல்லாங்குழல் வாசிப்பதில்லை.

அக்காலத்தில் கர்நாடக சங்கீத உலகில் ஹார்மோனியத்தின் ஆதிக்கம் பரவலாகக் காணப்பட்டது. வாய்ப்பாட்டு முதற்கொண்டு வாத்திய சங்கீதமும் ஹார்மோனியத்தைப் பின்பற்றியே அமைந்துள்ளன. மாகலிங்கம் நாக்குப் பிரயோகமுறையால் (Tongiving Technique) புல்லாங்குழல் இசைக்கு புதிய அமைப்பைக் கொடுத்தார். இம்முறையை ஹிந்துஸ்தானி வித்துவான்கள் கையாண்டு வந்தனர்.

சிறு வயதிலேயே கச்சேரி செய்ய ஆரம்பித்த மகாலிங்கம் விரைவில் பெரிய வித்துவான்களின் மதிப்பையும் நட்பையும் பெற்றார். வயதில் குறைந்தவராகிலும், செம்பை, அரியகுடி, மகாராஜபுரம், முசிரி, சௌடையா ஆகியோருடன் கணிக்கப்பட்டார். ஒரு சமயம் மகாலிங்கம் புல்லாங்குழல் வாசிக்க செம்பை வைத்தியநாதய்யர் வயலினும், மகாராஜபுரம் விஸ்வநாதய்யர் மிருதங்கமும், பக்க வாத்தியம் வாசித்தார்கள். சௌடையா முதலான பெரிய வயலின் வித்துவான்கள் இவருக்கு பக்கவாத்தியம் வாசித்துள்ளார்கள். வித்துவான்கள் மகாலிங்கத்தை 'மாலி' என்று அழைத்தார்கள். இப்பெயரால் இவர் உருவாக்கிய புல்லாங்குழல் வாசிக்கும் முறையும் அழைக்கப்படுகிறது. அரசாங்கத்தாலும் சங்கீத நாடக அக்கடமியாலும் கௌரவிக்கப்பட்டார். மகாலிங்கம் பல புல்லாங்குழல் வித்துவான்களை பயிற்றியுள்ளார். அவர்களுடைய மாணவர்களில் சிறந்து விளங்குபவர் ரமணி அவர்கள்.

**எஸ். கனகசபை**

## அடுத்த 2 வாரங்களுக்கு உங்கள் தற்காப்பு எப்படி?

### கிரக நோக்கில் பாதிப்பு

31-5-1986 இதழ் சஞ்சீவியில், 1-6-1986 முதல் 14-6-1986 வரை நாட்டு நிலைமையைச் சோதிட ரீதியாக ஆராய்ந்து கொடுக்கப்பட்டிருந்ததை அறிவீர்கள். இந்த வாரம் தொடர்ந்து மேலும் இரண்டு கிழமைகளுக்கு (15 - 6 - 1986 முதல் 28-6-1986 வரை) அவ்வாறே சோதிடக் குறிப்புகள் இங்கு தரப்பட்டுள்ளன.

**15-6-1986**
**ஞாயிற்றுக்கிழமை**

பிரச்சினை ஏற்படக் கூடிய இடங்கள்: வட மாகாணம், மலையகம்

பாதிக்கப்படக்கூடியவர்களின் நட்சத்திரங்கள்: அச்சுவினி, உத்தரம், அவிட்டம், சதயம், ரேவதி.

**16-6-1986**
**திங்கட்கிழமை**

பிரச்சினை ஏற்படக் கூடிய இடங்கள்: வட மாகாணம், மேல்மாகாணம்.

பாதிக்கப்படக்கூடியவர்களின் நட்சத்திரங்கள்: அச்சுவினி, பரணி, அத்தம், சதயம்.

**17-6-1986**
**செவ்வாய்க்கிழமை**

பிரச்சினை ஏற்படக் கூடியஇடங்கள்: வடக்கு, கிழக்கு, மேல்மாகாணங்கள்.

பாதிக்கப்படக் கூடியவர்களின் நட்சத்திரங்கள்: பரணி, கார்த்திகை, பூரட்டாதி.

**18-6-1986**
**புதன்கிழமை**

பிரச்சினை ஏற்படக் கூடிய இடங்கள்: வட மாகாணம், வடமேல் மாகாணம்.

பாதிக்கப்படக்கூடியவர்களின் நட்சத்திரங்கள்: ரோகிணி, சுவாதி, உத்தரட்டாதி.

**19-6-1986**
**வியாழக்கிழமை**

பிரச்சினை ஏற்படக் கூடிய இடங்கள்: வட மாகாணம், கீழ்மாகாணம், தென் இந்தியா.

பாதிக்கப்படக்கூடியவர்களின் நட்சத்திரங்கள்: அச்சுவினி, ரோகிணி, மிருகசீரிடம், விசாகம், ரேவதி.

**20-6-1986**
**வெள்ளிக்கிழமை**

பிரச்சினை ஏற்படக் கூடிய இடங்கள்: வட மாகாணம், தென் இந்தியா. இன்று வருண பகவான் கருணையால் பிரச்சினைகள் குறைந்து நாட்டின் பலபகுதிகளில் மழை பெய்யக்கூடும்.

பாதிக்கப்படக்கூடியவர்களின் நட்சத்திரங்கள்: அச்சுவினி, பரணி, மிருகசீரிடம், திருவாதிரை, அனுஷம்.

**21-6-1986**
**சனிக்கிழமை**

பிரச்சினை ஏற்படக் கூடிய இடங்கள்: மேல் மாகாணம் ,(சிறிதளவு) இன்றும் நாட்டின் பல பகுதிகளில் பரவலாக, மழை பெய்யக் கூடும் அல்லது வான மப்பும் மந்தாரமுமாக இருக்கலாம். மத்திய, வட இந்தியாவில் அதிகமழை பெய்யலாம்.

பாதிக்கப்படக்கூடியவர்களின் நட்சத்திரங்கள்: பரணி, கார்த்திகை திருவாதிரை, புநர்பூசம் கேட்டை.

**22-6-1986**
**ஞாயிற்றுக்கிழமை**

பிரச்சினை ஏற்படக் கூடிய இடம்: வடமாகாணம்.

பாதிக்கப்படக் கூடியவர்களின் நட்சத்திரங்கள்: கார்த்திகை, ரோகிணி, புநர்பூசம், பூசம், ஆயிலியம், மூலம், பூராடம்.

**23-6-1986**
**திங்கட்கிழமை**

பிரச்சினை ஏற்படக் கூடிய இடங்கள்: வடக்கு, கிழக்கு மாகாணங்கள், தெற்கு, மேற்கு, மலையகப் பகுதிகளிலும் சிறுசம்பவங்கள் நடைபெறலாம்.

பாதிக்கப்படக்கூடியவர்களின் நட்சத்திரங்கள்: ரோகிணி மிருகசீரிடம், திருவாதிரை, ஆயிலியம், மகம், பூராடம், உத்தராடம்.

**24-6-1986**
**செவ்வாய்க்கிழமை**

பிரச்சினை ஏற்படக் கூடிய இடங்கள்: வட மாகாணம், (பெருமளவில்) கிழக்கு மாகாணம் சிறு அளவில்).

பாதிக்கப்படக்கூடியவர்களின் நட்சத்திரங்கள்: மிருகசீரிடம் திருவாதிரை, புநர்பூசம், மகம், பூரம், உத்தராடம், திருவோணம். இவர்கள் இன்று மிக அவதானமாக இருப்பது நன்று.

**25-6-1986**
**புதன்கிழமை**

பிரச்சினை ஏற்படக் கூடிய இடங்கள்: தென் மாகாணம், மேல்மாகாணம். (வட இந்தியா, தென் இந்தியாவில் மழை பெய்யலாம்.)

பாதிக்கப்படக்கூடியவர்களின் நட்சத்திரங்கள்: திருவாதிரை, புநர்பூசம். பூசம், மகம், பூரம், உத்தரம், திருவோணம். அவிட்டம்.

**26-6-1986**
**வியாழக்கிழமை**

பிரச்சினைக் ஏற்படக் கூடிய இடங்கள் வட மாகாணம், தென் இந்தியா.

பாதிக்கப்படக்கூடியவர்களின் நட்சத்திரங்கள்: புநர்பூசம், பூசம், ஆயிலியம், உத்தரம், அத்தம், அவிட்டம், சதயம்.

**27-6-1986**
**வெள்ளிக்கிழமை**

பிரச்சினை ஏற்படக் கூடிய இடங்கள்: வட மத்திய, வடமேல்மாகாணங்கள், மலையகம்.

பாதிக்கப்படக்கூடியவர்களின் நட்சத்திரங்கள்: பூசம், ஆயிலியம், அத்தம், சித்திரை, சதயம், பூரட்டாதி.

(7ஆம் பக்கம் பார்க்க)

**இறையருட் செல்வன்**

## கணபதி உருவம் . . .

(5ம் பக்கத் தொடர்ச்சி)

இவர் எத்தனைக்கு எத்தனை பெரிய சுவாமியாக இருக்கிறாரோ, அத்தனைக்கு அத்தனை சின்னது வாகனம்.

சுவாமி எதை வாகனமாக வைத்துக் கொண்டாலும் வாகனத்தினால் சுவாமிக்குக் கௌரவம் இல்லை. சுவாமியினால் தான் வாகனத்திற்குக் கௌரவம். வாகனத்திற்கு கௌரவம் கொடுக்க அதனுடைய சக்திக்கு ஏற்றபடி நெட்டிப் பிள்ளையார் மாதிரி அவர் இல்லாமல் இருக்கிறார். அதற்குச் சிரமம் இல்லாமல், ஆனாலும் அதற்குமரியாதை கௌரவம் எல்லாம் உண்டாகும்படி தம் உடம்பை வைத்துக் கொண்டிருக்கிறார்.

இந்தப் பிள்ளையார் மற்றவர்களை உபகரணமாக வைத்துக்கொண்டு அவர்களுக்கு ஓர் அந்தஸ்தைக் கொடுத்தாலும், அவற்றுக்கு ஒரு பாரமாக இல்லாமல் இருக்கிறார் என்ற தத்துவத்தை இவருடைய வாகனம் நமக்குக் காட்டுகிறது.

பக்தர்களுக்கு ஏற்றபடி பகவான் இருந்து அநுக்கிரகம் செய்கிறார் என்பது இதிலிருந்து விளங்கும்.

மற்றொரு விடயம் நமக்குப் பார்க்கப் பார்க்க அலுக்காத பொருள்கள் சில. சந்திரன், சமுத்திரம், யானை இவற்றைப் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும் என்று தோன்றும். பார்க்கப் பார்க்க ஆனந்தம் பொங்கும். அதனால்தான் குழந்தை சுவாமி தம்மைப் பார்க்கிற சனங்களுக்கு எல்லாம் பார்க்கப் பார்க்க ஆனந்தம் பொங்கிக் கொண்டே இருக்கும்படி யானை உருவத்தோடு இருக்கிறார் இது ஆனந்த தத்துவம், ஆராத ஆசையின் தத்துவம்.

விநாயக தத்துவத்தை இப்படித் தோண்டித தோண்டிப் பார்த்துக் கொண்டே போனால் அநேக தத்துவங்கள் தோன்றிக் கொண்டே இருக்கும். முடிவே இராது.

-ஸ்ரீ காஞ்சிப் பெரியவர் அருளியது-.

## காலத்தால்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

சூரிய குலத்தின் தலைவர். அவருடைய வம்சம் மிகவும் பழமையானது என்று சொல்லப்படுகிறது. நமது ராஜபுத்திரர்கள் ஆச்சரியமானவர்கள் அவர்களுடைய வீர தீரபராக்கிரமங்களைப்பற்றிக் கூறும் கதைகளுக்கு அளவே இல்லை.

## பண்டைய இதிகா . . .

(5ம் பக்க தொடர்ச்சி)

மிருக்கின்றது. அதில் ஆகாய விமானத்தைக் கட்டும் விதம், அதை இயக்கும் முறை அதன் நுட்ப அம்சங்கள் முதலியவற்றைப் பற்றி விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றது. மின்சார சக்தியால் இயங்கும் விமானத்திற்கு 'சக்தியுத்காம விமானம்' என்றும் சூரிய கிரணங்களால் ஓடும் விமானங்களுக்கு 'அம்சுவாக வர்கம்' என்றும் கரி, நீராவிகளால் இயங்கும் விமானங்களுக்கு "தூமயான வர்கம்" என்றும் பெயர் காட்டப்பட்டுள்ளன.

பரத்வாஜரின்வேறொரு விமான சாஸ்திர கிரந்தம் 'சாகுதம்' ஸூத்தரம், ருக்மம் போன்ற பல விமானங்களின் விவரங்களைத் தருகின்றது தீயினால் எரிக்கப்படமுடியாததும் ஆயுதங்களால் சேதப்படுத்த முடியாததுமான ஓர் வலுவான போர் விமானத்தைப் பற்றியும் வர்ணிக்கப்பட்டுள்ளது.

சில விமானங்களில் உட்கார்ந்திருப்பவர்களுக்கு கொஞ்சமும் ஆட்டம் தெரியாது எதிரே விமானத்திலிருப்பவர்களைப் படம் பிடிக்கவும், அவர்கள் பேசுவதைக் கேட்கவும் முடியும். மேலும் விரும்பும்போது எதிரி விமானத்தை நாசப்படுத்தி விடலாம் என்று பரத்வாஜர் கூறுகின்றார் விமானம் ஓட்டுபவரிடம் கால நிலைக்கு ஏற்றபடி பல வித உடுப்புக்கள் இருக்க வேண்டுமாம். வளிமண்டலத்தில் பரவியிருக்கும் பதினைந்து வித விஷ அணுக்களால் விமான மோட்டிக்கு அபாய மேற்படும் அதைத் தடுக்கவும் சில குறிப்பிட்ட உணவுகளைச் சாப்பிட வேண்டுமாம். தரையிலும் நீரிலும் மணிக்கு 24 மைல் வேகத்தில் செல்லும் விமானங்களைப் பற்றியும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மூன்று மாடிகள் உள்ள விமானங்கள் பற்றியும் 100பேர் வரை பிரயாணம் செய்யலாமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விமானம் மின்சார உதவி கொண்டு இயங்கும்.

போஜராஜனின் நூலொன்றில் பலவித யந்திரங்கள் விமானங்களைப்பற்றிய விவரங்கள் சொல்லப்படுகின்றன. ஓர் அத்தியாயத்தில் 224 சுலோகங்களால் பல வித யந்திரங்களின் அமைப்பு முறைகளைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றது. பிறரால் இயக்கப்படுவது, தானே [illegible] விமானங்களைப் பற்றி [illegible] துள்ளார்.

## வர்ணக் கலவை . . .

(4 பக்கத் தொடர்ச்சி)

வுகள் பல, எமது மனத்திரையில் மங்கிப்போன காட்சிகள் பல மீண்டும் புத்துருப் பெற்று எம் கண்முன்னே சஞ்சரிக்கின்றன. அவற்றைப் பார்த்து மனம் சஞ்சலிக்கின்றது.

குறிப்பாக 'பாதுகாப்பு வலயத்தை எதிர்த்து, 'உடும்பன்குளம்19-2-86' 'அகதிகள்', 'யாழ் பெரிய சேமக்காலை9-1-85' 'விடிவிற்கு முந்திய மரணங்கள்' என்கிற தலைப்பிலான ஓவியங்கள்' எமது மனக்கல்லறையில் புதைந்துபோன நிகழ்வுகளை மீண்டும் அகழ்ந்து எடுத்து ஒரு பிரேதப் பரிசோதனையே நடத்தி விட்டன.

இந்த அற்புத கைங்கரியத்தைத் செய்தவர்கள் மூன்று இளம் ஓவியர்கள். மூவரும் செல்விகள்.

இவர்கள் மூவரும் திரு. அ. மாற்கு, திரு. சி. சிவப்பிரகாசம் இருவரினதும் மாணவர்கள்.

இவர்களின் தூரிகை வீச்சும் ஓவியம் பற்றிய பிரக்ஞையும், சில நவீன ஓவியங்களும், வித்தியாசமான பார்வைகளும், புதிய கோணங்களும் பலரையும் பிரமிக்க வைக்கின்றன.

நிர்மலா [illegible] இதிகாச காட்சிகளை எம் கண் முன்னே கொண்டுவரும் இவரது 'சகுந்தலை' 'மீரா', 'சீதை', 'சிவசக்தி', பிள்ளையார்' 'ஆரிய தேவதை' என்பன பழைமையின் பெருமையை பேசுகின்றன. இவரது சீதை 'பலரின்'' பாராட்டுதலைப் பெற்றது

**அருந்ததி சபாநாதன்**

இவரது 'அகதிகள் 'தெருக்கூத்து', 'எதிர்பார்ப்பு', பொன்மான், 'பகற்கனவு' என்பன இவரது காலம் பற்றிய உணர்வினை எடுத்துக் காட்டுவதாய் அமைந்துள்ளது.

**சுகுணா தம்பித்துரை**

இவரது 'யாழ் பெரிய சேமக்காலை', 'விடிவிற்கு முந்திய மரணங்கள்' 'எதிர்கால எதிர்பார்ப்பு' என்பன பலரையும் பெரிதும் கவர்ந்தன.

'தன் பிரதிமை' என்ற தன்னைத்தானே வரைந்த இவரது ஓவியத் திறமைக்கு சான்றாக விளங்குகிறது.

வடபகுதியில் ஓவியம். சிற்பம் போன்ற நுண்கலைகளுக்கு மக்கள் செலுத்தும் ஆதரவும், ஊக்கமும் போதாது என்பது பலரின் கருத்து.

கொழும்பில் தினமும் யாராவது ஒருவரின் ஓவியக் கண்காட்சி நடைபெற்றுவருவதை நாம் தொலைக் காட்சியில்

(7ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## நாணய மாற்று விவரம்

வாசகர்களின் நன்மை கருதி வெளிநாட்டு நாணயங்களுக்கு உரிய இலங்கை நாணய மதிப்பு விவரம் வாராந்தம் சஞ்சீவியில் பிரசுரமாகிறது.

(இது நேற்றைய மாற்று விகிதமாகும்)

| வெளிநாட்டு நாணயம் | இலங்கையில் (ரூபா சதத்தில்) |
|---|---|
| ஸ்ரேலிங் பவுண் | 41 94 |
| அமெ. டாலர் | 27 74 |
| இந்திய ரூபா | 2 30 |
| மார்க் (ஜெர்மனி) | 12. 46 |
| கனடா டாலர் | 19. 80 |
| பிராங் (பிரெஞ்சு) | 3. 91 |
| பிராங் (சுவிஸ்) | 15 08 |
| அவுஸ் டாலர் | 18. 88 |

## பண்டிதமணி: வரலாறு

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாணுக்கனின் பிரிவுத் துயர் தாங்கமாட்டாத நாவலர் அவர்கள் கண்ணீர் சிந்தியவாறு கையறுநிலை பாடினுர். 'என்னுடைய கண்மணியே' எனத் தொடங்கும் பத்து விருத்தப் பாக்கள். அடிகள் தோறும் கண்ணீர் வடிக்கச் செய்வன ஆங்கிலப் புலவர்கள் இன்மெமோறியம், லிசிடாஸ், எலேர்ஜி என்றெல்லாம் பாடிய பாடல்களின் வரிசையில் நாவலர் அவர்களின் பாடல்கள் இடம் பெறத்தக்கவை. கையறுநிலை பாடிய தோடு அமையாத நாவலர் அவர்கள், சுப்பிரமணியபிள்ளையின் வரலாற்றையும் அருமையாக எழுதினுர். அந்த நூலை அவர் உடனடியாக அச்சிடாமல் தமது பெட்டியில் பேணிப்பாதுகாத்து வைத்திருந்தார். அதன் அருமையை அறிந்த சதாசிவம்பிள்ளை அதனை அழகாகப் பிரதி பண்ணித் தாமும் ஒரு பிரதியை வைத்திருந்தார். அது பரம இரகசியமாயிருந்தது.

காலம் சென்றது. நாவலர் அவர்கள் மறைந்தபின், மனேச்சர் அவர்கள், புத்தகப் பெட்டியில் இருந்த சுப்பிரமணியபிள்ளை வரலாற்றைக் கிழித்து, அக்கினி பகவானுக்கு ஆகுதி பண்ணிவிட்டார். அந்த வரலாறுபட்ட வைபவம் பிள்ளை அவர்களை வெகுவாக வாட்டி வந்தது. ஆண்டுகள் கழிந்தன.

மனேச்சர் அவர்கள் ஒரு நாள் பிள்ளை அவர்களுடன் உரையாடிய போது, சுப்பிரமணியபிள்ளை வரலாறு பட்ட பாட்டைப் பற்றிப் பேசினுர். பிள்ளை அவர்கள் வெள்ளை மனத்தோடு 'என்னிடம் ஒரு பிரதி இருக்கிறது' என்றுர். 'உனக்கு அது எப்படி வந்தது?' என்று பெரியவர் கேட்டார். 'எனக்கு தென்கோவை வித்தகம் கந்தையாபிள்ளை அவர்கள் தந்தார்' என்றுர் வித்தகம் கந்தையாபிள்ளை தமது முதுமைப் பராயத்தில் எங்கள் பிள்ளை அவர்களிடம் சென்று 'இந்தா இதனை நீ எதுவேண்டுமாயினும் செய்' என்று அந்த வரலாற்றுப் பிரதியைக் கொடுத்தார். கந்தையாபிள்ளை அவர்களுக்கு அந்தப் பிரதி கிடைத்தமை ஒரு தனி வரலாறு.

சுப்பிரமணியபிள்ளை வரலாற்றை சதாசிவம்பிள்ளை அவர்கள் பிரதி பண்ணி வைத்திருந்த கையெழுத்துப்பிரதி அந்தரங்கமாகவே அவரிடம் இருந்தது அவர் சிதம்பரத்தில் நாவலர் தர்ம பரிபாலனர் செய்த காலத்தில் தினமும் நீண்ட நேரம் சிவபூசையில் இருத்தல் வழக்கம். அவ்வேளைகளில் அங்கே சிலநாட்கள் தங்கியிருந்த வித்தகம் கந்தையா பிள்ளை நாள்தோறும் இரகசியமாகப் பிரதி பண்ணிக் கொண்டார். தாம் பிரதிபண்ணி வந்த கொப்பியைப் பலகாலம் பேணிப் பாதுகாத்த பின் பிள்ளையவர்களே அதற்குரிய வாரிசு எனக் கருதி அதனைக் கொடுத்தார்.

பிள்ளை அவர்கள் இச் செய்தியைக் கேட்டதும், 'கொண்டு வா அந்தப் பிரதியை' என்று பணித்தார். பிள்ளை அவர்கள் பயபக்தியுடன் கொடுத்ததை. மனேச்சர் அவர் மீண்டும் அக்கினி பகவானிடமே ஆகுதி செய்து விட்டார். சதாசிவம்பிள்ளை அவர்களிடமிருந்த பிரதிக்கு இது வரை என்ன நடந்தது என்பதை எவரும் ஆராயத் துணியவில்லை. அது கறையானுக்கு இரையாயிருக்கலாம் என்று பிள்ளை அவர்கள் கருதினுர்கள். நாவலர் அவர்கள் எழுதிய மூன்றுஞ் சைவ வினுவிடையின் மூலப்பிரதியும் இவ்வாறே கறையானுக்கு இரையானது போலும் என்றும் பிள்ளையவர்கள் சொன்னுர்கள்.


## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா

★ ஜேர்மன்

★ பிரான்ஸ்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்

மற்றும்

பாஸ்போட், விசா, பொண்ட் (Bond) ரிக்கட் ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ளவும்:

INTERSUN GROUP

சின்னத்தம்பி அவெனியு,

(மகளிர் கல்லூரிக்கருகாமையில்)

மனிப்பாய்.

குறிப்பு:

பிரான்சு, ஜேர்மன், கனடா ஆகிய நாடுகளுக்கு முற்பணம் தந்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.


## தடிமன் வந்தால்---

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

சளியாக மூக்கு மூலம் வெளியேறுகிறது. இதை மூக்கு ஒழுகுதல் என்கிறோம். சில பேருக்கு மூக்கு அடைப்பும் உண்டாகும்.

ஐந்தாம் நாள் இந்தக் கிருமிகளுக்கே அலுப்பு வந்துவிடுகிறதுபோலும். நாம் மூக்கைச் சிந்தும் போதும் இருமும் போதும் சளியுடன் சேர்ந்து இக்கிருமிகளும் வெளியேறி மீண்டும் காற்று மண்டலத்தை அடைகின்றன. அந்த அசுத்தக் காற்றைச் சுவாசிக்கும் மற்றொருவர் தடிமனின் பிடியில் சிக்கிக் கொள்கிறார்.

இப்படியேதான் ஒரு சுழற்சியாகப் பலரிடத்திலும் தடிமன் தொற்றிக் கொள்கிறது.

இந்த வைரஸ் கிருமிகளை ஒழிக்க முடியாது. நம் உடலுக்குள் நுழைவதைத் தடுக்கவும் முடியாது. ஆனால் அவை ஏற்படுத்தும் பாதிப்பைத் தடுத்து நிறுத்த ஒரு தடுப்பு மருந்தை நம் விஞ்ஞானிகள் கண்டு பிடித்தனர்.

அதிலும் ஒரு சிக்கல் தோன்றியது. இந்த ரைனே வைரஸில் மட்டும் 113 வகைகள் உள்ளனவாம். ஒருவகைக் கிருமிகளைத் தடுக்கக் கூடிய தடுப்பு ஊசியால் மற்றொரு வகைக் கிருமிகளைத் தடுக்க இயலவில்லை. இதனால் அத் தடுப்பு ஊசியைப் பயன்படுத்த முடியாமல் போகிறது.

இங்கிலாந்தில் உள்ள ஹாவார்ட் மருத்துவமனை மருத்துவர்கள் நம் உடலில் தயாராகும் இன்டர்பிரான் என்ற எதிர்ப்புச் சக்தி வாய்ந்த புரோட்டீனையே இந்த வெள்ளை அணுக்களிடமிருந்து தயாரித்து தடுப்பு ஊசியாகப் பயன்படுத்தினர்.

இதன் ஒரு சக்தி சுமார் ஆறு மாதங்கள் வரையே நீடிப்பதால் இன்னும் சக்தி வாய்ந்த தடுப்பு ஊசியைக் கண்டு பிடிக்க அம்மருத்துவர்கள் தொடர்ந்து ஆராய்ந்து வருகிறுர்கள்.

அதுசரி இந்தத் தடுப்பு ஊசி வருகிற வரைக்கும் நாம் என்ன செய்வது?

● தடிமனுல் பாதிக்கப்பட்டவர்கள் கொதித்து ஆற வைத்து தண்ணீரை அருந்த வேண்டும்.

● தும்மல் இருமல் வரும்போது கைக்குட்டையால் முகத்தை மறைத்துக் கொள்ள வேண்டும்.

● கண்ட இடங்களில் மூக்கைச் சிந்துதல் கூடாது

● வைட்டமின் 'சி' நிறைந்த உணவுகளை உட்கொண்டால் நம் உடலில் எதிர்ப்புச் சக்தி அதிகமாகும். (உதாரணம்) ஆரஞ்சு, மாம்பழம், எலுமிச்சை, நெல்லிக்காய், தக்காளி, அப்பிள், கீரைவகைகள்.

● மருத்துவர்களின் ஆலோசனைப்படி சில மாத்திரைகளையும் இருமல் மருந்துகளையும் உபயோகிக்கலாம்.

வெந்நீரில் ஆவி பிடிக்கலாம் - நல்ல காற்றோட்டம் உள்ள இடத்தில் படுக்க வேண்டும்.

ஆதாரம்: கோகுலம்

தொகுப்பு: க கனகராசா

## சர்வமத...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கவுமே நாகதீவுக்கு வந்தார் எனவும் கருதுவோருளர்.

### சகிப்புத்தன்மையும் பிறமதாலயங்களும்

போர்த்துக்கேயர் கோயிலை இடித்து, பொருள்களை சூறையாடினர். இக்காலம் கி. பி. 1620 — கி.பி 1624இற்கும் இடைப்பட்ட காலமாகலாம்.

ஒல்லாந்தர் காலத்தில் கோயிலுக்கு நிகழ விருந்த அழிபாடுகள் தடுக்கப்பட்டன

ஒல்லாந்தர்களது சமயத்திற்கு வழங்கிய ஆதரவால் கி பி 1792 கால கட்டத்தில் நாகபூஷணி அம்பாள் ஆலயம் தப்பியது.

ஒல்லாந்தர் காலத்தில் நயினையில் புரட்டாஸ் தாந்து மதாலயம், பள்ளிவாசல்கள் அமைக்கப்பட்டன சைவமதம் காட்டும் சகிப்புத்தன்மையினுல் நயினுதீவிலே பிற மதத்தினர் ஆலயங்கள மைக்க இடம் ஏற்பட்டது. இதனை இன்று சிலர் நயினைமக்களின் 'பலவீனம்' ஒன்று கூற முற்படுவது பொருந்தாக் கூற்ருகும்

எத்தனை இடுக்கண் விழையினும், அவற்றினுல் பாதிப்புற்று, நலிவுற்று நின்று பின் அதினின்றும் மீண்டனரே யன்றி, நயினைமக்கள் நலிவுகளினுல் மனம்மாறியோ, மதம்மாறியோ, கொண்ட கொள்கையினின்றும் விலகியோ பிறழ்ந்தோ நடந்து கொண்ட கோடரிக் காம்புகளல்ல.

இதனுலேயே அன்னை நாகபூஷணி என்றும் உயிர்ப்புள்ள தெய்வமாயுள்ளாள். அவள் பெட்டிப்பாம்பாகியுள்ளாளா? என்று வினுவுவோருக்கு அவளின் 'சீற்றத்தைப்' புரியும் காலம் அதிக தூரத்திலில்லை.

### புத்தகோயில்

நயினையில் புத்தர் சமாதிக்கோயில் 1930 - 40 காலகட்டத்தில் ஏற்பட்டது. 1947 இல் விகாரை கட்டப்பட்டது 1954இல் புத்தவிக்கிரகம் பர்மாவிலிருந்து கொண்டுவரப் பட்டது. 1958 ஆம் ஆண்டு அன்றைய அரச புத்தகோயிலைப் புனரமைப்புச் செய்தது.

### தேவாலயம்

1919இல் நயினுதீவில் பள்ளிவாசல் கட்டப்பட்டது. 1890 இல் புரட்டஸ்தாந்துமத தேவாலயம் விடு என்பன கட்டப்பட்டன. 'சர்வமதசந்நிதி' யாக மிளிருகிறது நயினை.

## புதுமை செய்யும்---

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

வனின் வல்லமையால் அக்குழந்தையை உயிர்ப்பித்து அனுப்பினுர்.

ஒரு சமயம் கோவில் ஒன்றின் கட்டட வேலைகள் நடந்து கொண்டிருந்தன. அக் கோயிலின் உச்சியில் அதிக உயரத்தில் வேலை செய்து கொண்டிருந்த ஒரு தொழிலாளி நிலைதடுமாறி கீழே தவறி விழலானன்.

தற்செயலாக அவ்வழியே வந்த புனிதர் இதைக் கண்டதும் உடனே தனது கை காட்டி அவனை மறித்தார்

—கீழே விழுந்து கொண்டிருந்த அந்த வேலையாளோ வானத்துக்கும் பூமிக்கும் இடையே அப்படியே அந்தரத்தில் நிற்கலானன்.

இவ்வாறு தமது வாழ்நாளில் பல புதுமைகளைச் செய்த இவரது நாக்கு; இவர் இறந்த பின்பும் இன்றும் அழியாது உள்ளது இதை பல லட்சக்கணக்கான நோயாளிகள் தரிசித்து குணமடைந்து வருகின்றனர்.

இப்புனிதரின் பிரசித்த ஆலயம் இலங்கையின் தென்பகுதியில் கொச்சிக்கடையில் உள்ளது.

வடபகுதியில் ஊரணி, மானிப்பாய், கலட்டி, அச்சுவேலி, பாஷையூர் என்னும் ஊர்களிலுள்ள கோயில்கள் பிரசித்தமானவை.

ஆக— சகல மக்களது இதயங்களிலும் நிரந்தரமாகக் குடியிருந்து அருள் பாலிப்பவர்— கேட்டதைக் கொடுப்பவர் புனித அந்தோனியார் என்பது அவரின் பக்தர்களால் என்றும் நினைவு கூரப்படும்.

## கிளிநொச்சி----

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஹெலிகள் மக்களைத் தாககின.

இதுதான் யுத்தம் என்று மக்கள் இப்போது அறிந்திருப்பார்களா?

தொடர்ந்த தாக்குதல்களால் தாயை இழந்த பிள்ளை, மனைவியை இழந்த கணவன், பிள்ளையை இழந்த தாய், உற்றுர் உறவினர்களை இழந்த குடும்பங்கள், விவசாயத்தை இழந்த விவசாயிகள், அன்றுட கூலிக்குச் செல்ல முடியாத தொழிலாளர்கள்... அழுகிறுர்கள். உருகுகிறது நெஞ்சம். வடிகிறது கண்ணீர். நெஞ்சம் வடிகிறது கண்ணீர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாயக் கிராமங்கள் அழிந்தன' நெல் விளைந்த பூமிகளில் துப்பாக்கிச் சன்னங்கள் விழுந்தனவா, அல்லது விளைந்தனவா? எவர்க்கும் புரியவில்லை!!

கருக்கட்டிய நெல்மணிகள் காய்ந்துகருகின.

ஆயிரமாயிரம் இளைஞர்கள், யுவதிகள், முதியவர்கள், குழந்தைகள் அனுதைகளாயினர். அகதிகளாயினர். ஆலயங்களிலும், காடுகளிலும் தான் அவர்களது புகலிடம்.

தொடர்புகள் துண்டிக்கப்பட்ட நிலையில் கிளிநொச்சி. மரணத்தில் வாழ்கின்ற தமிழ் மக்கள் தப்ப வழியில்லை. எங்கே போவது?

யாழ் அரச அதிபரும் ஏனைய செயலக அதிகாரிகளும் லொறிவண்டிச் சாரதியும்-

யாழ்ப்பாண மக்களுக்கு உணவு முத்திரை வழங்கவேண்டும் சீக்கிரம் போகவேண்டும். என்று நினைத்தபடி அன்று வியாழக்கிழமை விரைந்து வருகின்றனர்.

கண்டி வீதியால் போனுல் கஷ்டம் என்று நினைத்து காட்டுப்பாதையூடாக வருகிறது அந்த லொறி.

கிளிநொச்சி விவசாயப் பண்ணையை லொறி அண்மித்ததும் தூரத்தே தெரிந்த பச்சை வாகனத்தைக்கண்டு சாரதி ஓரமாக லொறியை நிறுத்தினுர்.

''ஷெல்'' வெடிகள் பாய்ந்தன' அதிகாரிகளுக்கு மயிர்க்கூச்செறியும் அனுபவம் உயிர்களைக் காப்பாற்ற காடுகளின் உதவியை நாடினர்.

லொறியினுள்ளே சாரதிகள் ஒளிந்தனர்.

ஆனுல் ''ஹெலி'' வல்லூறு சுழன்று கொண்டிருந்தது.

குண்டு மழை பொழிந்தது. அதிகாரிகள் பயத்தினுல் அடுத்து நடக்கப் போவது தெரியாது தடுமாறுகின்றனர்.

''டமார்'' பெரிய சத்தத்துடன் லொறி அதிர்ந்தது. குண்டு வெடித்தது.

வடபகுதி மக்களின் உணவு முத்திரைகள் எரிந்தன.

பாவம் சாரதிகளும் கருகினர் இக் கொடுமைகளைக் கண்ட அதிகாரிகள் கண்ணீர் வடித்தனர். திக்பிரமை பிடித்தவர்கள் ஆயினர்.

மின்சாரம் இல்லை, உணவு இல்லை, இருக்க இடமில்லை, ஆதரவுதர ஆட்கள் இல்லை.

[illegible]

இதுதான் யுத்தமா? இன்னும் தொடருமா??

## இந்தியா...

(3ஆம்பக்கத்தொடர்ச்சி)

கணிப்பு விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| ஹைதரபாத்: | 69 விதம் |
| சென்னை: | 66 விதம் |
| புதுடில்லி: | 51 விதம் |
| பம்பாய்: | 44 விதம் |
| பெங்களூர்: | 43 விதம் |
| கல்கத்தா: | 30 விதம் |

### அடுத்தவர் இல்லை

பிரதமர் பதவியில் இருந்து திரு ராஜீவ் காந்தி இறங்கினுல், அடுத்த பிரதமராக வரக்கூடியவர் இந்திரா காங்கிரஸில் யார் இருக்கிருர்கள்?

50 முதல் 60 சத விதமான வாக்காளர்களால் அப்படி ஒருவரைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

காங்கிரஸ் தலைவர்களில் ஒருவராவது 20சத வீத ஆதரவைக் கூட பெறமுடியாது இருப்பதும் கணிப்பில் கண்டு பிடிக்கப்பட்டது.

கல்கத்தாவைத் தவிர ஏனைய இடங்களில் அமைச்சர் நரசிம்மராவ் 14 முதல் 18 வரை ஆதரவு பெற்றிருந்தார்.

கல்கத்தாவில் பிரணுப் முகர்ஜிக்கு 18 சத வீத ஆதரவு இருந்தது.

இந்திரா காங்கிரஸில் ராஜீவ் காந்தியின் தற்போதைய நிலை என்ன? 'சண்டே' சஞ்சிகையில் பிரபல பத்திரிகையாளர் சியாமல் குமார் சக்ரபோத்தி பின்வருமாறு கூறியிருக்கின்ருர்:

என்னதான் செய்தாலும் இந்திரா காங்கிரஸில் ராஜீவ் காந்தியின் இடத்தை எடுப்பதற்கு ஒருவரும் இல்லை.

பிரதமரை அவரின் முன்னுல் கண்டிக்கக் கூடிய அளவுக்கு எதிரிகள் கிடையா. பின்னுக்கு இருந்து கொண்டுதான் விமர்சனம் செய்வார்கள். ராஜீவுக்கு உள் ஊழ போன்று பொது மக்கள் ஆதரவு ராஜீவின் எதிரிகளுக்கு கிடையாது.

இப்படி [illegible]

ஆதாரம்: இல்லஸ்றேட்டட் வீக்லி ஒப் இந்தியா)

## நம்பினுல் நம்புங்கள்

சந்திர மண்டலத்தில் இறங்குகிறவர்கள் எழுதுவதற்குப் பேனு பயன்படாது பென்சில்தான் பயன்படும். ஏனென்றுல் சந்திர மண்டலத்தில் குறைந்த அமுக்கத்தில் பேனுவின் மையெல்லாம் ஆவியாகிவிடும்.

* * *

எஸ்கிமோவரின் பற்கள் அவர்கள் சாகும் வரை கெட்டுப்போவது இல்லை. இவர்களுக்குப் பல் சொத்தையே ஏற்படுவதில்லை. மேலும் இவர்கள் மற்றவர்கள் மென்று தின்பதைப்போல் அதிக நேரம் மென்று தின்பதுமில்லை.

## வர்ணக்.....

(6ஆம்பக்கத்தொடர்ச்சி)

அடிக்கடி காண்கிறேம்.

வடபகுதியில் பல கலைஞர்கள் இலை மறைகாயாக போதிய விளம்பரமின்றியும்,வசதியின்றியும் காணப்படுகிறுர்கள்.

இவ்வாருன ஓவியர்களுக்கு விளம்பரவசதி செய்துகொடுக்க வேண்டியது கலாசார குழுக்களின் கடமையாகும். இவர்களை பொருளாதார ரீதியில் மேம்படச்செய்ய வேண்டியது தமிழர்களாகிய எம் கடமையாகும்.

இந்தவகையில் இந்த ஓவிய அரங்கேற்றத்தை ஒழுங்குபடுத்தியிருந்த யாழ் பல்கலைக் கழக கலாசாரக் குழுவினர் பாராட்டுக்குரியவர்களே.

எஸ் ஜே. பி. ரட்ணதுரை

## அடுத....

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

28-6-1986

சனிக்கிழமை

பிரச்சினை ஏற்படக் கூடிய இடங்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்கள், வட, தென் இந்தியாவிலும் மழை அல்லது அமைதியின்மை.

பாதிக்கப்படக்கூடியவர்களின் நட்சத்திரங்கள். ஆயிலியம், மகம் பூரம், சித்திரை, சுவாதி, பூரட்டாதி, உத்தரட்டாதி.

**4ஆம் பக்கத்தில்**


4 ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ள பெண்ணிலைவாதம் சம்பந்தமான கட்டுரை சென்றவாரச் சஞ்சீவியில் வெளிவந்ததின் தொடர்ச்சியாகும்.

கட்டுரையாளர்

செ. குலதரன்

## சொற்சிலம்பம்

### போட்டி இல. 20



**இடமிருந்து வலம்:**

1. தொடர்பு
5. கடைச்சங்க வள்ளல்களில் ஒருவர்
6. இருள்
9. சூரியன்
10. மங்கள
11. வாழ்வில் மாறி மாறி வருபவை
13. இராமன் இதைத் துச்சம் என மதிக்கத் தயங்கவில்லை
14. கஷ்டம்
15. மனத் திடத்துடன் எதிர்நோக்க வேண்டியது
17. தங்கம்
18. முதல் மூன்றெழுத்தும் சங்கீதத்துடன் தொடர்புடையது ஆனல் நடுவிசாவது எழுத்து வந்தால் ஒரு மலராகிவிடும்

**மேலிருந்து கீழ்**

1. மதி
2. உலகை ஆட்டிப் படைப்பது
3. விற்பவனுக்கும் வாங்குபவனுக்கும் இடையில் நிற்பவன் பெற்றுக்கொள்வது குழம்பி நிற்கிறது
4. இரக்கத்தின் ஒரு வடிவம்
7. புலவன்
8. தாமரை
10. நறுமணம்
11. சகதி
12. பக்கபலம்
13. பாம்பு
14. உழைப்பதும் உண்பதும் இதற்குத் தான். ஆனல் மாறி விட்டது
15. ஓரு தாவியம் இறுதி எழுத்து இழந்து விட்டது
16. வீட்டில் வளர்க்கும் செல்லப்பிராணி தலைகீழாகி நிற்கிறது

அனுப்புபவரின் பெயர்: ..........

விலாசம்: ..........

..........

கையெழுத்து: ..........

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் 'சொற்சிலம்பம்' குறுக்கெழுத்துப் போட்டியில் கலந்து கொள்ளலாம்
2. ஒருவர் எத்தனை கூப்பன்களும் நிரப்பி அனுப்பலாம்.
3. 'சஞ்சீவி'யில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்
5. வெற்றி பெறும் முதல் மூன்று பேருக்கு முறையே 50, 25, 15 ரூபா பரிசில்கள் வழங்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் 'சொற்சிலம்பம்' போட்டி இல. 20. சஞ்சீவி, தபால் பெட்டி இல. 23, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அடுத்துவரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.
7. உதயன் பப்ளிகேசன்ஸ் லிமிட்டெட், தஷப்ரு - உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், ஷப்ரு யுனிகோ பினன்ஸ் லிமிட்டெட் ஆகியவற்றில் பணிபுரியும் ஊழியர்களும் அவர்களது உறவினர்களும் இந்தப் போட்டியில் பங்குபற்ற முடியாது

* சொற்சிலம்பம் போட்டிகளில் பங்குபற்றும் வாசகர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. சில சமயங்களில் மூன்றுக்கும் அதிகமான வாசகர்களும் சரியான விடையை அனுப்புகிறுர்கள். அப்படியான சந்தர்ப்பங்களில் சரியான விடை எழுதுவோரிலிருந்து அதிஷ்ட சீட்டு மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறுர்கள் என்பதை வாசகர்களின் கவனத்துக்கு அறியத்தருகிறேம்.

### வெற்றி பெற்றவர்கள் விவரம் சொற்சிலம்பம் இல 18

முதலாம் பரிசு:- செ. சிவநாதன் 'சிவகமலம்', தபால் நிலைய வீதி, சாவகச்சேரி.

இரண்டாம் பரிசு:- செல்வி. ஆர் ரஞ்ஜனி பொற்கொடி வளவு, சங்குவேலி வடக்கு, மானிப்பாய்.

மூன்ரும் பரிசு:- ப. செல்லத்துரை கைதடி மேற்கு, கைதடி

### சொற்சிலம்பம் இல. 18 விடைகள்

**மேலிருந்து கீழ்**

1. அதிசக்தி 2. நன்மை 3 சண 4 ரம்மியம் 5 தன்மதி 7. ஆம் 10 தம் 11 லாவண்யம் 12 ஆல் 14. ரதி 15. பாசுரம் 18. சாரதி 19 கோவை

**இடமிருந்து வலம்**

1. அநுசரணை 6. திண்ணம் 7. ஆசான் 8 சமை 9 மிதம் 11. லாயம் 12. ஆதி 13. திரவம் 15. பால் 16. இன் 17. பசு 20 யது 21. வைரம் 22. தாம்போதி.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**சிக்கனமே சிறந்த செல்வம்**

நுரைவளம் கூடிய பார் சோப் புதிய விலை

| | ரூ. ச. |
|---|---|
| பெரிய பார்சோப் | 12-00 |
| சிறிய பார்சோப் | 6-00 |
| சுப்ப மில்க்வைற் சோப் | 4-50 |

2 மில்க்வைற் பார்சோப் மேலுறைகளை அனுப்பி பண்டிதமணியின் நினைவுச் சிறப்பிதழ் மில்க்வைற் செய்தியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற்—யாழ்ப்பாணம்.

# சஞ்சீவி

14 - 06 . 1986 சனிக்கிழமை

**வேப்பம் விதைகள் தேவை**

நீங்கள் எவ்வளவு வேப்பம் விதைகள் தந்தாலும் நாங்கள் நல்ல விலைகொடுத்து வாங்குகின்றோம். நாங்கள் தயாரிக்கும் நீம் வாசனை சவுக்காரம், நீம் சுகாதார தூபத்திற்கும் வேப்பம் விதை மூலப்பொருளாகும். வேப்பம் பிண்ணாக்கு இயற்கையான பசளையாகும். இன்னும் சில வாரங்களில் வேப்பம் விதைகள் விழத்தொடங்கி விடும். சேகரித்துத் தாருங்கள்.

மில்க்வைற்—யாழ்ப்பாணம்.

# வால்ட்ஹெய்ம் மீதான நாஸி குற்றச்சாட்டு

## சர்வதேச அரங்கில் நன்மதிப்பை பாதிக்குமா?

இவ்வாரம் நடந்த முக்கிய சம்பவங்களில் ஒன்று ஆஸ்திரிய ஜனாதிபதித் தேர்தல் ஆகும்.

இத்தேர்தலில் ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் பொதுச் செயலாளர் குர்ட் வால்ட்ஹெய்ம் 54 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

கடந்த 16 வருட காலம் ஆட்சியில் இருந்த சோஷலிஸ்ட் கட்சி தேர்தலில் தோல்வி கண்டு விட்டது. வால்ட்ஹெய்ம் தலைமையிலான கன்சர்வேட்டிவ் கட்சி வெற்றி பெற்றுள்ளது.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் ஆஸ்திரியாவில் நடந்த தேர்தல்களில் கடும் போட்டி நிலவியது இத் தேர்தலில் தான்.

அத்துடன் சர்வதேச அரங்கில் இத் தேர்தல் முக்கிய கவனத்தையும் ஈர்ந்திருந்தது.

ஐ. நாவின் முன்னாள் பொதுச் செயலாளர் ஒருவர் இத் தேர்தலில் போட்டியிட்டதும் அவர் மீது சுமத்தப்பட்ட யூத எதிர்ப்புக் குற்றச்சாட்

படுகொலை செய்யப் பட்டனர்.

நேசநாடுகளின் படைகள் வெற்றி வாகைசூடி யுத்தம் முடிவுக்கு வந்ததும் இப் படுகொலைகளின் பின்னணியில் இருந்த ஹிட்லரின் சகாக்களை தேடிக் கண்டு பிடிக்கும் வேலைகள் ஆரம்பமாகின.

1949 ஆம் ஆண்டு யூதர்களுக்கு என இஸ்ரவேல் என்று ஒரு நாடு பிரகடனம் செய்யப் பட்டவுடன் இத் தேடுதல் வேட்டை முடுக்கி விடப்பட்டது.

இதன் பிரதிபலனே ஹிட்லரின் முக்கிய அதிகாரியான அடோல்ப் ஈச்மன் லத்தீன் அமெரிக்க நாடு ஒன்றில் வைத்து கைது செய்யப் பட்டது ஆகும்.

பலம் வாய்ந்த உலக யூத காங்கிரஸ் ஹிட்லரின் சகாக்களின் பட்டியலைத் தயாரித்து வஞ்சம் தீர்த்து வருகிறது.

அதில் சிக்கிக் கொண்டவர் தான் தற்போதைய ஆஸ்திரிய ஜனாதிபதி குர்ட் வால்ட்ஹெய்ம்.

கொங்கோ உள்நாட்டு யுத்தத்தின்போது விமான விபத்தில் கொல்லப்பட்ட ஹமர்ஷீல்ட், மற்றும் ஊதாண்ட் ஆகியோரின் சாதனைகளுடன் ஒப்பிடுகையில் வால்ட்ஹெய்மின் சாதனைகள் சொற்பமே.

எனினும் அவரது பதவி அவரது தனிப்பட்ட செல்வாக்கை உள்நாட்டில் (ஆஸ்திரியாவில்) வளர்க்க உதவியது.

அதன் பலன்தான் அவரது தேர்தல் வெற்றி என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

தாம் நாஸி குற்றவாளி அல்லன் என்றும் வால்ட்ஹெய்ம் மறுத்துள்ளார்.

ஹிட்லரின் படையில் தான் லெப்டினன்டாக இருந்ததை மட்டுமே அவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

அப்பதவியில் இருந்தபோது தகவல் தூதுவனாகவும் மொழிபெயர்ப்பாளனாகவும் மட்டுமே தாம் கடமை ஆற்றியதாக வால்ட்ஹெய்ம் தெரிவிக்கிறார்.

1939 ஆம் ஆண்டு இரண்டாம் உலக மகா யுத்தம் மூளுவதற்கு ஒரு வருடத்திற்கு முன்—அதாவது 1938 ஆம்

## உலக உலா

என்.பி.சீலன்

டுக்களுமே இத்தேர்தல் உலகின் கவனத்தை ஈர்க்கக் காரணம் ஆகும்.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதும் இஸ்ரவேல் வருத்தமும் ஏமாற்றமும் தெரிவித்தது.

வால்ட்ஹெய்மின் பதவி ஏற்பு வைபவத்தில் கலந்து கொள்வதைத் தவிர்ப்பதற்காக ஆஸ்திரியாவில் உள்ள தனது தூதுவரை இஸ்ரவேல் திருப்பி அழைத்துக் கொண்டது.

எனினும் ஆஸ்திரியா-இஸ்ரவேல் ராஜீய உறவு துண்டிக்கப்படக் கூடிய அளவுக்கு இந்த விவகாரம் பாரதூரமாக்கப்படவில்லை.

**யூதர் படுகொலையின் பின்னணியில்**

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது ஜெர்மனியில் 60 லட்சம் யூதர்கள் ஹிட்லரின் நாஸிப்படைகளால்

ஆஸ்திரிய ஜனாதிபதித் தேர்தலில் தாம் போட்டியிடப் போவதாக வால்ட்ஹெய்ம் அறிவித்ததும் உலக யூத காங்கிரஸ் இவருக்கு எதிரான குற்றச் சாட்டுக்கள் அடங்கிய தஸ்தாவேஜுக்களை வெளியிட்டது.

இந்தக் குற்றச் சாட்டுக்கள் சர்வதேச அரங்கில் இவருக்கு இருந்த நன்மதிப்பை ஓரளவு குறைப்பதாக இருந்த போதிலும் இதனை ஆஸ்திரிய மக்கள் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை என்பதை தேர்தல் முடிவுகள் புலப்படுத்துகின்றன.

குர்ட் வால்ட்ஹெய்ம் ஐ. நா பொதுச்செயலாளராக இருந்த சமயம் பெரிதாக எதனையும் சாதிக்கவில்லை.

ஆண்டு ஆஸ்திரியா ஹிட்லரின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது.

1939 இல் உலக மகா யுத்தம் மூண்டதும் ஜெர்மனியுடன் சேர்ந்து போரிட ஆஸ்திரியர்களும் போர் முனைக்கு அழைக்கப்பட்டனர்.

அப்போது ஜெர்மன் இராணுவத்தில் சேர்ந்தவர் தான் இந்த வால்ட்ஹெய்ம்.

ஆனால் யூத ஒழிப்பில் பங்கு பற்றினார் என்ற குற்றச்சாட்டுக்கு எந்த வித ஆதாரமும் கிடையாது.

உலக யூத காங்கிரஸ் இதனை நிரூபிக்கத் தவறியிருந்தது. நிரூபித்து இருந்தாலும் கூட சொந்தநாட்டு மக்களின் ஆதரவு இருக்கும் வரை எந்த ஒரு நிர்ப்பந்தமும் பலன் அளிக்க மாட்டாது என்பதை கடந்த காலச் சம்பவங்கள் தெளிவுபடுத்துகின்றன.

## இன்று கலைவிழா

சாவகச்சேரி, ஜூன் 14

நுணுவில் மேற்கு அம்பாள் சனசமூக நிலைய பாலர் பாடசாலையின் கலைவிழா இன்று சனிக்கிழமை நடைபெற இருக்கிறது.

அறவழிப் போராட்டக் குழுவின் தலைவர் திரு. வி எஸ் துரைராசா பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

(உ - 31)

## வயாவிளானில் சிப்பாய்கள் நடமாட்டம்

பலாலி, ஜூன் 14

நேற்றுக் காலை 7. 30 மணியளவில் வயாவிளான் மத்திய மகாவித்தியாலய முகாமிலிருந்து வெளியேறிய சிப்பாய்கள் குடிமனைப் பகுதியை நோக்கிச் சென்றார்கள்.

திற்புலத்திற்கு வடமேற்குப் பகுதியில் உள்ள காம்பைக் கடவை என்ற இடத்தில் மூன்று பேரை அவர்கள் கைது செய்து தம்முடன் கொண்டு சென்றனர்.

மற்றொரு வீட்டிற்குச் சென்ற சிப்பாய்கள் அங்கிருந்த பெண் ஒருத்தியின் காதணிகளை பலவந்தமாககழற்றியதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வியாழனன்று நள்ளிரவு சிப்பாய்கள் முகாமை விட்டு வெளியே வர முயன்றதாகவும்—

போராளிகள் தாக்குதல் நடத்தியதைதொடுத்து அவர்கள் முகாமுக்குத் திரும்பி அங்கிருந்து ஷெல் தாக்குதலை மேற்கொண்டதாகவும் கூறப்படுகிறது.

(உ 119)

## உற்சவம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 14

மல்லாகம் சாளம்பை கதிர்வேல் முருகமூர்த்தி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை ஆரம்பமாகிறது.

25 6.86 திருவோண நட்சத்திரத்தில் தீர்த்த உற்சவத்துடன் விழா நிறைவுபெறும்.

(உ)

கரடியிடம் புலியைப் பற்றி சிங்கம் பேசுமா?

ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் ரஷ்ய விஜயம் பற்றி இப்படி கேட்கப்படுகிறது

எல்லா நாடுகளுக்கும் சென்று களைத்துப்போன நிலையில், மாத முடிவில் திரு. ஜெயவர்த்தனா ரஷ்யாவிற்குச் செல்ல இருக்கிறார்.

குண்டு வெடிப்பு, குண்டுப் புரளி, வடக்கு- கிழக்கு மாகாணங்களில் தமிழர் அவலம்.

இந்த நிலையில், ரஷ்யாவில் ஒன்றல்ல, இரண்டல்ல 12 தினங்களைக் கழிக்கவிருக்கின்றார் திரு ஜெயவர்த்தனா.

நாடு அமைதியான நிலையில் இருக்கும்போது தான் நாட்டுத் தலைவர்கள் உலக உலா செல்வர்.

நாடு எரியும்போது தலைவர்கள் வெளிநாடு செல்வார்களா?

ஆனால் திரு. ஜெயவர்த்தனா ரஷ்யாவுக்குச் செல்லத்தான் போகின்றார்

ஜெயவர்த்தனா அங்கு மேற்கொள்ளும் விஜயத்தின் முக்கியத்துவம் தெரிகின்றது.

சோவியத் ரஷ்யா, ஜெயவர்த்தனாவின் உள்ளத்தில் 'முக்கியத்துவம்' பெற்ற நாடு.

இல்லாவிடில் இலங்கை வானொலி தனது செய்தி அறிக்கையில் 'மார்க்ஸீய...' என்ற வார்த்தையுடன் செய்திகளை வாசிக்குமா?

மறந்தும் கூட 'மார்க்ஸீய...' என்ற சொற்றொடர் வானொலி, தொலைக்காட்சியில் விடுபடுவது இல்லையே ஒவ்வொரு செய்தி மடலிலும் அந்தச் சொல் இருக்கவே செய்யும் 'அந்த அளவு' மார்க்ஸீய சிந்தனையில் ஊறியவர், மார்க்ஸீயம் பிறந்த நாட்டுக்குச் செல்ல இருக்கின்றார்.

**ரஷ்யாவும் இந்தியாவும்**

ரஷ்யா, இந்தியாவின் முக்கிய நேச நாடு

பங்களாதேஷை உருவாக்கிய யுத்தத்திற்கு முன்னர் பாதுகாப்பு உடன்படிக்கை ஒன்றை ரஷ்யாவுடன் இந்தியா கைச்சாத்திட்டது.

அதன்பின்னர் தான்

# நாடு எரிகிறது; ஜனாதிபதி ரஷ்யா ஓடுவது ஏனோ?

## சுயநிர்ணய உரிமை படித்து வரப் போகிறாரோ!

பாகிஸ்தானுடன் மோதியது. அந்த உடன்படிக்கை இன்னும் அமுலில் உள்ளது.

அப்படிப்பட்ட இந்தியாவின் நேச நாட்டுக்கு ஜெயவர்த்தனா போக இருக்கின்றார்.

1983 ஜூலைக்குப் பின்னர் ஜெயவர்த்தனா உலக

**உள்ளமும் புறமும்**

குறுமுனி

நாடுகள் பலவற்றுக்குச் சென்று வந்தார்.

பாகிஸ்தான், சீனா, அமெரிக்கா, தென் கொரியா நாடுகளுக்கு எல்லாம் ஜெயவர்த்தனா சென்று வந்தார்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் வல்லரசு ஆக இந்தியா உருவெடுப்பதை விரும்பாத நாடுகள் இவை.

இந்த நாடுகளில் எல்லாம் ஜெயவர்த்தனா கேட்டவை ஆயுத உதவிகளைத்தான்.

**வட்டம் அமைக்கும் முயற்சி**

இந்தியாவுக்கு எதிராக ஒரு 'வட்டம்' அமைக்கத்தான் இந்த விஜயங்களை அவர் பயன்படுத்தினார்.

அந்த நாடுகளில் உள்ள அரசமைப்புச் சட்டங்களை ஜெயவர்த்தனா கேட்டிருந்தால், இனப்பிரச்சினைக்குத் தீர்வு சில சமயம் வந்திருக்கவும் கூடும்.

அந்த விஜயங்கள் எல்லாம் பலனளிக்காத நிலையில்தான் ஜெயவர்த்தனாவின் ரஷ்யப் பயணம் அமைகின்றது.

திரு ஜெயவர்த்தனா பிரதமராக இருக்கையில் நாடாளுமன்றத்திலே கூட்டணிச் செயலதிபர் திரு. அமிர்தலிங்கம் பேசினார்.

அப்போது பிரிந்து செல்லும் சுயநிர்ணய உரிமை பற்றி அமிர்தலிங்கம் பேசினார்.

**பிரிந்து செல்லும் உரிமை**

நான் அதைத் தர மாட்டேன் என்று எப்படி நீங்கள் நினைக்கலாம்?— இப்படி திரு ஜெயவர்த்தனா திருப்பிக் கேட்டார்.

பிரிந்து செல்லும் சுயநிர்ணய உரிமை வழங்கப்பட்ட சிறுபான்மை மக்கள் வசிக்கும் நாடு ரஷ்யா.

இனப்பிரச்சினை சிக்கல் கட்டத்துக்கு வந்துள்ள நேரத்தில் திரு. ஜெயவர்த்தனா ரஷ்யா செல்வது, கொழும்பு அரசு வட்டாரங்களில் பல கேள்விகளை எழுப்பியுள்ளன.

தமிழ்த் தீவிரவாதிகளை வெளியேற்றுமாறு இந்தியாவை வற்புறுத்தும்படி ரஷ்யாவை திரு ஜெயவர்த்தனா கோருவாரா?

அல்லது ரஷ்யாவின் சமஷ்டி அரசமைப்பைப் படித்து விட்டு வந்து இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காணுவாரா?

## நடக்க வேண்டிய முக்கிய சந்திப்பு!

சந்திப்பு— அடிக்கடி இடம்பெறும் சம்பவம் ஆகிவிட்டது.

உறவினர்கள் சந்திக்கின்றனர். நண்பர்கள் சந்திக்கின்றனர். அவை சுனேசபூர்வ சந்திப்புசின்.

போராளிகளும் சிப்பாய்களும் சந்தித்துக் கொள்கின்றனர், யுத்தக் களத்தில்.

தமிழரும் சந்திக்கின்றனர், மரணத்தை.

ஏனையோர் சந்திப்பு நேரம் குறித்துத்தான் நடைபெறும்.

தமிழர் மரணத்தைத் சந்திப்பதற்கு நேரம், காலம் குறிக்கத் தேவையில்லை.

எந்த நிமிடமும் இச் சந்திப்பு நிகழலாம்.

இப்பொழுதுதான் தென் இலங்கைச் சிங்கள மக்களும் இப்படியான 'சந்திப்பு'க்களின் 'அருமையை' உணரத் தொடங்கி இருக்கிறார்கள்.

இப்படியான 'சந்திப்புக்கள்' அதிகரிக்க, ராஜீய மட்டத்திலான சந்திப்புக்களும் அதிகரித்து வருகின்றன.

அந்த ராஜீயச் சந்திப்புக்கள் பற்றி இப்பொழுது சிறிது சிந்திப்போமா?

மூன்று தினங்களில் நான்கு தடவை இந்தியத் தூதர் டிக்ஸிற் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச் சந்தித்துப் பேசினார். இடையிலே திரு. டிக்ஸிற் அமைச்சர்கள் லலித் அத்துலத்முதலி, காமினி திஸநாயக்காவையும் சந்தித்தார்

இப்படியான ராஜீயச் சந்திப்புக்கள் கொழும்பில் தொடர்ந்து இடம்பெற்று வரும் சூழ்நிலையில்,

'ரொயின் பீ' பரிசு பெற்ற பேராசிரியர் ரால்ப் புல்ஜின்ஸ்ரும் ஒரு சந்திப்புப் பற்றிப் பேசி இருக்கின்றார். உச்சிமாநாடு ஒன்றில் ராஜீவும் ஜெயவர்த்தனாவும் மீண்டும் சந்திக்க வேண்டுமாம்

சந்திப்புக்களும் தொடர்கின்றன; தமிழனின் கதையும் தொடர் கதைதானே!

# 19 தமிழ் அகதிகள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னர்

அவர்களில் 23 தமிழ் அகதிகள் கடந்த வியாழக்கிழமை பகல் 14 மாட்டு வண்டில்களில் அலிஒலுவ உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்துக்குச் சென்றனர்.

ஒரு முஸ்லிம் கிராம சேவையாளரும் ஒரு முஸ்லிம் பயிர்ச் செய்கை உத்தியோகத்தரும் அகதிகளுடன் சென்றிருந்தனர்.

மொத்தமாக 25 பேர் அகதிகளுக்கான உணவுப் பொருள்களை சேருவில கூட்டுறவுச் சங்கத்தில் பெற்றுக்கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தனர்

மஹிந்தபுர என்னும் இடத்தில் வைத்து பெனியனும் காற்சட்டையும் அணிந்தவர்கள் மாட்டு வண்டில்களை மறித்தனர். அவர்களின் கைகளில் துப்பாக்கிகள் இருந்தன.

வண்டில்களில் இருந்து இறங்கியவர்களை கைகளை தலைக்கு மேலே உயர்த்திக்கொண்டு காட்டுக்குள் போகும்படி பணித்தனர்.

காட்டுக்குள் போனதும் அகதிகளை கைகளை உயர்த்திய வண்ணம் கீழே இருக்கும்படி பணித்தனராம்.

அகதிகள் கீழே இருந்ததும் அவர்கள் மீது சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாம்.

இதில் 21பேர் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களில் 19 பேர் தமிழர், 2பேர் முஸ்லிம்கள்.

இரண்டு தமிழர் காயங்களுடன் உயிர் தப்பி வியாழன் இரவு வாழைச்சேனை ஆஸ்பத்திரிக்குச் சென்றனர். பின்னர் அங்கிருந்து மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

மற்ற 2 பேர் காயமின்றி உயிர் தப்பினர்.

இறந்தவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:

1. ஆ. தங்கராசா, ஈச்சிலம்பத்தை கிராம சேவகர்.
2. அலிபுஹான், நாவற்சேனை கிராமசேவகர்.
3. அப்துல் லப்தீப்,தெஹி வத்தை பயிர்ச்செய்கை அதிகாரி
4. க. கிருஷ்ணபிள்ளை, பூநகர் கூட்டுறவுச் சங்க முகாமையாளர்.
5. க.மகேஸ்வரன், வெருகல்-முகத்துவாரம் கூட்டுறவுச் சங்க முகாமையாளர்.
6. கா. தங்கராசா
7. வீ. நடேசபிள்ளை
8. பெ நவரத்தினம்
9. மு. வேலுப்பிள்ளை
10. இ தம்பிப்பிள்ளை
11. இ. சிவலிங்கம்
12. வ. சித்திரவேலு
13. பொ. கந்தசாமி
14. கோ. வேலாயுதம்
15. க. விநாயகமூர்த்தி
16. க. செல்லத்தம்பி
17. மு. காளிராசா
18. ந பரமேஸ்வர-நாதன்
19. த. கனகசுந்தரம்
20. மூ. காசிப்பிள்ளை
21. க. நவரத்தினம்

காயங்களுடன் உயிர் தப்பியோர்:

1. வீ. சோமசுந்தரம்
2. கு. கணேசமூர்த்தி

காயமின்றி உயிர் தப்பியோர்:

1. இ. நாகராசா
2. பூ. பாலசிங்கம்

(அ-உ-எ-2-21)

# மர்மமான முறையில் மூவர் வெட்டிக்கொலை

## பின்னர் தீமூட்டி எரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 14

மல்லாகத்தில் மர்மமான முறையில் மூவர் வெட்டிக் கொலை செய்யப்பட்ட பின்னர் எரிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் ஒருவர் மயிரிழையில் உயிர் தப்பினார்.

இச் சம்பவம் வியாழன் நள்ளிரவு பன்னிரண்டு மணியளவில் மல்லாகம் நரியிட்டான் என்னும் இடத்தில் நடந்தது.

அன்றிரவு நரியிட்டான் என்னும் இடத்தில் உள்ள நான்கு வீடுகளுக்குச் சென்ற இனந்தெரியாத கோஷ்டி ஒன்று அந்த வீடுகளில் இருந்த நால்வரை அழைத்து விசாரணை செய்யப்போவதாக கூறி கூட்டிச் சென்றதாம்.

வீடுகளுக்கு வந்தவர்களில் சிலர் கையில் வாள் போன்ற ஆயுதம் வைத்திருந்ததாகச் சொல்லப்படுகிறது.

பின்னர் 12.30 மணி அளவில் நரியிட்டான் வயல் பக்கமாகப் பெரும் தீச் சுவாலை எழுந்ததை யடுத்து அங்கு சென்ற பொதுமக்கள் மூட்டப்பட்டிருந்த தீயை அணைத்தனர்.

அங்கு தீயில் கருகி மூன்று பேர் உயிரிழந்தனர். மயிரிழையில் காப்பாற்றப்பட்ட ஒருவர் பின்னர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

மரணமானவர்கள் சுப்பிரமணியம் (60 வயது), கனகசபை (60 வயது) சினி - அந்தோனி (45 வயது) என்று சொல்லப்படுகிறது. (உ - 10)

**கணக்கியல் பயிற்சிநெறிகள் ஆரம்பமாகிவிட்டன!**

London Exams Classes

NOV. / DEC. 1986

| | | |
|---|---|---|
| A A.T. | — | Prelim<br>Inter |
| I C.M.A | — | Found - A<br>Found - B |

திங்கள் முதல் ஆரம்பம்

| | | |
|---|---|---|
| I.D-P.M: | — | Part I<br>Part II |
| I.A.B. | — | முழுப் பிரிவுகளும் |

**North Ceylon Technical Institute**

14, ST. PETERS LANE, JAFFNA:

T'Phone: 24355

# குடாநாட்டை நண்டுப் பிடிக்குள் கொண்டுவர எடுத்த முயற்சியை போராளிகள் முறியடித்தனர்

கொழும்பு, ஜூன் 14

யாழ் குடாநாட்டைத் திடீரென நண்டுப் பிடிக்குள் கொண்டுவர ஆயுதப் படையினர் போட்டு

## புரொன்ட் லைன் மதிப்பீடு

இருந்த திட்டம் உயர்ந்த உந்து சக்தியுடன் கூடிய போராளிகளின் எதிர்த் தாக்குதலினால் முறியடிக் கப்பட்டது.

யாழ்ப்பாணக் குடா நாட்டில் மே 17இல் ஆரம்பமான இராணுவ நடவடிக்கைகளை தமிழீழ விடுதலைப் புலிகள் தீவிரமாகத் தடுத்து வெற்றி கண்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் எதிர்த் தாக்குதலுக்குத் தாக்குப் பிடிக்காமல் மூன்று நாள் சண்டையின் பின்னர் இலங்கை அரசபடைகள் பின் வாங்க வேண்டியதாயிற்று.

இந்தியாவின் பிரபல ஆங்கில சஞ்சிகையான 'புரொன்ட்லைன்' மேற்கண்டவாறு எழுதி உள்ளது.

பிரபல பத்திரிகையாளரான மாலினி பார்த்தசாரதி, 'இராணுவ அரசியல் ரீதியான விபத்து' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் மேற்கண்ட

## தாக்குதலுக்கு புலிகளே தலைமை

வாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

யாழ் குடாநாட்டைத் திடீரென்று நண்டுப்பிடிக்குள் கொண்டு வருவது என்று ஆயுதப் படையினர் போட்டு இருந்த திட்டம், உயர்ந்த உந்து சக்தியுடன் கூடிய போராளிகளின் எதிர்த் தாக்குதலினால் முறியடிக்கப்பட்டது. இந்த எதிர்த்தாக்குதலுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமே தமிழ் ஈழ இராணுவத்தைச் சேர்த்துத் தலைமை வகித்தது. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் சிறிய அளவில் இதில் பங்குபற்றியது.

இப்படி அக் கட்டுரையில் எழுதப்பட்டிருக்கிறது.

(உ - எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 14—6—1986

Printed and Published by Uthayan Publications (Private) Ltd 15, Second Lane, Power House Road JAFFNA.